கல்கி



KALKI ஆகஸ்ட் 30, 1953

4 அணா


உங்கள்
குழந்தைகள்
கிப்ஸ் உபயோகிக்கிறார்களா?
கிப்ஸ் உபயோகிக்கும் குழந்தைகள் அதன் ருசியை விரும்புகிறார்கள் —
மகிழ்ச்சி தரும் மணத்தை ரசிக்கிறார்கள்!
பெற்றோர்கள் அதன் விலையை விரும்புகிறார்கள் —
அது மிகவும் குறைந்த விலையில் கிடைக்கிறது.
அழகான
நீலம்,
சிவப்பு,
பச்சை
டப்பிகளில்
எல்லோரும் கிப்ஸ் தரும் வெண்மையை மெச்சுகிறார்கள் —
அது பற்களை வெண்மையாக சுத்தம் செய்கிறது, ஈறுகளை ஆரோக்கியமாக வைத்திருக்கிறது!
கிப்ஸ் டென்டிபிரிஸ்
Gibbs
பற்களுக்கு சீரிய குணமளிக்கிறது—குறைந்த செலவில்!
G.D. 3e-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 5 | 1953 ஆகஸ்டு 30 | விஜய ஆவணி 14உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 13

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 5

நல்லெண்ணத்தை நிரூபித்தனர்

இவ்வாரம் சென்னைக்கு விஜயம் செய்த இலங்கை உணவு மந்திரி ஸ்ரீ ஆலிவர் குணதிலகா இந்தியர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒரு விஷயத்தைக் கூறினார்.

இலங்கை - இந்தியா பிரச்னை சுமுகமாகத் தீருவதற்கான சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது என்ற நற்செய்தியை அவர் அறிவித்தார்.

சென்ற பத்து வருஷங்களில் ஒரு போதும் இத்தகைய திருப்திகரமான நிலைமை ஏற்பட்டதில்லை என்றும் ஸ்ரீ ஆலிவர் குணதிலகா குறிப்பிட்டார்.

அவர் அவ்விதம் கூறியது முற்றிலும் சரி என்று முத்திரை வைப்பதுபோல் நாலு ஐந்து தினங்களுக்கு முன் இலங்கையிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

இந்தியா - இலங்கை சமரசப் பேச்சு வார்த்தைகள் மறுபடியும் ஆரம்பமாகும் என்ற சந்தோஷச் செய்தியைப் பிரதமர் டட்லி சேனநாயகா இலங்கைப் பார்லிமெண்டில் அறிவித்தார்.

ஆசியாவில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கும் இந்தியாவுடன் நெருங்கிய நட்பும் சுமுகமான உறவும் இருக்க வேண்டிய அவசியத்தை இலங்கை சர்க்கார் உணர்ந்திருப்பதாக இலங்கைப் பிரதமர் தெரிவித்தார்; கூடிய சீக்கிரம் இந்தியாவுடன் ஓர் உடன்பாடு செய்து கொள்ள உத்தேசித்திருப்பதாகவும் கூறினார்.

பிரஜா உரிமை கோரி இலங்கை இந்தியர்கள் சர்க்காரிடம் சமர்ப்பித்துள்ள மனுக்கள் ஆமை வேகத்தில் பைசல் செய்யப்பட்டு வருகின்றன என்பது அங்குள்ள இந்தியர்களின் புகார் ஆகும்.

அந்தப் புகார் நியாயமானது என்பதை இலங்கைப் பிரதம மந்திரியே ஒப்புக் கொண்டிருப்பது அவரது நேர்மையையே காட்டுகிறது.

பிரஜைப் பதிவு இலாகாவில் போதிய சிப்பந்திகள் இல்லாததாலேயே, மனுக்களைத் துரிதமாகப் பைசல் செய்ய முடியவில்லை என்று ஸ்ரீ டட்லி சேன நாயகா பார்லிமெண்டில் ஒப்புக் கொண்டார்.

இலங்கையில் உள்ள ஒன்பதரை லட்சம் இந்தியர்களில் நாலு லட்சம் பேருக்கு யாதொரு ஆட்சேபணையுமின்றிப் பிரஜா உரிமை அளிக்கப்படும் என்பதை இலங்கை சர்க்காரே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும், பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேறிப் பல மாதங்களாகியும் சில ஆயிரக்கணக்கான இந்தியர்களின் மனுக்களே பைசல் செய்யப் பட்டிருக்கின்றன.

இதே வேகத்தில் காரியம் நடந்து கொண்டிருந்தால், மேற்படி நாலு லட்சம் பேர்கள் பிரஜா உரிமை பெறுவதற்கே எத்தனையோ வருஷங்களாகி விடும் என்று இலங்கை இந்தியர்கள் கலங்குவது இயல்பே.

ஆனால், இனி அவர்கள் அவ்விதம் கலங்க வேண்டிய அவசியம் இல்லை என்பது இலங்கைப் பிரதமரின் வார்த்தைகளிலிருந்து தெரிகிறது.

''இன்னும் இரண்டு வருஷ காலத்துக்குள் பாக்கியுள்ள இந்தியர்களின் பிரஜா உரிமை மனுக்கள் நிச்சயமாகப் பைசலாகி விடும்.''

ஸ்ரீ டட்லி சேன நாயகாவின் மேற்படி வார்த்தைகள், பிரஜா உரிமை பெறுவதற்காக ஏங்கிக் கிடக்கும் லட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிக்கும்.

• • • •

இலங்கை வாழ் இந்தியர்கள் இலங்கை சர்க்கார் விஷயத்தில் தங்களுக்கு உள்ள நல்லெண்ணத்தையும் விசுவாசத்தையும் இதற்கு முன் எத்தனையோ தடவைகளில் காட்டி யிருக்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன் இலங்கை சர்க்காருக்கு ஏற்பட்ட சோதனையின்போது சர்க்கார் மீது இலங்கை இந்தியர்களுக்கு உள்ள விசுவாசமும் நல்லெண்ணமும் சந்தேகத்துக்கு இடமின்றி மறுபடியும் நிரூபணமாயின.

எலியும் பூனையும்!



கிழக்கு ஜெர்மனிக்குப் பல சலுகைகள் வழங்கி யிருப்பதாக ரஷ்யா அறிவித்திருக்கிறது.

இலங்கை அரசாங்கம் அரிசி விலையை உயர்த்தியதை ஆட்சேபித்து, இம்மாதம் பன்னிரண்டாம் தேதி இலங்கை இடதுசாரிக் கட்சிகள் வேலை நிறுத்தம் செய்தன.

அன்று இலங்கையில் பல நகரங்களில் நிலைமை அல்லோல கல்லோலமாகியது.

அதனால் ரயில்வே, தபால் இலாகாக்களுக்கும் தனிப்பட்டவர்களுடைய சொத்துக்களுக்கும் அபரிமிதமான சேதம் ஏற்பட்டது.

ஒரு மாத காலத்துக்கு இலங்கை சர்க்கார் பல இடங்களில் அவசர காலச் சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்தனர்.

இலங்கையில் அத்தகைய கொந்தளிப்பான நிலைமை சென்ற நூறு வருஷங்களில் ஒரு போதும் ஏற்பட்டதில்லை என்று கூறப்படுகிறது.

மேற்படி நெருக்கடியான நிலைமையைச் சமாளிப்பதற்கு இலங்கை அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படியும் நேர்ந்தது.

அரிசி விலை உயர்வை இலங்கை இந்தியர் காங்கிரசும் இந்திய வர்த்தகச் சங்கமும் கண்டித்தன.

ஆனால் அவைகள் ஹர்த்தாலில் கலந்துகொண்டு இலங்கை சர்க்காருக்குக் கஷ்ட நஷ்டங்களை உண்டாக்க விரும்பவில்லை.

இலங்கைப் பிரஜா உரிமை பெற முடியாமல் தவித்து வரும் ஏழு லட்சம் இந்தியர் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அன்று ஹர்த்தாலில் கலந்து கொண்டிருந்தால், இலங்கை சர்க்கார் சமாளிக்க முடியாத சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும்.

எனவே இலங்கை இந்தியத் தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாததன் மூலம் இலங்கை சர்க்காருக்குப் பேருதவி செய்தனர் என்றே கூற வேண்டும்.

ஒரு வேளை மேற்படி சம்பவம் இலங்கை சர்க்காரின் கண்களைத் திறந்திருக்கலாம்.

பிரஜா உரிமை கோரும் இலங்கை இந்தியர்கள் அவ்வுரிமை பெறுவதற்கு எவ்விதத்திலும் தகுதி வாய்ந்தவர்கள் என்று இலங்கை சர்க்கார் உணர்ந்து கொண்டிருக்கலாம்.

அதன் பலனாக, ஸ்ரீ டட்லி சேனநாயகா இந்தியர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய மேற்படி அறிக்கையைப் பார்லிமெண்டில் விடுத்திருக்கலாம்.

போனவர் திரும்பினார்!

ஒரு சமயம் மன்னருக்கும் பிரதம மந்திரிக்கும் தகராறு ஏற்பட்டது.

"பிரஜைகள் என்னைப் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எனவே, தங்களைக் காட்டிலும் எனக்குத்தான் அதிகாரமும் செல்வாக்கும் அதிகம். மனம் வைத்தால் தங்களைக்கூட மன்னர் பதவியிலிருந்து வீழ்த்திவிட என்னால் முடியும்" என்று சவால் விடுத்தார் பிரதம மந்திரி.

மன்னரோ வெளியில் பிரதம மந்திரியைக் காட்டிலும் தந்திரசாலி.

"மன்னர் பதவியிலிருந்து என்னைத் தாங்கள் வீழ்த்து முன், நானே அப்பதவியை ராஜிநாமா செய்து விடுவேன். உடனே பொது மக்களிடம் சென்று என் கட்சிக்கு வோட்டுக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்வேன். அதன் விளைவாகத் தாங்கள்தான் பிரதம மந்திரி பதவியை இழக்கும்படி நேரும்" என்று பதில் அளித்தார் மன்னர்.

இந்தப் பதிலைக் கேட்டதும் பிரதம மந்திரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் பொது ஜனங்களின் அபிமானத்தையும் ஆதரவையும் நாடும் மன்னரிடம் தமது பாச்சா பலிக்காது என்பது அவருக்குத் தெரியும். எனவே, மன்னர் பிரதம மந்திரியைச் சமாதானம் செய்வதற்கு மாறாக, அவ்வாறு ஏதாவது செய்து விடாமல் இருக்கும்படி மன்னரைப் பிரதம மந்திரி வேண்டிக் கொள்ளுமாறு நேர்ந்தது!

இதுவரையில் உலக சரித்திரத்திலே எத்தனை எத்தனையோ மன்னர்கள் ராஜ்யத்தைத் துறந்து வெளிநாடுகளுக்குச் சென்றது உண்டு. அவர்கள் அவ்விதம் தங்கள் நாட்டை விட்டு வெளியேறியது வெளியேறியதுதான்! பிறகு அவர்கள் மறுபடியும் தங்களுடைய நாட்டுக்குத் திரும்பி வரும்படியான சூழ்நிலை ஏற்பட்டதே இல்லை. பிரபல தலைவர்களின் ஆதரவு காரணமாகத் திரும்பி வந்த இரண்டொரு மன்னர்கள் பேராத்திரம் கொண்ட பொதுஜனங்களால் விரட்டப்பட்டு விட்டனர்.

ஆனால் ஈரான் பிரதம மந்திரி மூஸாதிக்கை எதிர்த்த காரணத்தினால் நாட்டை விட்டு வெளியேறும்படி நேர்ந்த ஈரான் ஷா, ஒரு வாரத்துக்குள் மீண்டும் திரும்பி வந்து மன்னர் பதவியை ஏற்றுக்கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டது. இது உலக அரசியல் அதிசயங்களில் ஒன்றுதான்.

ஷாவின் வெளியேற்றத்துக்குக் காரணமாக இருந்த மூஸாதிக் இப்போது சிறைப்பட்டுள்ளார். ஷாவை ஆதரிக்கும் ஜெனரல் ஜாஹிதி ஈரான் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

* * *

ஈரான் ஷா சென்ற வாரம் இத்தாலியில் அடைக்கலம் புகுந்தபோது அவரைப் பத்திரிகைப் பிரதிநிதி ஒரு கேள்வி கேட்டார்.

"கிரீடம் உள்பட அரண்மனை நகைகளையெல்லாம் தங்களுடன் எடுத்துக் கொண்டு வந்து விட்டீர்களா?" என்பதுதான் மேற்படி கேள்வி.

"அரண்மனை நகைகள் எனக்குச் சொந்தமானவையல்ல. அவை தேச மக்களின் சொத்தாகும். எனக்குச் சொந்தமான சகலவற்றையும் நான் தேசத்துக்கே அர்ப்பணம் செய்துள்ளேன்" என்று ஈரான் ஷா பதில் கூறினார்.

ஏற்கெனவே ஈரான் மன்னர் தமது நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்ததாகச் செய்திகள் வந்தது நினைவிருக்கலாம்.

பொது ஜனங்கள் தம்மை விரும்பவில்லையெனில், தாம் நாட்டை விட்டு வெளியேறத் தயாராக இருப்பதாகவும் அவர் சில மாதங்களுக்கு முன் பிரகடனம் செய்தார்.

இதையெல்லாம் கவனிக்கும்போது, ஈரான் மன்னர் திரும்பி வருவதற்குப் பொது ஜன ஆதரவும் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அத்துடன் மூஸாதிக்கிற்கு எதிரான சக்திகளும் ஷாவுக்குச் சாதகமாக வேலை செய்ததால், அவர் ஒரே வாரத்தில் திரும்பி வருவது சாத்தியமாயிற்று.

அடிப்படையான கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் மூஸாதிக்கிற்கும் ஈரான் மன்னருக்கும் வேற்றுமை எதுவும் இல்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

ஈரான் எண்ணெய் உரிமையில் பிரிட்டிஷாருக்கு இனி பங்கு இல்லை என்று மூஸாதிக் வற்புறுத்தி வந்தார். அதே கொள்கையையே, திரும்பி வந்துள்ள ஷாவும் வலியுறுத்தியிருக்கிறார்.

எனவே, ஈரான் நாட்டில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியின் இறுதி முடிவு எப்படியாயினும், அங்கு பிரிட்டிஷார் இழந்த எண்ணெய் எடுக்கும் உரிமை இனி அவர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை என்பது மாத்திரம் சந்தேகத்துக்கு இடமின்றி நிச்சயமாகி விட்டது.

இங்கேயும் அந்த அதிசயம்!

சென்ற "கல்கி" இதழில் வெளியான "கவர்னரின் மகன் கூலிவேலை செய்கிறான்" என்னும் கட்டுரையைக் குறித்துப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. சாதகமாகவும் வந்திருக்கின்றன; பாதகமாகவும் வந்திருக்கின்றன. "அமெரிக்காவில் அதெல்லாம் சரிதான்! இங்கே ஒழிந்த நேர வேலை எங்கே கிடைக்கிறது! கிடைத்தாலும் கூலி கிடைக்குமா?" என்னும் தோரணையில் சிலர் எழுதியிருக்கிறார்கள். வேலை கிடைக்குமா, கூலி கிடைக்குமா என்னும் கேள்விகளைக் காட்டிலும், வேலை செய்ய மனம் இருக்கிறதா என்பதுதான் முக்கியமான கேள்வி. மனம் இருந்தால் வழியும் பிறக்கும் என்பதற்கு அத்தாட்சியாகப் பின்வரும் கடிதத்தை மிக்க குதூகலத்துடன் வெளியிடுகிறோம்:—

இந்த வார "கல்கி"யில் தாங்கள் எழுதியுள்ள "கவர்னரின் மகன் கூலிவேலை செய்கிறான்" என்ற நாட்டுக்குத் தேவையானதும் சோர்வடைந்த வாலிப உள்ளங்களைத் தட்டி யெழுப்பக் கூடியதுமான கட்டுரையை வாசித்தேன்.

ஜிம் வாரன் என்ற அமெரிக்கக் கல்லூரி மாணவனுடைய உழைப்பைப் பற்றிய குறிப்பு என் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது.

அமெரிக்கர் மட்டுமல்ல; இந்தியர்களும் தன்மானத்தோடு உழைத்து நேர்மையான வாழ்க்கை வாழப் பிறந்தவர்கள்தான். அமெரிக்கக் கல்லூரி மாணவனுக்கு, இந்தியக் கல்லூரி மாணவன் உழைப்பில் தாழ்ந்தவனல்ல என்று தலைநிமிர்ந்து கூறுகிறேன். அதற்கு நானே உதாரணம்.

நான் ஒரு கவர்னரின் மகனோ, அன்றி கலெக்டரின் மகனோ அல்ல. ஒரு உபாத்தியாயரின் மகன். என் தந்தை முதலில் ஓர் செகண்டரி கிரேடு உபாத்தியாயராகத்தான் இருந்தார். ஆனால் சுய உழைப்பாலும், சொந்த முயற்சியாலும் இண்டர், பி. ஏ. பி. டி. ஆகிய பரீட்சைகளில் தேறி, இன்று, இவ்வூர் போதனா முறைப் பள்ளியில் உபாத்தியாயராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். என் தாயார் ஒரு செகண்டரி கிரேடு உபாத்தியாயினி. எனக்கு ஒரு சகோதரனும், ஆறு சகோதரிகளும் உள்ளனர். அவர்கள் எல்லோரும் படித்துக்கொண்டிருக்கின்றனர். ஆதலால் எனக்காகும் படிப்புச் செலவை நானே சம்பாதித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் 1944-ம் வருஷத்திலேயே ஏற்பட்டு விட்டது.

நான் ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த போது அதாவது நான் ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்தபோது, இங்குள்ள அமெரிக்கன் மிஷனரி ஒருவரிடம் தபால் எடுத்துக்கொடுக்கும் வேலையைச் செய்து மாதம் ரூ. 6 சம்பாதித்தேன். அதைக் கொண்டு எனக்கு வேண்டிய புத்தகங்கள், பேனா ஆகியவற்றை வாங்கிக் கொண்டேன். இந் நிலை நான் எட்டாம் வகுப்புத் தேறும் வரை நீடித்தது. நான்காம் படிவத்தில் நான் படித்துக் கொண்டிருந்த போது, பசுமலையிலுள்ள முட்களை வெட்டி மணிக்கு மூன்றணாச் சம்பாதித்தேன். அப்போது, ஒவ்வொரு நாளும் மாலையில் இரண்டு மணி நேரம் முள் வெட்டுவேன். மீதி நேரம் கலாசாலையில் படிப்பேன். மாலை வேளையில் முள்வெட்டி வேலை செய்வது எனக்கு ஈடில்லா இன்பத்தை அள்ளிச் சொரிந்தது.

ஐந்தாம் படிவம் படித்தபோது குழிகள் வெட்டினேன். ஒரு குழிக்கு ரூ. 1-2-0 வீதம் அந்த அமெரிக்கன் மிஷனரி எனக்குச் சம்பளமாகக்

யார் சாரதி?



ஆந்திரத் தலைவர்களுக்குள் யார் அதிகாரத்தை ஏற்று நடத்துவது என்பது குறித்து இதுவரை எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை!

கொடுத்தார். பள்ளி ஆரம்பமானவுடன் எனக்குப் பணம் தேவைப் பட்டது. ஆதலால், விடுமுறை நாட்களில் தினசரி மூன்று குழிகள் வெட்டி ரூ. 3-6-0 சம்பாதித்தேன். உழைப்புக் கேற்ற ஊதியத்தை நான் பெற்றபோது என் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. ஆண்டவனை மனதாரத் துதித்தேன். எஸ். எஸ். எல். ஸி. நான் படித்துக் கொண்டிருந்த போது, திரு லார் பீருடைய (அவர்தான் அந்த அமெரிக்கன் மிஷனரி) தபால் களை மதுரைக்கு எடுத்துச் சென்றும், அவருடைய தோட்டத்திலுள்ள செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றியும், மாதம் ரூ. 10 சம்பாதித்தேன். அத் தொகையைக் கொண்டுதான் என் பள்ளிச் சம்பளம் கட்டினேன்; சர்க்கார் பரீட்சைக்குப் பணம் கட்டினேன்; புத்தகங்கள் வாங்கினேன்.

எஸ். எஸ். எல். ஸி. தேறியதும், நான் மதுரைக் கல்லூரியில் சேர்ந்தேன். கல்லூரிச் சம்பளத்தை மட்டும் என் தந்தை கட்டினார். புத்தகங்களும், கோட்டுக்களும் ரூ. 60-க்கு வாங்க வேண்டியிருந்தது. அவற்றிற்கு என் தந்தையின் கையை எதிர்பார்க்க எனக்கு விருப்பமில்லை. உள்ளத்திலே உறுதியும், உடலிலே வலுவும் இருக்கும் போது பெற்றோரை ஏன் துன்புறுத்த வேண்டும் என்று சிந்தித்தேன். உடனே திரு லார் பீரிடம் சென்றேன்.

அவரைச் சந்திக்கு முன் எனக்கும் என் நண்பரொருவருக்கு மிடையே நிகழ்ந்த சம்பாஷணையை என்னால் இங்கு கூறாமலிருக்க முடியவில்லை.

என் நண்பர், "விசுவாசம்! நீ, எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணும் வரைக்குத் தான் கூலிவேலை செய்தாய்! காலேஜுக்குப் போன பின்புமா கூலிவேலை செய்யப் போகிறாய்! சீ, சீ, அது சுயமரியாதையைப் பாதிக்குமே!" என்றார்.

அதற்கு மறுமொழியாக, "அட்டைப் பூச்சி இரத்தத்தை உறிவதைப்போலத் தந்தையிடம் பணத்தை வாங்கிச் சோம்பேறி வாழ்க்கை நடத்துவது சுயமரியாதையைப் பாதிக்குமா! அல்லது தன் கையே தனக்குதவி என்று தன்மானத்தோடு உழைத்துச் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது சுயமரியாதையைப் பாதிக்குமா!" என்றேன்—நண்பர் முகத்தில் ஈயாடவில்லை.

நான் திரு லார் பீரைச் சந்தித்து வேலை கேட்டேன். அவர் என்னிடம், "சாந்தி! நான் கல்லூரியில் படிக்கும் யாருக்கும் உதவி செய்வது கிடையாது. இருந்தாலும், நீ என்னிடம் ஏறக்குறைய ஏழு வருடங்கள் உண்மையாக வேலை செய்திருப்பதால் இன்னும் இரண்டு வருடங்களுக்கு மட்டும் உதவி செய்கிறேன்" என்று கூறினார். எனக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. அவருடைய காரைத் துடைத்துக் கழுவும் வேலையை மேற் கொண்டேன். அதற்காக எனக்கு மாதம் ரூ. 10-0-0 சம்பளமாகக் கிடைத்தது. அத் தொகையைக் கொண்டு புத்தகங்கள் வாங்கினேன். பல்—சார்ஜ் கொடுத்தேன்; யுனிவர்ஸிட்டி பரீட்சைக்குப் பணம் கட்டினேன். அதிகாலை 5-30 மணியிலிருந்து 7-30 மணி வரை என் வேலையைச் செய்வேன். பின்புதான் படிப்பதெல்லாம். எக்காரணத்தைக் கொண்டும், நான் வேலைக்குச் செல்லாமலிருந்ததில்லை. இவ்வாறாக, இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்த இரண்டு வருடங்களிலும், ஓய்ந்த நேரங்களில் உழைத்துச் சம்பாதித்து, என் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டேன். பரீட்சையிலும் தேறினேன்.

இந்த வருடம் பி. ஏ. முதல் வகுப்பில் அதே கல்லூரியில் சேர்ந்திருக்கிறேன். கல்லூரி மாணவர்களுக்கு ஒய்ந்த வேளையில் வேலை கொடுக்கத்

தயாராயிருக்கும் புண்யாத்மாக்கள் வேறு யாரும் இருக்கின்றனரா என்று சல்லடை போட்டுச் சலிக்கிறேன்; ஆனால் பலன்தான் பூஜ்யம். எந்த வேலையையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன். என்னைப் பொறுத்த மட்டில் தொழில்களில் இழிவானதொன்றும் இல்லை. மண் வெட்டி பிடிக்கவும் தயார்; பேனா பிடிக்கவும் தயார். ஆனால் வேலை கொடுப்பார்தான் இல்லை. காலை 4-30 மணி முதல் 7-30 வரை தினசரி செய்தித் தாள்கள் விற்கும் வேலைக்காக எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் பலன் கிடைக்கவில்லை. கல்லூரிப் படிப்புக்காகப் பெற்றோரைத் தொந்தரவு செய்யவும் எனக்குப் பிடிக்கவில்லை. இத்தனை வருடங்களும் வேலை செய்துவிட்டு இப்போது சும்மா இருப்பதும் பிடிக்கவில்லை.

எனக்கு வயது பதினெட்டே ஆவதால் இரு வருடங்கள் வேலை செய்து சம்பாதித்துப் பின் கல்லூரியில் சேர்ந்து படித்து பி. ஏ. பட்டம் பெறுவதில் தவறொன்றுமில்லையல்லவா!

பசுமலை
24—8—53 காந்தி எஸ். விசுவாசம்

[நமது பெயரில் காந்தியின் பெயரையும் சேர்த்துக் கொண்டிருக்கும் இந்த மாணவரின் வாழ்க்கை இந் நாட்டு இளைஞர்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது. அமெரிக்கப் பாதிரியார் ஸ்ரீ லாயிட் லார் பீர் இவருடைய வேலையை மெச்சிக் கொடுத்த அத்தாட்சிகளையும் மேற்படி கடிதத்துடன் அனுப்பியிருக்கிறார். பி. ஏ. வகுப்பில் படிக்கும்போதும் ஒழிந்த நேரத்தில் வேலை செய்து சம்பாதிக்க வேண்டும் என்னும் இவருடைய மனோரதம் நிறைவேற வேண்டும் என்று விரும்புகிறோம்.]

புது டில்லியில் தமிழர் முழக்கம்

மகா கவி பாரதியார் "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!" என்று பாடியபோது, புது டில்லி நகரின் வீதிகளையும் மனத்தில் வைத்துக் கொண்டு பாடினரா என்று நமக்குத் தெரியாது. ஆயினும் நானது ஆகஸ்டு மாதத்தின் இறுதியில் புது டில்லி வீதிகளில் தமிழ் முழக்கம் கேட்பதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் நடைபெற்று வருவது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் பெருமிதம் அடையலாம்.

ஆண்டு தோறும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெறும் தமிழ்த் திருவிழா இவ்வருஷம் ஆகஸ்டு 29, 30, 31 தேதிகளில் புது டில்லியில் பெரு விழாவாக நடைபெறப் போகிறது.

இவ்வாறு சுதந்திர பாரத நாட்டின் தலைநகரில் தமிழ் விழா நடைபெறுவதற்குக் காரணமானவர், பிரசித்த விஞ்ஞானியும் தமிழன்பருமான டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள். டாக்டர் கிருஷ்ணனின் அழைப்பின் காரணமாகவே இவ்வாண்டு தமிழ் விழாவைப் புது டில்லியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பயனாக நம் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத் அவர்களே தமிழ் விழாவைத் திறந்து வைக்கும்படியான சிறப்பும் கிடைத்திருக்கிறது. புது டில்லியின் முக்கியமான வீதிகளில் தமிழ்த் தாய் பவனி வரப் போகிறாள். தமிழ் நாட்டின் பிரபல தமிழறிஞர்கள் பலரும் இந்த விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவு பணியாற்றுவதற்காகப் புது டில்லிக்கு விஜயமாகிறார்கள். திரு டி. பி. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் சீனிவாசராகவன், டாக்டர் வரதராஜனார், ஸ்ரீ சிவஞான கிராமணியார் முதலியோர் தமிழ் இலக்கியச் செல்வங்களைப் புது டில்லித் தமிழர்களுக்கு அள்ளி வழங்குவார்கள். தென்னிந்தியாவுக்கே சிறப்பாக உரிய இசைக் கருவியான நாதஸ்வரக் கச்சேரி தமிழ் விழாவையொட்டி நடைபெறப் போகிறது. கொத்தமங்கலம் சுப்பு "பாரதியார்" சரித்திரத்தைப் பண்ணில் அமைத்துப் பாடிக் காட்டப் போகிறார். தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாக விளங்கும் "ஔவையார்" திரைப்படம் காட்டப் போகிறார்கள். பரத நாட்டியக் கச்சேரிகளுக்கும் ஏற்பாடாகியிருக்கின்றன. புது டில்லியிலும் அக்கம் பக்கத்திலும் வசிக்கும் தமிழ் அன்பர்களுக்கு இத்தகைய அருமையான வாய்ப்புக்கள் கிட்டப் போவது பற்றி நமது மனமார்ந்த வாழ்த்துக்களை முன் கூட்டியே தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியாவின் உன்னதச் சித்திரம்!

"இரண்டு ஏகரா நிலம்"



ஸ்டார் . டாக்கீஸில்

4 - 9 - 1953 தேதியிலிருந்து காண்பிக்கப்படும்

இதுவரையில் பார்த்திராத படத்தை
இப்பொழுது பார்த்து களியுங்கள்

ANDHRA DISTRIBUTORS

POORNA PICTURES - VIJAYAWADA

செங்கற்பட்டு மகாநாடு

○●○

செங்கற்பட்டில் சென்ற 1-8-53ல் புதிய ஆரம்பக் கல்வித் திட்ட ஆதரிப்பாளரின் மகாநாடும், மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. செங்கற்பட்டு சேவா சங்கத்தின் முயற்சியினுல் மகத்தான வெற்றியுடன் நடந்த இந்த வைபவங்களுக்குச் சென்னையிலிருந்து ராஜாஜி, நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம், ஸ்ரீ பக்தவத்சலம், ஸ்ரீ சிவஞான கிராமணியார், ஸ்ரீ கே. விநாயகம், ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி (தினமணி), ஸ்ரீ கே. ராஜாராம் நாயுடு, ஸ்ரீ வானம்பாடி, மேயர் செங்கல்வராயன் ஆகியோர் விஜயம்செய்து புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை வன்மையாக ஆதரித்துப் பேசினர்கள்.



1



2



3



4

○●○

1. ராஜாஜிக்குச் சேவா சங்கத்தினர் அளித்த வரவேற்பு.
2. கணபதி தியேட்டரில் நடந்த கல்வி மகாநாட்டின் தோற்றம்.
3. பொதுக் கூட்டத்தின் மேடை.
4. பொதுக் கூட்டத்தில் ஒரு பகுதி.

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 38

நடித்தது நாடகமா?

வாள் தவறித் தரையில் விழுந்த போது எழுந்த ஒலியுடன் நந்தினியின் சோகம் ததும்பிய மெல்லிய சிரிப்பின் ஒலியும் கலந்தது.

அவள் பரபரப்புடன் "ஐயா! தெய்வத்தின் சித்தம் வேறு விதமாயிருக்கிறது. வாள் இங்கேயே கிடக்கட்டும். தாங்கள் உடனே போய் மறைந்து கொள்ளுங்கள்!" என்றாள்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வந்தியத்தேவன் குனிந்து வாளை எடுக்கப் போனான். அதன் கூரிய நுனிப் பகுதியைப் பிடித்துத் தூக்க முயன்றான்.

அதே சமயத்தில் அந்த வாளின் பிடியை ஒரு காலினால் மிதித்துக் கொண்டாள் நந்தினி.

"வேண்டாம்! இளவரசர் காதில் வாள் விழுந்த சத்தம் கேட்டிருக்கும். இங்கே வாள் இல்லாவிட்டால் அவர் மனத்தில் சந்தேகம் உண்டாகும். ஏற்கனவே, தங்கள் மீது அவருக்குச் சந்தேகம். போய் விடுங்கள்! முன்னொரு தடவை மாயமாய் இங்கிருந்து மறைந்தது போல் இந்தத் தடவையும் மறைந்து போய் விடுங்கள்!" என்றாள்.

வந்தியத்தேவன் வாளின் முனையைப் பிடித்து எடுக்க முயன்றதில் அவன் கையில் சிறு காயம் உண்டாயிற்று. அவன் வாளை விட்டுவிட்டு நிமிர்ந்தான். அவன் உள்ளங் கையில் இலேசாக இரத்தம் கசிந்ததை நந்தினி பார்த்தாள்.

"நான் உமக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவேன். என் கையால் என் உடன்பிறந்தானைக் கொல்ல மாட்டேன். நீர் தப்பித்துக் கொள்ளும். உம்மை இங்கே அவர் கண்டு விட்டால்......!"

"போய் விடுங்கள்! உடனே போய் விடுங்கள்!" என்று மணிமேகலையும் சேர்ந்து கெஞ்சினாள்.

காலடிச் சத்தம் மேலும் நெருங்கிக் கேட்டது.

வந்தியத் தேவன் வேண்டா வெறுப்பாக யாழ்க் கருவிகளின் களஞ்சியத்தை நோக்கி விரைந்து சென்றான். களஞ்சியத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று மறைந்தான்.

காலடிச் சத்தம் வெகு சமீபத்தில், வாசற்படிக்கருகில், கேட்டது.

வந்தியத்தேவன் மறைந்த இடத்தை வியப்புடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலையைப் பார்த்து, "தங்காய்! நீயும் மறைந்து கொள்! கட்டிலின் திரைகளுக்குப் பின்னால் மறைந்து கொள்!' நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது அவருக்குத் தெரியாமல் இங்கிருந்து போய்விடு!" என்றாள் நந்தினி.

மணிமேகலை கட்டிலின் திரைச் சீலைக்குப் பின்னால் மறைந்த மறுகணத்தில் ஆதித்த கரிகாலனும் கந்தமாறனும் உள்ளே வந்தார்கள்.

கரிகாலன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே நந்தினியை நெருங்கினான். கட்டிலின் திரைச் சீலை அசைந்ததை அவன் கவனித்தான். ஆனால், கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

நந்தினிக்கு அருகில் வந்ததும் தரையிலே கிடந்து ஒளிவிட்டுக் கொண்டிருந்த வாளைப் பார்த்தான். பின்னர், நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

நந்தினியின் நெஞ்சை ஊடுருவிய அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைப் பொறுக்க மாட்டாமல், வாளை எடுக்கும் பாவனையாக அவள் குனிந்தாள்.

நந்தினியின் நோக்கத்தை அறிந்து அவளை முந்திக் கொண்டு கரிகாலன் வாளைக் கையில் எடுத்துக் கொண்டான். அதன் அடிப் பிடியிலிருந்து கூரிய நுனி வரையில் கூர்ந்து பார்த்தான். நுனியில் புதிய இரத்தக் கறை இருப்பதையும் பார்த்துக் கொண்டான்.

பின்னர் நந்தினியை நோக்கி, "தேவி! நாங்கள் வரும்போது கேட்ட சத்தம் இந்த வாளின் சத்தந்தான் போலிருக்கிறது. தங்கள் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்திருக்கிறது! எங்களை வரவேற்பதற்குக் கையில் வாளேந்தி ஆயத்தமானது போலத் தோன்றுகிறது" என்றான்.

"வீரம் மிக்க இளம் புலிகளையும் தீரத்திற் சிறந்த வாலிப சிங்கங்களையும் வரவேற்பதற்குரிய முறை அதுவே யல்லவா?" என்றாள் நந்தினி.

"மூர்க்கப் புலிகளுக்கும் சிங்கங்களுக்கும் கூரிய நகங்களும் பற்களும் வேண்டும். ஆனால் துள்ளித் திரியும் புள்ளி மானுக்கு அவை தேவையில்லை யென்று தானே கடவுள் தரவில்லை?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"மானும் தன் கொம்புகளை உபயோகிக்க வேண்டிய தேவை நேரிடலாம் அல்லவா? தனக்குக் கொம்புகளை அளித்த கடவுளிடம் கலைமான் நன்றி செலுத்தும் சந்தர்ப்பமும் நேரிடலாம் அல்லவா? கருணை கூர்ந்து அந்த வாளை என்னிடம் கொடுத்து விடுங்கள்!" என்று மன்றாடினாள் நந்தினி.

"இல்லை; இல்லை! தங்கள் கைகளுக்கு இது ஏற்றதன்று. மலர் கொய்யவும் மாலை புனையவும் பிரம்மதேவன் படைத்த தளிர்க் கரங்களினால் வாளை எப்படிப் பிடிக்க முடியும்?" என்றான் கரிகாலன்.

"கோப்பெருமகனே! இந்த ஏழையின் கைகள் ஆர்வத்துடன் மலர் கொய்து ஆசையுடன் மாலை புனைந்த காலம் உண்டு. அந்த மாலையைச் சூடுவதற்குரியவர் எப்போது வருவார் என்று காத்திருந்து காத்திருந்து ஏமாந்த காலமும் உண்டு. அவ்விதம் பகற் கனவு கண்டு வந்த காலம் போய் எத்தனையோ யுகங்கள் ஆகி விட்டன. இப்போது இந்தத் திக்கற்ற அநாதையின் கரங்கள் வாளைத் துணை கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது, ஐயா! அந்தத் துணையையும் தாங்கள் என்னிடமிருந்து பறித்துக் கொள்ளாதீர்கள்!" என்றாள் நந்தினி.

"தேவி! இது என்ன பேச்சு? தங்களையா திக்கற்ற அநாதை யென்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள்? தங்கள் காலால் இட்ட பணியைத் தலையால் வகித்து நிறைவேற்றுவதற்கு எத்தனை வாலிப வீரர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்? இது தங்களுக்குத் தெரியாதா?" என்றான் கரிகாலன்.

"தப்பித் தவறி என் கால் அத்தகைய தூர்த்தர்களுடைய தலையிலே பட்டு விட்டால் அந்தக் காலை வெட்டிக் கொள்ள வேண்டியதா யிருக்கும், ஐயா! அதற்கேனும் வாள் அவசியம் அல்லவா?"

"ஐயோ! இது என்ன கர்ண கடூரமான பேச்சு? பாதச்சிலம்பு கலீர் கலீர் என்று ஒலிக்க அரண்மனை மாட கூடங்களில் அன்னமும் நாணும் நன்னடை பயிலவேண்டிய கால்களை வெட்டுவதா? இந்த வார்த்தைகள் பெரிய பழுவேட்டரையரின் காதில் விழுந்தால் அவர் உள்ளம் என்ன பாடு படும்?"

"ஐயா! அவரைப்பற்றிக் கவலைப் படுவோர் யார்? அந்தக் கிழச் சிங்கம் ஒரு கர்ஜனை செய்தால் அதைக் கேட்டு நடுங்கி ஓடிப் பதுங்கிய வாலிபப் புலிகள் இப்போது எவ்வளவு தைரியமாக வெளி வந்து நடமாடுகின்றன? அவர் கொள்ளிடத்து வெள்ளத்தில் போய் விட்டார் என்ற செய்தியைக் கேட்ட பின்னர் அல்லவா வாலிபப் புலிகளுக்கு இவ்வளவு துணிச்சல் வந்து விட்டது? அந்தப் புலிகள் என்னிடம் ரொம்பவும் நெருங்கி விடாமல் பார்த்துக் கொள்வதற்காக இந்த ஆயுதத்தை வைத்திருந்தேன். குப்பையில் கிடந்த என்னை உலகமறிய அழைத்து வந்து அரண்மனை வாழ்வும் அரச போகமும் அளித்த மகாபுருஷரின் கௌரவத்தைக் காப்பதற்காக இந்த வாளின் உதவியைக் கோரினேன். தாங்கள் சற்று முன்னால் சொன்னது போல், மலர் கொய்ய வேண்டிய கரங்களினால் வாள் சுழற்றப் பயின்றேன்..."

"தேவி! உண்மையில் அதற்காகத் தானா? இந்த வாளைத் தாங்கள் பெட்டியில் வைத்துப் பூஜை செய்து வந்ததும், இதைத் தங்கள் மலரினும் மென்மையான கன்னங்களோடு சேர்த்துக் கொஞ்

சிக் குலாவி வந்ததும், பெரிய பழுவேட்டரையரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத்தானா? அல்லது தங்களைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு நெருங்கும் வீரமூடர்களை நெருங்க வொட்டாமல் தடுப்பதற்குத் தானா? வேறு நோக்கம் ஒன்றுமில்லையா?"

"வேறு என்ன விதமான நோக்கம் இருக்க முடியும், ஐயா?"

"ஏன்? வேறு எத்தனையோ நோக்கம் இருக்க முடியும்! பழி வாங்கும் நோக்கம் இருக்கலாம். தாங்கள் அடிபணிந்து கைகூப்பிக் கேட்டுக் கொண்ட வேண்டுகோளைப் புறக்கணித்துத் தங்கள் உள்ளத்தில் அழியாத புண்ணை உண்டாக்கிய பாதகனைக் கொன்று சபதம் முடிக்கும் நோக்கம் இருக்கலாம்!"

நந்தினி தலையைக் குனிந்து கொண்டு ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள். பின்னர், இளவரசனை நிமிர்ந்து நோக்கி, "கோமகனே! அம்மாதிரி எண்ணமும் ஒரு சமயம் எனக்கு இருந்தது உண்மைதான். அதற்காகவே இந்த வீரவாளைப் பூஜை செய்து வந்தேன். எப்போது அந்த வேளை வரும் என்று காத்துக் கொண்டிருந்தேன். ஆனால் வேளை வந்த போது என் கரங்களில் வலிவு இல்லாமல் போய் விட்டது; நெஞ்சில் உறுதியில்லாமலும் போய் விட்டது. இனி இந்த வாளை என் கற்பையும் என் கணவரின் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே உபயோகப் படுத்துவேன். கருணை செய்து அதை இப்படிக் கொடுங்கள்!" என்றாள்.

"தேவி! அந்தப் பொறுப்பை நான் வகிக்கக் கூடாதா? தங்களுக்கோ, தங்கள் கணவருக்கோ, தீங்கு எண்ணிய பாதகனைத் தண்டிக்கும் கடமையை நான் நிறைவேற்றக் கூடாதா?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"தாங்களால் அது இயலாத காரியம். இந்தத் திக்கற்ற அநாதை ஸ்திரீயின் நிமித்தம் தங்கள் ஆருயிர் நண்பர்களைத் தண்டிக்க முடியுமா?"

"ஏன் முடியாது? நிச்சயமாய் முடியும்! நந்தினி! நீ அன்றைக்கு ஏரித் தீவில் வந்தியத்தேவனைப் பற்றிக் கூறியதையெல்லாம் அப்போது நான் பூரணமாக நம்பவில்லை. பின்னால், கந்தமாறன் சொல்லியதிலிருந்து அவ்வளவும் உண்மைதான் என்று அறிந்தேன். அந்தப் பாதகனை நீ மன்னித்தாலும் நான் மன்னிக்கச் சித்தமாயில்லை. அவன் எங்கே



என்று சொல்!...சொல்லமாட்டாயா?... வேண்டாம்! என் கண்கள் குருடாகி விட வில்லை!...... இதோ பார்!" என்று ஆத்திரத்துடன் ஆதித்த கரிகாலன் கர்ஜனை செய்து கொண்டே கட்டிலை மூடியிருந்த திரைச் சீலையை நோக்கி அடி எடுத்து வைத்தான்.

நந்தினி அவன் காலைத் தொட்டு எழுந்து மண்டி யிட்டுக் கரங்களைக் குவித்துக் கொண்டு "கோமகனே! வேண்டாம்! வேண்டாம்!" என்றாள்.

"நந்தினி! உன் கருணையை வேறு காரியங்களுக்கு வைத்துக் கொள்! என் நண்பனைப்போல் நடித்துச் சதி செய்யும் சண்டாளனிடம் கருணை காட்ட வேண்டாம்!" என்று சொல்லிய வண்ணம் ஆதித்த கரிகாலன் நந்தினியை மீறிக் கொண்டு மேலே நடந்தான்.

நந்தினி பிரமித்துத் திகைத்தவள் போல் நாலாபுறமும் பார்த்து விழித்தாள். இத்தனை நேரமும் வாசற்படிக்கு அருகில் சிலையைப்போல் நின்று கொண்



டிருந்த கந்தமாறனைப் பார்த்து, "ஐயோ! அவரைத் தடுங்கள்!" என்று அலறினாள்.

கந்தமாறனுகிய சிலைக்கு உயிர் வந்தது. ஆனால் அவன் இருந்த இடத்தை விட்டு அசைய வில்லை. இலேசாக ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு மீண்டும் சிலையாக மாறி விட்டான்.

கரிகாலன் ஒரு கையினால் வாளை ஓங்கிய வண்ணம் கட்டில் திரைச் சீலையின் அருகில் சென்று, இன்னொரு கையினால் திரையை விலக்கினான்.

உள்ளே, கையில் சிறிய கூரிய கத்தியுடன் தோன்றிய மணிமேகலை, 'கிறீச்' என்று சத்தமிட்டாள்.

ஆதித்த கரிகாலன் ஓங்கிய வாளுடன் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டுப் பின்னர் அந்த வாளினால் கட்டில் திரைச் சீலையைக் கிழித்தெறிந்தான்.

"ஆகா! இந்தப் பெண் புலியா இங்கே நிற்கிறது? அப்பப்பா! இதன் நகங்கள் மிகக் கூர்மையாயிற்றே?" என்று கூறி 'ஹா ஹா ஹா' வென்று சிரித்தான்.

பின்னர், கந்தமாறனைப் பார்த்து, "நண்பா! உன் தங்கையை அழைத்துப் போய் அவள் தாயாரிடம் ஒப்புவித்து விட்டு வா! இவள் வயிற்றில் எத்தனை புலிக் குட்டிகள் பிறக்குமோ தெரியாது! இவள் இந்த வீர பாண்டியனுடைய வாளுக்கு இத்தனை நேரம் இரையாகிச் செத்திருந்தால் சோழ நாடு எத்தனை வீரப் புதல்வர் புதல்விகளை இழக்கும்படி நேர்ந்திருக்கும்?" என்றான்.

சற்று முன் உண்மையிலேயே பெண் புலிபோல் சீறிய மணிமேகலை ஆதித்த கரிகாலனின் வார்த்தைகளைக் கேட்டு நாணம் அடைந்தாள். கந்தமாறன் அவளை அணுகி அழைப்பதற்குள், அவளாகவே அந்த அறையிலிருந்து செல்ல ஆயத்தமாகி விட்டாள்.

அண்ணனும் தங்கையும் அங்கிருந்து போனதும், கரிகாலன் நந்தினியைப் பார்த்து, "தேவி! ஒரு நாடகம் நடித்து அவர்கள் இருவரையும் போகச் செய்து விட்டேன். இனிமேலாவது நம் உள்ளத்

தைத் திறந்து உண்மையைப் பேசலாம் அல்லவா?'' என்றான்.

நந்தினி உண்மையான வியப்புடன் கரிகாலனை நோக்கி, ''ஐயா! தாங்கள் நடித்தது நாடகமா? அப்படியானால், அது ஆச்சரியமான நடிப்புத்தான்! நானும் அதை உண்மையென்றே நம்பி ஏமாந்து போனேன்!'' என்றாள்.

''நந்தினி! நடிப்பிலே உனக்கு இணை இந்த உலகிலேயே இல்லை என்பது என் எண்ணம். நீயே ஏமாந்திருந்தால், என் நடிப்புத் திறமையை அவசியம் மெச்சிக் கொள்ள வேண்டியதுதான்! ஆனாலும், நான் வாளை ஓங்கிக் கொண்டு மணிமேகலை மறைந்திருந்த இடத்தை நோக்கிப் போனபோது, நீ என்னைத் தடுக்கவில்லையே? அது ஏன்? என்மீது சுமந்துள்ள பல குற்றங்களுடன் ஸ்திரீ ஹத்தி தோஷமும் சேரட்டும் என்று எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாயா?'' என்று கேட்டான் கரிகாலன்.

''சிவ சிவா! இந்த உலகத்திலேயே இன்றைக்கு அந்தப் பெண் ஒருத்தியிடந்தான் நான் உண்மையான அன்பு கொண்டிருக்கிறேன். அவளும் சாகட்டும் என்று சும்மாப் பார்த்துக் கொண்டிருப்பேனா? திரையை நீக்கியதும் தாங்களே தெரிந்து கொள்வீர்கள் என்று எண்ணினேன்...''

கரிகாலன் சிரித்தான்.

''இந்தச் சிரிப்பின் பொருள் விளங்கவில்லை!'' என்றாள் நந்தினி.

''மணிமேகலையை நான் கொல்லுவதற்கு நீ சொன்ன காரணமே போதும்!'' என்றான் கரிகாலன்.

''இன்னும் விளங்கவில்லை!''

''நீ யாரிடமாவது அன்பு கொண்டாய் என்றால், அவனோ அவளோ என்னுடைய பரம விரோதியாகி விடுவார்கள். இது உனக்குத் தெரியாதா?''

''தெரியும்; அத்தகைய துரதிர்ஷ்டசாலி நான் என்று தெரியும். ஆனாலும் தங்கள் குரோதம் கள்ளங்கபடமறியாத இந்த இளம் பெண் வரையில் செல்லும் என்று நான் கருதவில்லை!''

''அல்லது உன் நோக்கம் வேறு விதமாகவும் இருக்கலாம். நான் மணிமேகலையைக் கொன்று விட்டால், அதற்காகக் கந்தமாறன் என்னைப் பழி வாங்குவான் என்று எண்ணி யிருக்கலாம். அல்லது நான் அவளைக் கொல்லுவதற்குள் அவள் கையிலிருந்த சிறிய கத்தியை எறிந்து என்னைக் கொன்று விடுவாள் என்றும் கருதி யிருக்கலாம்......''

''ஐயையோ! இது என்ன? எப்படிப்பட்ட பயங்கரமான கற்பனைகள்!''

''கற்பனைகளா? என்னுடைய பயங்கரமான கற்பனைகளைக் காட்டிலும் பயங்கரமான நோக்கத்தை நீ உன் மனதில் வைத்திருக்கிறாய்! உண்மையைச் சொல்! என் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் தீயை மேலும் வளர்க்க வேண்டாம்! என்னை எதற்காக இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வரச் சொன்னாய்? எதற்காகப் பழுவேட்டரையரைத் தஞ்சைக்குப் போகும்படி செய்தாய்? சோழ சாம்ராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து வைப்பதற்காகவோ, எனக்கும் மணிமேகலைக்கும் திருமணம் செய்வித்துக் கண்டு களிப்பதற்காகவோ இத்தனை முயற்சியும் செய்ததாகச் சொல்லாதே! அந்தக் கதைகளை யெல்லாம் நான் நம்ப மாட்டேன். நம்பி யிருந்தால், இங்கு வந்திருக்கவும் மாட்டேன்......''

''பின் எதற்காக இங்கு வந்தீர்கள், கோமகனே! என்ன நம்பிக்கையுடன் இந்த இடத்துக்கு வந்தீர்கள்?''

''நம்பிக்கையா? எனக்கு ஒருவித நம்பிக்கையும் கிடையாது. என் உள்ளத்தில் நிரம்பி யிருப்பதெல்லாம் நிராசையும் அவநம்பிக்கையுந் தான். இந்த நாட்டை விட்டும், இந்த உலகத்தை விட்டுமே, நான் போய்விட விரும்புகிறேன். அதற்கு முன்னால் உன்னை ஒரு தடவை பார்த்து விடைபெற்றுப் போகலாம் என்றுதான் வந்தேன். ஒரு சமயம் என்னிடம் நீ ஒரு வரம்கோரினாய். காலில் விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொண்டாய். கையெடுத்துக் கும்பிட்டு இரந்தாய். என் ஆத்திரத்தினாலும் மூர்க்கத்தனத்தினாலும் நீ கோரியதை நான் கொடுக்கவில்லை. பிறகு ஒவ்வொரு கணமும் அதை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்கு ஏதேனும் பரிகாரம் உண்டானால், அதைச் செய்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். நந்தினி! சொல்! எந்த விதத்திலாவது அதற்கு நான் பரிகாரம் செய்ய முடியும் என்றால், சொல்!''

இவ்வாறு இரக்கம் ததும்பும் குரலில் கூறிய கரிகாலனைப் பார்த்து நந்தினி, ''கோமகனே! அதற்குப் பரிகாரம் ஒன்றும் கிடையாது. இறந்தவர்கள் இறந்தவர்கள்தான்! இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யும் சக்தி இந்த உலகில் யாருக்கும் கிடையாது. கதைகளிலே

காவியங்களிலே சொல்கிறார்கள். நாம் பார்த்ததில்லை" என்றான்.

"இறந்தவர்களைப் பிழைக்கச் செய்ய முடியாது. அது உண்மைதான்! ஆனால் உயிருக்கு உயிர் கொடுத்துப் பரிகாரம் தேடலாம் அல்லவா?...இதோ பார்! என்னிடம் இனியும் மறைக்க வேண்டாம். இங்கு நீ எதற்காக வந்தாய், என்னை எதற்காக வரச் சொன்னாய், என்னத்திற்காகப் பழுவேட்டரையரைத் தஞ்சைக்கு அனுப்பினாய் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது என்று எண்ணாதே! நீயும் நானும் சின்னஞ் சிறுவர்களாயிருந்த நாளிலிருந்து உன் மனத்தில் எழும் எண்ணங்களை அறியும் சக்தி எனக்கு உண்டு. எனக்கு ஆத்திரம் ஊட்டி நீசத்தனமான செயல் புரியும்படி செய்வதற்காகவே வீர பாண்டியனுடைய உயிருக்காக நீ மன்றாடினாய். என் பக்கத்திலிருந்து என்னை வதைத்துக்கொண்டிருப்பதற்காகவே பெரிய பழுவேட்டரையரை நீ மணந்து தஞ்சைக்கு வந்தாய். நான் காஞ்சியில் நிம்மதியுடன் இருப்பது உனக்குப் பொறுக்கவில்லை. அதனாலேயே இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வரச் செய்தாய். வீர பாண்டியனுடைய வாளினால் என்னைக் கொன்று பழி முடிக்கும் நோக்கத்துடனேயே நீ இவ்விடத்துக்கு வந்திருக்கிறாய். அந்த உன்னுடைய நோக்கத்தைத் தடையின்றி நிறைவேற்றிக் கொள்! அதற்காகவே கந்தமாறனையும் அவன் தங்கையையும் அப்புறப்படுத்தினேன். இதோ! இந்த வாளைப் பெற்றுக் கொள்! உன் பழியை முடித்துக் கொள்!" என்று கூறிக் கரிகாலன் வாளை நீட்டினான்.

நந்தினி வாளை வாங்கிக்கொண்டாள். வாளைப் பிடித்த அவளுடைய கைகள் நடுங்கின. பின்னர் அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. கண்களில் கண்ணீர் ததும்பியது. இதயத்தைப் பிளக்கும் சோகக் குரலில் விம்மலும் தேம்பலும் கலந்து வந்தன.

"நந்தினி! இது என்ன அதைரியம்? இந்த மனத் தளர்ச்சி ஏன்? நீ பட்டர் குடும்பத்தில் வளர்ந்தவள்; ஆனால் வீர மறக் குலத்தில் பிறந்தவள் அல்லவா? ஆட்டு மந்தையில் வளர்ந்தபடியால் சிங்கக்குட்டி தன் இயல்பை இழந்து விடுமா? இதோ பார்! உன் அந்தரங்கத்தை நான் அறிவேன். உன் பழியை முடிப்பதற்குக் கந்தமாறனையோ, பார்த்திபேந்திரனையோ, வந்தியத் தேவனையோ நீ ஏவி விட வேண்டாம். அவர்கள் மீது எனக்குக் கோபத்தை உண்டாக்கவும் வேண்டாம். உன் சபதத்தை நீயே நிறைவேற்றிக் கொள்! உன் பழியை உன் கையினாலேயே முடித்துக் கொள்! யாராவது இங்கே மறுபடியும் வந்து தொலைந்து விடலாம். கந்தமாறன் தன் தங்கையை அன்னையிடம் சேர்ப்பித்து விட்டுத் திரும்பி

அட்டைப்பட விளக்கம்

அத்தை மகள் அஞ்சுகம்

கல்யாணம் என்றால் கந்தனுக்கு ஒரே பயம்! அடேயப்பா! அது எவ்வளவு பெரிய பொறுப்பு! வீடு, வாசல் என்று வைத்துக் கொள்ள வேண்டும். விறகு, அரிசி, உப்பு, புளி என்று தலைப் பொறுப்பாக இருந்து வாங்கிப் போட வேண்டும். அப்பப்பா! இதெல்லாம் யாரால் முடியும் — நிலையான வருவாய் இல்லாத போது?

ஆம், அவன் தான் என்ன செய்வான்? மூன்று வருஷங்களாகக் காவேரி அம்மன் சரியாகக் கண் திறந்து பார்க்கவில்லை. ஆற்றிலே வெள்ளம் வந்தால் அல்லவா பரிசலுக்கு மவுசு; கந்தனுக்கு வருவாய்? அதற்குப் பிறகுதானே கல்யாணம் கார்த்திகையைப் பற்றி அவன் நினைக்கலாம்?

ஆனால் அவனுடைய அத்தை மகள் அவனுக்காக வளர்ந்து எத்தனை நாள் காத்திருப்பாள்? இது அவனுக்குத் தெரிந்ததுதான். தெரிந்து என்ன பயன்? காவேரியம்மனைக் கண்திறந்து பார்க்கும்படி வேண்டிக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. அவன் தவத்தின் பயனாகத் தானோ என்னவோ:

ஆடியோடி வந்தாள்
  காவேரி அம்மன்
ஆடிமா சத்திலே
  அழகுபொலிய வந்தாள்.

இருகரையும் அணைத்து
  இருமருங்கும் பாய்ந்து
பெருகிப்பெருகி வந்தாள் — மக்கள்
  மகிழ்ச்சி பெருக்கவந்தாள்.

* * *

பரிசிலோட்டும் கந்தன்
  பரிசிலோட்டி ஓட்டி—இன்று
பரிசம்போட லானான்—மிக்க
  பணமும்பண்ண லானான்.

தோணிதள்ள மறக்கிறான்
  துடுப்புபோட மறக்கிறான்
நாணியிருக்கும் அஞ்சுகத்தின்
  நாணங்கண்டு வியக்கிறான்.

ஆவணிநாள் எதிர்நோக்கி
  ஆவலுடன் நிற்கிறான்!
காவேரி யம்மனுடைக்
  கருணைக்கு வணங்குறான்!

வருவான். பார்த்திபேந்திரனும் சம்பு வரையரும் திரும்பி வரும் நேரமும் ஆகி விட்டது. அவர்களுடனே என் பாட்டன் மலையமானும் வந்தாலும் வரலாம். பழு வேட்டரையர் கொள்ளிடத்து வெள்ளத்தில் போயிருப்பார் என்றும் நான் நம்ப வில்லை. அவரும் திடீரென்று வந்தாலும் வரக் கூடும். உன் பழியை முடித்துச் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ள இதைக் காட்டிலும் நல்ல சந்தர்ப்பம் வரப் போவதில்லை. என்னைக் கொல்லு வதினால் எனக்கு நீ எவ்வித தீங்கும் செய்தவளாக மாட்டாய்! பேருதவி செய்தவளாவாய்!" என்றான்.

நந்தினி பொங்கி வந்த விம்மலை அடக்கிக் கொண்டு, "கோமகனே! தங்களிடம் நான் எதையும் மறைக்கவும் இல்லை; மறைக்க விரும்பவும் இல்லை. நான் இங்கு வந்ததின் நோக்கம் பற்றித் தாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான். தங்களை இங்கு வரச் சொன்னதின் நோக்கமும் அதுதான். ஆனால் சந்தர்ப்பம் நேர்ந்திருக்கும் சமயத்தில் என் கைகளில் வலிவு இல்லை; என் நெஞ்சிலும் தைரியம் இல்லை. தாங்கள் என்னைத் தேடிவரும் காலடிச் சத்தம் கேட்டவுடனேயே என் கையிலிருந்த வாள் நழுவிக் கீழே விழுந்து விட்டது. இதோ பாருங்கள்! வாளைப் பிடித்திருக்கும் என் கரங்கள் நடுங்குவதை!" என்றாள்.

"ஆம், ஆம்! அதைப் பார்த்துக் கொண்டு தானிருக்கிறேன். ஆனால் அதன் காரணந்தான் எனக்குத் தெரிய வில்லை. உன் நெஞ்சம் ஒரு சமயம் எவ்வளவு உறுதியடைந்திருந்தது என்பதை நான் அறிவேன். தேவேந்திரனுக்காக வஜ்ராயுதத்தைச் செய்து கொடுத்த பிறகு அதில் மீதமான உலோகத்தைக் கொண்டு பிரம்மதேவன் உன் இருதயத்தைப் படைத்திருக்க வேண்டும் என்று நான் எண்ணுவதுண்டு. அப்படிப்பட்ட உன் நெஞ்சு இவ்விதம் இளகிவிட்டதன் காரணம் என்ன?..."

"தங்கள் தோழர் வந்தியத்தேவர் சொன்ன செய்திதான் காரணம்!"

"ஆகா! நீயும் நானும் உடன் பிறந்தவர்கள் என்று அவன் கண்டு பிடித்துக் கொண்டு வந்த செய்தியைத் தானே சொல்லுகிறாய்? அன்றைக்கு ஏரிக்கரைத் தீவில் நாம் பேசிக் கொண்டிருந்த போது நீ அதை நம்பவில்லையென்று சொன்னாயே? நம்மை மறுபடியும் பிரித்து வைப்பதற்காக யாரோ செய்திருக்கும் சூழ்ச்சி என்று கூறினாயே?"

"நான் அதை நம்பக்கூடாது என்று தான் பார்த்தேன். அதற்காக எவ்வளவோ பிரயத்தனம் செய்தேன். ஆனால் இன்று அவர் கூறிய வேறொரு செய்தி என் நெஞ்சுறுதியை அடியோடு குலைத்து விட்டது."

"ஆகா! அது என்ன? இன்னும் ஏதாவது புதிய கற்பனையா? புதிதாக வேறு என்ன கூறினான்?"

"என்னைப் பெற்ற அன்னையைப் பற்றிச் சொன்னார். அவரை இலங்கைத் தீவில் பார்த்ததாகக் கூறினார். அதை நான் நம்ப மறுப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை. கோமகனே! முன்னொரு தடவை நான் ஒரு வரம் கேட்டேன். அதைத் தாங்கள் கொடுக்க வில்லை. அதற்காக இன்று வரை வருத்தப்படுவதாகச் சொன்னீர்கள். இன்று மறுபடியும் ஒரு வரம் கேட்கிறேன். இதையாவது கொடுப்பீர்களா?"

"வரம் இன்னது என்று குறிப்பிட்டுக் கேட்டால், கொடுக்க முடியும் முடியாது என்று சொல்கிறேன்."

"கோமகனே! வீர பாண்டியனுடைய மரணத்துக்குப் பழி வாங்குவதாக நான் சபதம் செய்தது உண்மைதான். மீன் சின்னம் பொறித்த இந்தப் பாண்டிய குலத்து வாளினால் ஒன்று தங்களைக் கொல்லுவேன், அல்லது என்னை நானே கொன்று கொண்டு மாய்வேன் என்று சபதம் எடுத்துக் கொண்டேன். தங்களைக் கொல்வதற்கு என் நெஞ்சிலும் துணிவு இல்லை; என் கைகளிலும் வலிவு இல்லை. என்னை நானே கொன்று கொண்டு தங்கள் முன்னாலேயே மடியலாம் என்று எண்ணினால், அதற்குப் போதிய பலம் என் கைகளில் இல்லை. அரைகுறையாக முயன்று, என் உயிர் போகா விட்டால் என்ன செய்வது என்று பயமாயிருக்கிறது. ஐயா! என் சபதத்தை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யுங்கள்! இந்த வாளைத் தாங்களே வாங்கிக் கொண்டு தங்கள் கையினால் என்னை வெட்டிக் கொன்று விடுங்கள்! அப்போது என் சபதம் முடிந்து விடும். இந்த ஜன்மத்தில் மட்டுமன்றி இனி வரும் பிறவிகளிலும் தங்களிடம் நன்றி யுள்ளவளாவேன்!"

இவ்விதம் கூறிக்கொண்டே நந்தினி நீட்டிய வாளை மறுபடியும் ஆதித்த கரிகாலன் வாங்கிக் கொண்டான்.

"ஹா ஹா ஹா" என்று அந்த அரண்மனை முழுதும் எதிரொலி செய்யும்படி பயங்கரமாகச் சிரித்தான். (தொடரும்)





நவீன விவசாய சாதனத்தினால் தன் வேலையில் விசேஷப் பெருமை அடைகிறான் ஓர் விவசாயி.

உழைப்பின் பெருமையை ஓர் நல்ல கடிகாரமும் வெகுவாக உயர்த்துகின்றது. வெஸ்ட் என்டு கடிகாரத் தயாரிப்பில் நாங்கள் பெருமை அடைவதுபோல் அதை அணிவதில் நீங்களும் பெருமித மடைகிறீர்கள்.

முக்கால் நூற்றாண்டுக்கு மேல் இந்தியாவிலேயே இத் தொழிலில் ஈடுபட்டிருந்தும் நவீன முன்னேற்ற வளர்ச்சிக் கேற்றவாறு நாங்கள் தயாரிக்கும் கடிகாரங்கள் அதன் விலை மதிப்பிற்கு உயர்வாகவும் கவர்ச்சிகரமாகவும் மிகச் சிறந்த வேலைப்பாடுடனும் விளங்கி வருகின்றன.

நம்பகம், நேர்த்தி, கவர்ச்சி இவை "வெஸ்ட் என்டு" உடன் இணைக்கப்பட்டுள்ளன.

செகண்டல் மாடல்

சென்டர் செகண்டு 10½" சைஸ்

நிக்கல் ஸில்வர், பேடண்ட் ஸ்டீல் பாக் ரூ. 115/-

ரோல்டு கோல்டு ... 20 மைக்ரோன்ஸ் ரூ. 152/-

WEST END WATCH CO.

BOMBAY CALCUTTA

தமிழ் நாடு

Tamil Nadu

சிறுகதைப் போட்டி (II)

பரிசு ரூ. 100

தமிழ் நாட்டாரின் வாழ்க்கையில் அழகான நிகழ்ச்சிகளை வைத்து எழுதப்படும் சிறு கதைகள் "தமிழ்நாடு" ஞாயிறு மலருக்கு வரவேற்கப்படுகின்றன. சிறந்த கதை என்று தேர்ந்தெடுக்கப்படும் மூன்று கதைகளுக்கு ரூ. 100 பரிசளிக்கப்படும். முதற்பரிசு ரூ. 50. இரண்டாவது பரிசு ரூ. 30. மூன்றாவது பரிசு ரூ. 20.

சிறுகதைகள் 1-10-53-க் தேதிக்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். அவை "தமிழ்நாடு" இதழில் 2½ பத்திக்குள் அடங்குவதாக இருக்க வேண்டும்.

பரிசு பெற்ற கதைகள் "தமிழ்நாடு" இதழின் உரிமையாகிவிடும். பரிசு பெறாத கதைகள் தகுதியுடையன வென்று கருதப்பட்டால் ஞாயிறு மலரில் வெளியிட எடுத்துக் கொள்ளப்படும்.

போட்டி பற்றி எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. கதைகளைத் திருப்பிப் பெற விரும்புவோர் போதிய தபால் பில்லை வைத்து அனுப்ப வேண்டும். கதை அனுப்பும் அஞ்சல் கவரில் "போட்டிக்கதை" என்று குறித்தனுப்ப வேண்டும். கதைகளின் முடிவு 15-10-53-க் தேதி அறிவிக்கப்படும்.

சிறு கதைப் போட்டி (I) பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு: வி. என். லட்சுமி; இரண்டாம் பரிசு: "பரதேசி"; மூன்றாம் பரிசு: எம். என். கமலா

ஆசிரியர், "தமிழ் நாடு", மதுரை



சாமி படத்துக்கு மூன் குத்து விளக்கை ற்றிவிட்டு, மண்டி போட்டுக் கை குவித்தாள் மனோகரி. சுவாமியின் கருணையே உருவமாகக் த்து விளக்கு சுடர்விட்டு எரிந்தது.

அந்தி மயங்கும் அந்த நேரத்தில் சூரியனின் டைசிக் கிரணங்கள் ஒளியைப் பரப்பின. இன்னும் கொஞ்ச நேரத்தில் அப்பா வந்து விடு ார் ஆபீசிலிருந்து. அவரிடம் எப்படியாவது ிஷயத்தைச் சொல்லித் தீர்த்துவிட வேண்டியது ான் இன்று; விட்டுக் கொண்டே வந்தால் ாட்கள், மாதங்கள்—ஏன் ஆண்டுகள்கூட உருண் டோடி விடும்' என்று அவள் தீர்மானித்தாள்.

தீர்மானித்த இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் ாசலில் காலடிச் சத்தம் கேட்டது. மனோகரி ஆவலோடு எட்டிப் பார்த்தாள். அவள் தந்தை ாமோதரம் முகத்தில் வேர்வை அரும்ப, தட்டித் டுமாறிக் கொண்டே வந்தார்.

கைகால்களை அலம்பிக் கொண்டு, அவர் நாற் ாலியில் சாய்வதற்கும், மனோகரியின் தாயார் அவளை வழக்கம்போல அழைத்து, "இந்தாம்மா னோ! இந்தக் காப்பியை அவரிடம் கொண்டு ோய்க் கொடு" என்று சொல்லுவதற்கும் சரி ாக இருந்தது.

உள்ளத்திலே துயரம் நிரம்பி யிருந்தும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், காப்பியை டம்ளரில் ஏந்தியவாறே தந்தையை நெருங்கினாள் னோகரி.

ஆபீசிலிருந்து வேலை செய்துவிட்டு வந்த களைப்பு குடும்பத் தொந்தரவுகள் வறுமை வாழ்வின் ின்னங்கள்—அனைத்தும் அவருடைய முகத்திலே வலைக் குறியின் ரேகைகளாகப் படிந்திருக் ின்றன. இந்தத் தந்தையைப் பார்த்த மனோகரி ன் உள்ளத்தில் எழுந்த எண்ணத்தைத் தந்தை ிடம் இன்று சொல்ல வேண்டாம் என்று ீர்மானித்தாள்.

தாமோதரத்தின் குடும்பம் நடுத்தர வகுப் பைச் சேர்ந்தது. பதினெட்டாவது வயதில் பாலாபீசில் குமாஸ்தாவாகச் சேர்ந்த அவருக்கு, அந்த வேலையே நீடித்து நிலைத்து விட்டது.

வருவாயில் ஒரு மாறுதலையும் காணவில்லை. நூற்றிருபது ரூபாய்ச் சம்பளம். குடும்பத்தைத் ன்னுவதற்கே போதும் போதாததுமாக இருந் து. எப்படியாவது ஒரு வருஷம் போய்விட்டால் ிலைமையைச் சமாளிக்கலாம் என்று அவர் நினைத் தார். காரணம் அவருடைய மகன் கடைசி வருஷம் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். படிப்பு முடிந்தால் அவனுடைய சம்பாத்தியம் குடும் பத்தை உய்விக்க மிக்க உதவியாக இருக்கும் என்று அவர் எண்ணினார்.

இளமையின் பொலிவும், வயதுக்கேற்ற உடற் கட்டும் பொருந்திக் கல்யாணத்துக்குத் தயாராக இருந்தாள் மனோகரி. எப்படியும் மகன் சம்பா திக்க ஆரம்பித்தால், ஓரிரண்டு ஆண்டுகளில் அவ ளுடைய திருமணத்தை அவனுடைய சம்பாத்தி யத்தில் சேமித்து வைக்கும் தொகையைக் கொண்டு நடத்திவிடலாம் என்று அவர் எண்ண மிட்டிருந்தார்.

படிப்பும் முடிந்தது. உள்ளூரிலேயே ஓர் ஆபீசில் நூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் கிடைத் தது கோபாலனுக்கு. உத்தியோகத்துக்குச் செல்ல ஆரம்பித்ததும் முதலில் சற்றுத் தெம்பாக இருந் தார் தாமோதரம். ஆனால் நாளாக ஆகப் 'பழைய குருடி கதவைத் திறடி' என்பது போல மகன், தந்தை இருவரின் வருமானமும் குடும்பச் செலவு என்னும் உண்டியில் கரைந்து காலணாக் கூட மிஞ்சாத நிலை வந்து விட்டது.

காலையில் எழுந்தால் ஓட்டலில் இரண்டு இட் டிலியும் காப்பியும் சாப்பிடாமல் இருக்கவே மாட்டான் கோபு. 'சம்பாதிப்பவன் வயிற்றைக் கட்டி வைக்க முடியுமா!' என்று அவன் தாயார் சுந்தரியம்மாள் சொன்னாள்.

ஆனால் தாமோதரம் ஒருநாள், "நீ வீணாகச் செலவழிக்கக் கூடாது கோபு; உள்ளூரிலேயே தானே உத்தியோகம்! மத்தியானத்துக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு போயேன். டிபன் செலவு மிச்சமாகும். பத்து ரூபாய் மிஞ்சினால் நமக்கு நல்லதுதானே!" என்றார்.

கோபுவும் விட்டுக் கொடுக்கவில்லை. அவன் "என்னிடம் சட்டம் பேச வந்து விட்டீர்களே; நீங்களுந்தான் உங்கள் செலவை மிச்சம் பிடித்துக் கொஞ்சம் சேருங்களேன்" என்றான்.

அன்று வரையில் தந்தை இரிய கோட்டைத் தாண்டாத கோபு, திடீரென்று இவ்வாறு கூறவே தாமோதரத்தின் கோபம் எல்லையைக் கடந்தது. அவர் உணர்விழந்து, "நான் என்ன செலவழித்து விடுகிறேன்! எல்லாம் இந்தக் காலத்துப் பசங்க சம்பாதிக்க ஆரம்பித்தவுடனே, தங்கள் பணம் என்று வந்துவிடுகின்றனர், நன்றி கெட்டவர்கள்!" என்று கத்தினார்.

அன்று முதல் அவர்கள் அவசியமானாலன்றி, அதிகமாக ஒருவரோடு ஒருவர் பேசுவது கிடை யாது. தாமோதரத்தின் சம்பளம் வீட்டு வாடகை, பால், குடும்பச் செலவு இவைகளுக்கே பற்றும். பாக்கிச் செலவைக் கோபுவே பார்த்துக்கொள்ளு வான். அது தவிர, பூ வாங்க வேண்டுமானால் பணம், கறிகாய் வாங்கினால் காசு, ஏதாவது சாமான் மாதக் கடையில் ஆகிவிட்டால் அதற்கு வேண்டிய தொகை — அனைத்தையும் சுந்தரியம் மாள் கோபுவைத்தான் கேட்பாள்.

"**அ**ப்பா, அப்பா!" என்று கூவிக் கொண்டே தாமோதரத்தின் கடைக்குட்டி ஹேமா ஓடி வந்தாள். சிந்தனை வுலகிலிருந்து இவ் வுலகிற்குத் திரும்பி வந்த தாமோதரம் 'என்ன வேண்டும்!' என்று சற்று எரிச்சலோடு வினவினார்.

"காலையில் ஆபீஸ் போகச்சே சொன்னேனே அப்பா ஜாமெட்ரி பாக்ஸ் வேணும்னு! வாங் கிக்கொண்டு வந்தாயோ!" என்றாள்.

"மறந்தே போயிட்டேனே, நாளைக்கு வாங்கித் தரேன்!" என்றார் தாமோதரம்.

"போ, அப்பா! உனக்கு என்னிக்கியும் ஞாபக மறதிதான்; நாளைக்கு வகுப்புக்கு 'ஜாமெட்ரி பாக்ஸை'க் கொண்டு போகாவிட்டால் வெளியிலே நிற்க வைப்பா!" என்று சொல்லிக் கொண்டே விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள் குழந்தை ஹேமா.

"ஏம்மா, அழறே! அதுதான் நாளைக்கு வாங்கித் தரேன் என்று சொன்னேனே! கோபு ஆபீஸிலிருந்து வரட்டும், அவனிடம் பணம் இருந்தால் வாங்கித் தருகிறேன்!"

"நிச்சயமா அண்ணா வந்ததும் வாங்கித் தருகிறாயா!" என்றாள் குழந்தை ஹேமா.

"ஆகட்டும் போ, தொந்தரவு படுத்தாதே!"

அதற்குள் டக் டக்கென்று வாசலில் பூட்ஸ் சத்தம் கேட்கவே, "அண்ணா, வந்துட்டா அப்பா!" என்று துள்ளிக் குதித்தாள் ஹேமா. அந்த இளம் உள்ளத்துக்குக் குடும்ப விவகாரத்தைப் பற்றி என்ன கவலை! அவளுக்கு வேண்டியது 'ஜாமெட்ரி பாக்ஸ்'.

கோபாலன் சட்டையைக் கழற்றி, பூட்ஸ் கயிற்றை அவிழ்க்க ஆரம்பித்தான். அதற்குள் ஹேமா அவனுடைய காலைக் கட்டிக் கொண்டு, "அண்ணா, அப்பா நீ வந்ததும் பணம் வாங்கித் தரேன்னா! ஒரு ரூபாய் கொடு, ஜாமெட்ரி பாக்ஸ் வாங்கணும்!" என்றாள்.

ஏற்கெனவே தனக்கென்று ஒன்றும் செய்து கொள்ளாமல் குடும்பத்திலேயே ஈடுபட்டிருந்த கோபாலனுக்கு, தந்தை ஒரு நாள் கடிந்துகொண்டது ஞாபகத்துக்கு வந்தது. அவனும் இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, "என் உதவி எதற்கும் வேண்டியிருக்கு, அப்பாவுக்கு! இப்படிச் செலவுக்குக் கொடுத்துக் கொண்டே இருந்தால் மனைகளுக்கு மாத்திரம் அல்ல, உனக்கும் சேர்த்துக் கல்யாணம் நடத்தி விடலாம்!" என்றான்.

'கல்யாணம்' என்ற சொல்லைக் கேட்கவே ஹேமா, "போ, அண்ணா! உனக்குக் கேலிதான் எப்போதும்!" என்று சிணுங்கினாள். பர்ஸிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துத் தங்கையிடம் நீட்டுவதைத் தவிர, வேறொரு வழியும் அவனுக்கு அப்பொழுது புலப்படவில்லை.

2

இரவு எட்டு மணி இருக்கும்.

சாப்பாடு முடிந்து, வராந்தாவில் கோபாலன் உட்கார்ந்திருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அங்கே தாமோதரம் வெற்றிலையை மென்று கொண்டே வந்தார்.

"என்னப்பா, இனிமேல் என்னால் இங்கே இருக்கவே முடியாது! இங்கே இன்னும் உட்கார்ந்திருந்தால் காலணாக்கூடச் சேர்க்க முடியாது; அப்புறம் உங்கபாடு!" என்று பேச்சை ஆரம்பித்தான் கோபாலன்.

"பின்னே எங்கேடா, சீமையிலே ஆயிரம் ரூபாய் உத்தியோகம் கிடைத்துவிடப் போகிறதா!" என்று தாமோதரம் சற்று உரத்த குரலில் கேட்டார்.

"இன்று ஒரு அப்ளிகேஷன் போட்டிருக்கேன் ஆபீஸிலிருந்து. பம்பாயில் அஸிஸ்டெண்ட் மானேஜர்கள் நிறையத் தேவையாம்! ஆபீஸ் மானேஜர்கூட என்னை மனுப்போடச் சொன்னார். வேலை கிடைத்தால் மூந்நூறு ரூபாய் சம்பளம் போயிடலாம்னு இருக்கேன் நான்......!"

"என்ன!" என்றார். கடுகடுப்பும் ரௌத்ர காரமும் பொருந்தி யிருந்தன இக் குரலில்.

கோபாலன் பதில் பேசாமல் இருந்தான்.

"இங்கேயே இருடா! அடுத்த மாசத்திலே யிருந்து உன் பணத்தில் இருபது ரூபாய் சேர்க்க லாம்! உன் செலவை எல்லாம் கொஞ்சம் 'கட் பண்ணிக்கோயேன்!"

"என்னத்தைக் 'கட்' பண்ணுவது! தலையை தான் அறுத்துக் கொள்ள 'வேண்டும்! நீங்கள் சிக்கனமாய் இருந்தால் வாஸ்தவம். பழங்காலத்து மனிதராக இருந்தால் என்ன, மாதம் ஐந்து ரூபாய்க்கா வெற்றிலை சீவல் வாங்கவேண்டும்!"

"டேய், இனிமேல் நீ இப்படிப் பேசாதே!"

"நான் சொன்னால் தப்பு; நீங்கள் சொன்னா சரி. உங்கள் வெற்றிலை சீவலைக் குறைத்தா மாதம் ஐந்து ரூபாய் மிச்சப்படும்; மத்தியான இல் டிபனுக்கு வீட்டுக்கு வந்து போகலாமே அதன் மூலம் பத்து ரூபாய் குறைக்கலாம் நானும் என்னால் முடிந்ததைப் பார்க்கிறேன். இ வரும் சேர்ந்து ஏதாவது செய்தால்தான் உண்டு!"

அதற்குள் அங்கே சுந்தரியம்மாள் ஆஜராகி "பால்காரன் வந்துவிட்டுப் போனான். பாக்கியை வாங்கிப் போக! நாளைக்கு வரச்சொல்லியிருக் கிறேன்!" என்றாள்.

"நாளைக்கு எங்கிருந்து கொடுப்பது! இ அடுத்த மாதச் சம்பளம் வந்தால்தான்!" என் கண்டிப்பாகக் கூறி விட்டார் தாமோதரம்.

மூன்று நாட்கள் சென்றன. அன்று கோபா லன் ஆபீஸிலிருந்து வரும்போது, முகமலர்ச்சியை யும் புன்சிரிப்பையும் அறைமுழுவதும் பரப்பினான்.

"என்ன சேதி; ஆபீஸில் ஏதாவது 'இன்கி மெண்ட்' கிடைத்திருக்கிறதா, என்ன!" என் மகிழ்ச்சியோடு வினவினார் தந்தை தாமோதரம்.

அதற்குள் சுந்தரி கையில் காப்பியை ஏந்தி வாறே அந்த அறைக்குள் கால் வைத்தாள்.

"பம்பாயில் வேலை கிடைத்து விட்டது; இதோ 'அப்பாயிண்ட்மெண்டு ஆர்டர்'!" என்று ஒ காகிதத்தை நீட்டினான் கோபாலன்.

'மூந்நூறு ரூபாய் சம்பளம்' என்று அதி எழுதியிருந்தது.

"அப்போ என்ன, போகிறதா இருக்கயா என்ன! அங்கே சாப்பாட்டுக்கும் செலவுக்குமே தண்ணீர்மாதிரி செலவழிந்து போய்விடாதா இ தப் பணம்! காலணாக்கூட மிச்சம் பிடிக்க முடி யாது. அதோடு மாத்திரம் இல்லை. தனியா இருந்தால் எத்தனையோ செலவுகள் இருக்கும் சினிமா, கூத்து, நாடகம்னு...! பேசாமல் 'இந் வேலை வேண்டாம்!' என்று எழுதிப் போ நாளைக்கே!" என்றார் தாமோதரம்.

"இல்லேப்பா, நான் போகத்தான் போகிறேன் என்று விடாப் பிடியாகக் கூறினான் கோபாலன் அன்று இரவு முழுவதும் தந்தைக்கும் மகனுக்கு தர்க்கம் சரியாக இருந்தது. நடுவில் கண்ணீ விட்டுக் கொண்டே சுந்தரியம்மாள், "என் டாப்பா! அவர் இஷ்டத்துக்கு மாறாக ஒன்று செய்யாதே; வீணாக அவர் உன்மீது கோபி பானேன்!" என்றாள்.

கோபு எதற்கும் மசிவதாக இல்லை. மறுநா காலை அவன் ஆறுமணிக்கே எழுந்து விட்டான் அவசர அவசரமாகக் குளித்து விட்டு, ஊருக்கு

போக வேண்டிய தயாரிப்பைச் செய்து கொண்டான். பெட்டியில் வேஷ்டிகள், சட்டைகள் இரண்டு மூன்று பனியன், எல்லாம் வைத்தான். படுக்கையைக் கட்டிக் கொண்டான்.

என்ன இருந்தாலும் பெற்ற பாசம் தாய்க்கு விடவில்லை. 'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு' என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்! காலையிலேயே நாலைந்து தோசையை வார்த்துக் கொடுத்து, சூடான காப்பியையும் மகனுக்குக் கொடுத்தாள்.

ஆனால் தாமோதரம் மாத்திரம் சீறிக்கொண்டே இருந்தார். "பிள்ளை அப்படியே தாங்கப் போகிறான் குடும்பத்தை! தூக்கம் விழித்துத் தோசையும் காப்பியும் பண்ணிக் கொடு, இந்த அழகான புத்திரனுக்கு!" என்று அவர் மனைவியைப் பலமாகக் கடிந்து கொண்டார்.

சுந்தரி பழங்காலத்து மனுஷி. கணவரின் சொல்லை மறுத்து, "வீணாக அவனைக் குற்றம் சொல்லாதீர்கள்! ஊருக்குப் போகச்சே அவன் மனசு நோக ஒன்றும் சொல்ல வேண்டாம்! நல்ல சம்பளம் கிடைத்தால் பம்பாய் என்ன, காஷ்மீருக்குக் கூடப் போகலாம்தான்!" என்று பிள்ளையின் பக்கம் பரிந்துகொண்டு, இவ்விதமாகப் பேசினாள்.

மணி ஆறு அடித்தது. வாசலில் ரிக்ஷா வண்டி வந்து நின்றது. ஸ்வாமி படத்தை வணங்கி விட்டு, கோபு எல்லாரிடமும் விடைபெற்றுக் கொண்டான். அந்தச் சமயம் உள்ளே யிருந்து வாசலுக்கு ஓடிவந்த மனோகரி, "என்னை மறந்து விடாதே அண்ணா!" என்று கண்களில் கண்ணீர் ததும்பச் சொன்னாள்.

"அவர் ஏது சொல்லியிருந்தாலும் அதுக்காக ஒன்றும் நினைத்துக் கொள்ளாதே கோபு! சமர்த்தா இரு. உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள், அடிக்கடி கடுதாசி போடு!" என்று கூறி வழியனுப்பினாள் சுந்தரி.

3

கோபாலன் பம்பாய்க்குப் போய் ஆன ஒரு மாதம் ஒரு கணத்தில் உருண்டு மறைந்தது. பம்பாய்க்குச் சென்ற நாலாவது நாள், "வேலை கிடைத்து விட்டது; சௌகரியமாக இருக்கிறது!" என்று தாமோதரத்துக்கு ஒரு கடிதம் வந்தது. அதற்கப்புறம் 'சௌக்கியமாக இருக்கிறேன்!' என்றுகூட ஒரு கடிதம் வரவில்லை.

கலகல வென்றிருந்த அந்த வீடு வெறிச்சென்றிருந்தது மனோகரிக்கு. சண்டையோ சச்சரவோ தந்தையும் மகனும் ஒன்றாக இருந்த வரையில் வீடு ஒருமாதிரியாக இருந்ததாகத்தான் அவள் எண்ணினாள்.


குடும்பத் தொல்லைகளோ நாளுக்குநாள் அதிகரித்தபடியே இருந்தன. பால்காரனின் பாக்கி, மூன்று மாதங்கள் சேர்ந்தாற்போல் ஒன்றும் கொடுக்காததால் எண்பது ரூபாய் ஆகிவிட்டது. ஹேமாவுக்கு அந்த மாதம் பள்ளிக்கூடச் சம்பளம் கூடக் கட்டவில்லை.


சாமான்கள் அரை குறையாகக்கூட வாங்க முடியவில்லை. இரண்டு குண்டு கரி வாங்கிவந்த தாமோதரம் அதை ஒரு குண்டாகக் குறைத்தார். அப்படியேதான் மற்றையச் சாமான்களும். எல்லாவற்றிற்கும் கோபாலனின் பிரிவுதான் காரணம் என்பதை அவர் ஒரு நொடியில் தீர்மானித்து விட்டார்.

எதற்கெடுத்தாலும் சுந்தரியிடம், "அவன் தனியாகப் போய் என்ன சுகத்தைக் கண்டு விட்டேடீ இப்போ! போய் ஒரு மாசமாகிறது, இன்னும் காலணாக்கூட வந்தபாடில்லை! மூந்நூறு ரூபாயையும் அங்கே ஒருவன் செலவழிக்கிறான்! இங்கே மொத்த குடும்பமும் நூற்றைம்பதுக்குள் அடக்கவேண்டியிருக்கிறது!" என்று கூறலானார் தாமோதரம்.

"அவசரப்பட்டால் முடியுமா? போய் அவன் கொஞ்ச நாள் நிலைக்க வேண்டாமா, என்ன! அடுத்த மாசம் அனுப்பலாம்னு இருக்கானோ என்னவோ!" என்று சுந்தரி அவரைச் சமாதானப் படுத்தினாள்.

அடுத்த மாதமும் போய், அதற்கு அடுத்த மாதமும் வந்து விட்டது. குடும்ப நிலையில் ஒரு மாறுதலைக்கூடக் காணோம். கோபு இருந்தபோது





ஆகஸ்டு மாதம் 14ந் தேதி சென்னையில் இருபது ஜீவகாருண்ய ஸ்தாபனங்களின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் கவர்னர் ஸ்ரீ பிரகாசா தலைமையில் நிகழ்ந்தது. படத்தில் நின்று கொண்டு பேசுபவர்தான் ஸ்ரீமதி ருக்மணி தேவி.

சேமிப்பு இல்லாவிட்டால்கூட, கடனில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த அந்தக் குடும்பம், இருநூறு ரூபாய்க் கடனை ஆக்கிக் கொண்டது.

அன்று தாமோதரம் கோபுவுக்குச் சற்றுக் கடுமையாகவே ஒரு கடிதம் எழுதினார்:

"நீ போய் இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகின்றன; இதுவரையில் காலணாக்கூட வரவில்லை. குடும்பக் கடன் இருநூறு ரூபாய் ஆகியிருக்கிறது. நீ இருந்தபோது இவ்வாறில்லை. அப்போது ஒன்றும் மிச்சப்படுத்தா விட்டாலும் கடனில்லாமல் வாழ்ந்து வந்த இக்குடும்பம் இப்போது கடனில் இறங்கி விட்டது.

"நான் சொன்ன வார்த்தையை நீ கேட்டால் தானே! இரண்டு மாதச் சம்பளத்தை என்ன செய்தாய்! மூன்நூறு ரூபாய் ஒண்டிக் கட்டைக்கு எதற்கு! முதலில் மிச்சத் தொகையை அனுப்பி விட்டு மறு காரியம் பார். பதினைந்து நாளைக்குள் பணத்தை அனுப்பாவிடில் உறவுகூட வைத்துக் கொள்ள நான் விரும்ப வில்லை!"

கடிதம் போய் இருபது நாட்கள் ஆகியும், கோபாலனிட மிருந்து பதிலும் இல்லை, பணமும் இல்லை. ஏற்கெனவே கோபத்தின் உச்சநிலையை அடைந்திருந்த தாமோதரம், இப்போது தலை கால் தெரியாமல் குதிக்க ஆரம்பித்து விட்டார்.

அன்று வரையில் சற்று நம்பிக்கையோடு இருந்த சுந்தரிக்குக்கூட, நம்பிக்கை போய் விட்டது. மனோகரி கண்ணைக் கசக்க ஆரம்பித்தாள். எப்போது பார்த்தாலும் கண்ணீரும் கம்பலையுமாக மூலையில் உட்கார்ந்து கேவிக் கேவி அழுவது அவளுடைய வேலையாகி விட்டது. அவள் வேண்டாத தெய்வம் இல்லை, பூசிக்காத கடவுள் இல்லை! "அண்ணா இப்படிச் செய்வானேன்! போகும்போதுகூட 'என்னை மறக்காதே' என்று கூறினேனே! அதற்குக் கைமேல் கிடைத்த பலனா இது!" என்றெல்லாம் அவள் எண்ணினாள்.

4

அன்று ஆபீஸிலிருந்து வரும்போது வழக்கத்துக்கு மாறாகச் சற்று மகிழ்ச்சியோடு வந்தார் தாமோதரம். திடீரென்று தந்தையின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை நோக்கவே மனோகரி, "என்ன அப்பா, அண்ணாவிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா என்ன!" என்று கேட்டாள்.

"சீச்சீ! அந்தப் பேச்சையே எடுக்காதே என்னிடம். இனி அவனுக்கும் எனக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது! விஷயம் வேறு. ஆபீஸில் என்னை 'ஹெட் கிளார்க்'காக மாற்றி யிருக்கிறார்கள்! அடுத்த மாதத்திலிருந்து இருநூறு ரூபாய்ச் சம்பளம் கிடைக்கும். விரைவிலேயே கடனை அடைத்து விட்டு, உன் கல்யாணத்துக்கும் ஏற்பாடு செய்கிறேன்!" என்றார் அவர்.

மகிழ்ச்சியால் மனோகரியின் உள்ளம் பூரித்தது. அதற்குள் இச் செய்தியை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரிக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது. "என்னமோ தெய்வ சங்கற்பம் அவள் கல்யாணம் சீக்கிரம் ஆகிவிட்டால் தேவலை அந்தப் பையனும் உதவியாக இருக்கக்கூடாதோ!" என்று அவள் சொல்லிக் கொண்டாள்.

மறு நாள் காலை எட்டு மணி இருக்கும். காப்பி அருந்திக் கொண்டிருந்த தாமோதரம் வாசலில் காலடிச் சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தார் ரங்கசாமி கம்பீர நடை போட்டுக் கொண்டே வீட்டுக்குள்ளே வந்தார்.

அவருடைய முகத்திலே ஒரு மலர்ச்சி!

"என்ன சமாசாரம்!" என்று ஆவலோடு கேட்டார் தாமோதரம்.

"எல்லாம் நல்ல சமாசாரந்தான்!"

ரங்கசாமியும் தாமோதரமும் பால்யத் தோழர்கள். திவான் ராமய்யரின் புதல்வர் ரங்கசாமி. ஆதலால் பணத்தைப் பற்றி அவர் இதுவரையில் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

மனோகரியும் சுந்தரியும் அதற்குள் அங்கே ஆஜரானார்கள்.

"என்ன சேதி!" என்று கேட்டார் தாமோதரம்.

"ஒரு வரன் வந்திருக்கு, பேஷான வரன். பையன் பீகாம் ஹானர்ஸ் பரீட்சையில் முதல் வகுப்பில் பாஸ் செய்திருக்கிறான். மூந்நூற்றைப் பது ரூபாய் சம்பாதிக்கிறான் ஒரு கம்பெனியில். நல்ல எதிர்காலம் இருக்கு, நிறையச் சம்பாதிப்பான். மனோகரியைப் பற்றி அவனிடம் சொன்னேன். நாளைக்குப் பெண்ணைப் பார்க்க அழைத்து வருகிறேன்" என்றார் ரங்கசாமி.

கல்யாணமே ஆகிவிட்டாற்போன்ற பிரமை தட்டியதால் மனோகரியின் முகம் சிவந்தது.

"அதுக்கில்லே! இப்போத்தான் சம்பளம் உயர்ந்திருக்கு ஆபீஸில்! இன்னும் நாலைந்து மாசம் போனால்தான் ஏதாவது பணம் புரளும்! இப்போ சல்லிக்காசு கூடக் கிடையாதே கையில்! பெரிய இடத்துப் பையனாச்சே, கொஞ்சம் நன்றாகச் செய்து தர வேண்டாமா! குறைந்த பட்சம் ஐயாயிரமாவது வேண்டாமா!"

"அதெல்லாம் பயப்படாதேயும், நான் பார்த்துக் கொள்கிறேன்! உங்களுக்குப் பணத்தைப் பற்றிய கவலையே வேண்டாம்" என்றார்.

மறு நாள் பிள்ளையாண்டான் பெண்ணைப் பார்க்க வந்தான். இளமையின் எழிலும் பூத்துக் குலுங்கும் யௌவனமும் மனோகரியை மாத்திரமல்ல, தாமோதரத்தையும் சுந்தரியையும் கூட இன்பத்தில் ஆழ்த்தி விட்டன.

பெண்ணைப் பையனுக்குப் பிடித்து விட்டது. விரைவிலேயே விவாகத்தை வைத்துக் கொள்ளலாம் என்றார் பிள்ளையின் தந்தை. அதன்படி அடுத்த மாசம் முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது.

பிள்ளை வீட்டுக்காரர்கள் திரும்பிச் சென்றதும், ரங்கசாமி, "நாளைக்கே முகூர்த்தப் பத்திரிகையை அச்சிட்டுவிடுகிறேன். சீர் வரிசைகளுக்கெல்லாம் 'ஆர்டர்' கொடுத்துவிடுகிறேன். பணமெல்லாம் நான் கவனித்துக் கொள்ளுகிறேன்!" என்றார்.

'இப்படிப்பட்ட நண்பர் எங்கு கிடைக்கப் போகிறார்' என்று ஆனந்தப்பட்டார் தாமோதரம்.

கல்யாண ஏற்பாடுகளெல்லாம் பிரமாதமாக நடந்தன. எல்லாவற்றிற்கும் ரங்கசாமியே முன் நின்று செலவழித்தார். தாமோதரம் ஆபீஸில் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி, "இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளும் எதற்கும்!" என்று ரங்கசாமியிடம் நீட்டினார்.

"அதெல்லாம் காலணாக் காசு வேண்டாம். கடனையெல்லாம் இந்தப் பணத்தில் அடைத்து விடுங்கள்! பாக்கிப் பணத்தைச் சாப்பாட்டுச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார் ரங்கசாமி.

விவாக நாள் நெருங்கிக் கொண்டே இருந்தது. ரங்கசாமி சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார். கல்யாணப் பத்திரிகையை எல்லாருக்கும் அனுப்பலானார் தாமோதரம்.

ஏனோ சுந்தரி அழும் சத்தம் அவருக்கு அந்த சுபவேளையில் எரிச்சலை உண்டுபண்ணியது.

"என்னத்துக்கு அழறே, நல்ல காரியம் செய்யும்போது!" என்று கத்தினார் தாமோதரம்.

"நான் ஏதோ சொல்றேன் என்று பொருட்படுத்தாமல் இருக்காதீர்கள்! வீட்டுக்குத் தலைப் பிள்ளையாச்சு அவன்! கோபு இல்லாம கல்யாணம் நடத்தினால் ஊர் சிரிக்கும். பிள்ளை வீட்டுக்காரர்களும் ஒப்ப மாட்டார்கள்! முதல் பத்திரிகையை அவனுக்கு அனுப்புங்கள்!" என்று கூறியபோது அழுகையும் விக்கலும் விம்மிக் கொண்டு வந்தன சுந்தரியம்மாளுக்கு.

முதலில் விடாப்பிடியாக இருந்த தாமோதரம், கடைசியில் அவள் விருப்பத்திற்கிணங்கி, கோபுவின் ஆபீஸ் விலாசத்துக்கு முகூர்த்தப் பத்திரிகையை அனுப்பினார்.

"நான் நல்லதுதான் செய்கிறேன்; உன் பிள்ளைதான் காலணாவுக்குத் தப்பில்லே! கல்யாணத்திலே முன் நின்று செய்ய வேண்டிய சமயத்திலே எங்கேயோ இருந்து கொண்டு வர பணத்தைச் செலவழித்துக் கொண்டு திரிகிறான்!" என்று தம் ஆத்திரம் தீரக் கொட்டித் தீர்த்தார் தாமோதரம்.

5

வெள்ளிக்கிழமை வீடே அல்லோல கல்லோலப்பட்டது. குறுக்கும் நெடுக்குமாக வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு உலாத்தினார் தாமோதரம். உள்ளே சம்பந்திகள் கூக்குரல் கேட்டது.

கல்யாண முகூர்த்தம் ஆரம்பிக்க ஒரு மணி நேரந்தான் இருந்தது. பம்பாய் மெயில் வந்து அரை மணி நேரம் ஆகி விருந்தது.

மணி விழா



ஆகஸ்டு மாதம் பதினாறும் தேதி அன்று பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் அதன் முன்னாள் தலைவரான ஸ்ரீ எஸ். சீனிவாஸய்யர் அவர்கள் மணி விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ ஏ என். சட்டநாதன் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ சீனிவாஸய்யர் அவர்கள் தமிழகத்திலும், பம்பாயிலுமாகச் சுமார் நாற்பது வருடங்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கிறார். இன்றும்கூட ஒரு உயர்நிலைப் பள்ளியில் பிரின்ஸிபாலாக இருந்து தொண்டாற்றி வருகிறார். பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகத் தொண்டாற்றியதோடு தமிழ் நாடு, தமிழ் மொழி இவற்றின்பால் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பைப் பாராட்டிப் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்து மகிழ்ந்ததோடு பொன்னாடையும் போர்த்திக் கௌரவித்தது.

ஸ்ரீ சீனிவாசய்யருடைய உயர்ந்த குணத்தையும் சிறந்த பண்பையும் பாராட்டிப் பல பிரமுகர்கள் பேசினார்கள்.

எல்லாரும் ஆவலோடு கோபுவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். 'அவன் ஒன்றும் நினைத்துக் கொள்ளாமல் சுமுகமாக வர வேண்டுமே!' என்று ஒவ்வொரு கணமும் வேண்டிக் கொண்டாள் சுந்தரியம்மாள்.

'பூம் பூம்' என்ற சத்தத்துடன் வாசலில் 'டாக்ஸி' வந்து நின்றது. சம்பந்திகள் உட்பட அனைவரும் கோபுவை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

"வாடாப்பா; வயிற்றில் பாலை......!" என்று சுந்தரி ஏதோ கூற ஆரம்பித்தாள்.

ரங்கசாமி, "வந்துட்டானா கோபு பம்பாயிலிருந்து!" என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தார்.

'ஆகா!' என்றார் தாமோதரம். அந்தக் குரலில் வெறுப்பு தொனித்தது. ஆனால் கோபு அதைப் பொருட் படுத்தவில்லை. எப்பொழுதும் போல் தாய் தந்தையரை விசாரித்து விட்டு, தங்கையைப் பார்க்க உள்ளே நுழைந்தான்.

* * *

மனோகரியின் கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்தது. 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டார் தாமோதரம். அரை மணி கழிந்திருக்கும். சாப்பாட்டுக்காக இலை போட்டுக் கொண்டிருந்தனர்.

உள்ளேயிருந்து பரக்கப் பரக்க ஓடிவந்தார் ரங்கசாமி தாமோதரத்திடம். அங்கே கஸ்தூரி ஆலத்தி கரைத்துக் கொண்டிருந்தாள்.

''மிஸ்டர் தாமோதரம்! கல்யாணத்தின் மொத்தச் செலவும் உங்க பையன் கோபாலனுடையதுதான்; ஏதோ நான் செய்வதாக நினைத்துக் கொள்ள வேண்டாம்!'' என்றார் ரங்கசாமி. தேள் கொட்டினாற் போன்ற உணர்ச்சிதான் தாமோதரத்தின் உடல் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது. பேச அவருக்கு நா எழவில்லை.

ரங்கசாமி விளக்கினார்: ''அவன் உத்தமப் புதல்வன், ஸார்! பம்பாயில் ஐந்நூறு ரூபாய் சம்பளம் அவனுக்கு; மாதம் மூந்நூறு சேர்ந்து வந்தான். ஒரு வருஷமாகச் சேமிப்பு செய்து வைத்த பணத்தை ரகசியமாக எனக்கு அனுப்பி விவாகச் செலவைக் கவனித்துக் கொள்ளும்படி செய்திருக்கிறான். இதோ அவன் எழுதிய கடிதம். நான் நடுவில் தூதுவனாக வேலை செய்திருக்கிறேன்......! அவ்வளவேதான்'' என்றார். இதைக் கேட்டதும் தாமோதரத்தின் கண்களில் பொலபொலவென்று ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

கைத்தொழிலும் இயந்திரமும்

ஜி. ஆர். எஸ். ஆனந்தம்

முன் காலத்தில் நமது முன்னோர்கள் சரீரத்தைக் கொண்டு உழைத்துத் தேசத்திற்கும் சமூகத்திற்கும் தேவையானவைகளைப் பெற்று வந்தார்கள். நம் தேசத்தில் புராதன கைத்தொழில்கள் என்ன? அத்தொழில்கள் மறைவதற்குக் காரணம் என்ன என்பதை யோசிக்க வேண்டும். நாம் உடுக்கக் கூடிய உடை அக்காலத்தில் கைத் தறியினாலேயே தயார் செய்யப்பட்டு வந்தது. உண்ணக் கூடிய ஆகாரப் பொருள்கள் எல்லாம் கையினால் தயார் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது இத் தொழில்களை எல்லாம் மிஷின்கள் கைப்பற்றி விட்டன.

அன்றாடம் மனித வாழ்க்கைக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அதாவது அரிசி, மாவு வகைகள், பருப்பு வகைகள், எண்ணெய் முதலியன எல்லாம் கையினால் தயார் செய்யப்பட்டு வந்ததால் ஒவ்வொருவருக்கும் அக்காலத்தில் வேலை கிடைத்து வந்தது.

ஆனால் இன்று ஒரு கிராமத்தில் விளையும் தானியங்களை ஒரு பணக்காரன் ஏராளமாக வாங்கி அதைச் சில தினங்களில் ஒரு இயந்திரத்தின் (Rice Mill) உதவியால் அரிசியாக்கி உடனே பட்டணங்களுக்குக் கொண்டு போய் விற்கின்றான். இதனால் பதுக்கல் வியாபாரம் செய்ய மார்க்கம் ஏற்படுகிறது. கிராமவாசிகள் மறு அறுவடை வரும் வரைக்கும் வேலையில்லாமல், வேலை தேட வெளியூர்களுக்குப் போகின்றார்கள்.

முன் காலத்தில் பல ஆயிரக் கணக்கான மக்கள் செய்து வந்த தொழிலை இப்போது ஒரு சில இயந்திரங்கள் செய்து விடுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. விவசாயம் கிராமங்களில் விருத்தி அடைய வேண்டுமானால் கிராமவாசிகளுக்குத் தாங்கள் இருக்கும் இடத்திலேயே ஸ்திரமான தொழில் இருத்தல் வேண்டும்.

நெல் மிஷின்கள் இல்லாவிட்டால் நித்தம் வேண்டிய உணவுப் பொருள்களுக்கு ஒவ்வொருவருக்கும் மற்றவர்களுடைய உதவி அவசியமாகின்றது. இதனால் பணக்காரன்-ஏழை, உயர்வு-தாழ்வு, வித்தியாசம் இல்லாமல் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நல்லெண்ணத்தோடு அமைதியாக வாழ முடிந்தது.

ஆனால் மிஷின்கள் இல்லாமல் கையினால் உணவுப் பொருள்களைத் தயார் செய்வது தற்காலத்து நாகரிகத்திற்குப் பொருந்தாது; இப்போது அப்படிச் செய்யவும் முடியாது என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இப்போதும் நெல்லூர் ஜில்லாவில் உதயகிரி, கனகிரி தாலூக்காக்களில் மிஷின் இல்லாமல் உணவுப் பொருள்கள் தயார் செய்யப்பட்டு வருகிறதாம். கைக் குத்தல் அரிசியினால் உடலுக்கு ஆரோக்கியம். மிஷின்களில் தீட்டப்பட்ட அரிசியில் முக்கிய சத்து நீங்கிச் சரீரத்திற்குக் கெடுதலை உண்டு பண்ணுகின்றது என்று வைத்திய நிபுணர்கள் சொல்லுகின்றனர். ஆகவே சத்துள்ள ஆகாரம் சாப்பிடுவது நாகரிகமா, அல்லது சத்து நீங்கிய மிஷினால் தீட்டப்பட்ட அரிசியைச் சாப்பிடுவது நாகரிகமா? இதே சமயத்தில் பல ஆயிரக் கணக்கான ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொழில் கிடைத்து வறுமை நீங்கி வாழ்வது நாகரிகமா என்பதைக் கவனித்தல் வேண்டும். தவிர ஒரு சில பணக்காரர்களே பல ஆயிரக்கணக்கான மக்கள் செய்து வந்த தொழிலை நடத்தி லாபம் அடைவது நல்லதா என்பதும் யோசிக்க வேண்டிய விஷயம்.

முன்காலம் போல் நெல், துவரை, கடலை, உளுந்து, மாவு வகைகள், எண்ணெய் வித்துக்கள் எல்லாம் அறவே போட்டியில்லாமல் கையினால் தயார் செய்யப்படுமானால், முக்கியமாகப் பெண்களுக்கு மிகவும் நன்மை ஏற்படும். குடிசையில் வசிப்போரும் தாங்கள் இருக்கும் இடத்திலேயே இத் தொழிலைக் கண்ணியமாக நடத்தி, கௌரவமாக வாழலாம். தாய்மார்களுக்குத் தங்கள்


பெண்கள் அதிகம் உதவி செய்வார்கள். இத்தொழிலை நடத்துவதற்கு அரசாங்கத்தார் முன்பணம் கொடுக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது.

ஒரு குடும்பத்தில் ஒருவர் சம்பாதித்துப் பலர் சாப்பிடுவது மிகவும் கஷ்டம். முன்பு வீட்டில் ஆண்களும் பெண்களும் தங்கள் குடும்பத்தில் இருப்பவருடன் கலந்து வேலை செய்து வாழ்ந்து இன்புற்றிருந்தனர். துவரை, உளுந்து, முதலிய தானியங்கள் வரும் காலத்தில் பெண்கள் வீட்டிலேயே கையினால் தயார் செய்து பிழைத்தனர். இத்தொழிலைச் செய்வோர்களுக்குக் கூலி தானிய வகையாகவே கொடுக்கப் பட்டு வந்தது. இதனால் கூலி வாங்கி அரிசி வாங்க வேண்டுமே என்ற கவலையும் கிடையாது.

இன்று கையினால் தயார் செய்ய விட்டு விட்டால் கூலி அதிகம் கேட்பார்களே என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படலாம். ஆனால் சிலர் நினைப்பது போல் அப்படி ஒன்றும் பிரமாதமாகக் கூலி அதிகம் ஏற்படாது. நெல் குறைந்த விலைக்குக் கிடைத்து அரிசிக்கு விலை அதிகம் ஏற்பட்டால் ஒவ்வொரு குடும்பத்தாரும் சிக்கன முறையைக் கையாளுவார்கள். அதாவது நெல்லாகவே குறைந்த விலைக்கு வாங்கி தினம் தங்களுக்கு வேண்டிய ஒன்று அல்லது ஒன்றரைப்படி அரிசியைத் தாங்களே குத்திக் கொள்வார்கள். இதனால் கூலி அதிகம் கேட்காமல் முன் காலம் போல் ஒரு திட்டமான கூலி தானாக வந்து விடும்.

ஆகவே உடுக்கக் கூடிய உடைகளில், ராஜாஜி சொல்வது போல் வேஷ்டி,

நாட்டில் பஞ்சத்தையும், வறுமை



7. அரசன் வேண்டும்!

அன்று விடியற்காலை மந்திரவாதியின் வீட்டுக்கு ஏழெட்டுப் பேர்கள் வந்தார்கள் அல்லவா? அவர்கள் யார் தெரியுமா?—விதர்ப்ப தேசத்து மக்களின் பிரதிநிதிகள்.

மந்திரவாதியும் பிரபாவும் இருந்த காட்டிலிருந்து சுமார் நான்கு காத தூரத்துக்கு அப்பாலிருந்தது விதர்ப்ப தேசம். அந்த தேசத்து மன்னன் சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு திடீர் என்று மாரடைப்பினால் இறந்து போனான். பாவம், அந்த மன்னனுக்கு ஆண் சந்ததியே இல்லை. தேசம் ஒரு பக்கம் 'ராஜா இறந்து போனானே' என்று ரொம்பவும் துக்கப்பட்டது; மற்றொரு பக்கம் 'அடுத்தாற் போல் நம்மை ஆளுவதற்கு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாருமில்லையே' என்றும் வருத்தப்பட்டது. இப்படி மக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த போது, ஒரு நாள் இரவு அந்தத் தேசத்து மக்களில் ஏழு பேர் ஒரே மாதிரி கனவு கண்டனர். அந்த ஏழு பேர் யார் யார் தெரியுமா?—முதல் மந்திரி, ராஜகுரு, சேனாதிபதி, பொக்கிஷ மந்திரி, ஒரு வைர வியாபாரி, ஒரு சங்கீத வித்வான், ஒரு கருமான் — இவர்கள்தான். இவர்கள் கண்ட கனவு என்ன தெரியுமா?

ஏதோ ஓர் இடத்தில் இந்த ஏழு பேரும் எப்படியோ ஒன்று சேர்கின்றனர். விதர்ப்ப தேசத்திலிருந்து கிழக்கு முகமாக நீண்ட நெடுந்தூரம் பிரயாணம் செய்கிறார்கள்.

அங்கே ஒரு காடு தென்படுகிறது. அந்த மரங்கள் அடர்ந்த காட்டில், கரடுமுரடான பாதையில் நடக்கிறார்கள். ஆம், கால்கள் சோர்ந்து போயின. உள்ளம் சோர்ந்து போயிற்று. இருப்பினும் அவர்கள் நடந்து கொண்டே யிருக்கிறார்கள். கடைசியில் ஒரு வெள்ளை மாளிகை தென்படுகிறது. அந்த மாளிகையின் படி ஏறிக் கதவைத் தட்டுகிறார்கள். அந்த மாளிகையில் தாடி நரைத்த கிழவன் ஒருவன் வந்து கதவைத் திறக்கிறான். அவனிடம் தங்கள் குறையைத் தெரிவிக்கிறார்கள். தங்கள் நாடு மன்னன் இல்லாமல் அவதிப்படுவதைப் பற்றிச் சொல்லுகிறார்கள். உடனே கிழவன் தக்க உபாயம் ஏதோ சொல்லுகிறான். அவர்கள் மனம் திருப்தி யடைந்து விடுகிறது. உற்சாகமாக நாடு திரும்புகிறார்கள்!

இந்தக் கட்டத்தில் அவர்கள் தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டார்கள். தாங்கள் கண்ட கனவை நினைவுப் படுத்திப் பார்த்துக் கொண்டார்கள். எல்லாச் சம்பவங்களும் கோவையாக நினைவுக்கு வந்தன. ஆனால் அந்தக் கிழவன் சொன்ன பதில்தான் என்ன வென்பது நினைவுக்கு வரவில்லை. 'ஆகா! அது மட்டும் நினைவுக்கு வந்து விட்டால், இந்த ராஜ்யத்துக்கு அரசன் இல்லாத குறை நீங்கி விடுமே! அந்தக் கிழவன் சரியான யோசனையல்லவா கூறினான்' என்று இந்த ஏழு பேரும் தனித் தனியாகத் துடித்தனர்.



பொழுது விடிந்ததும், முதல் மந்திரி, ராஜ குருவினிடம் தான் முதல் நாள் கண்ட கனவைப் பற்றிக் கூறி, கடைசியில் விழித்துக் கொண்ட போது மறந்து போன விஷயத்தைப் பற்றியும் கூறினார். இதைக் கேட்ட ராஜகுரு தானும் அதே மாதிரி முதல் நாளிரவு கனவு கண்டதாகவும் தமக்கும் அந்த முக்கியமான விஷயம் மறந்து போய் விட்டதென்றும் கூறி இருவருக்கும் ஒரே மாதிரி கனவு எப்படிக் காண முடிந்தது என்று ஆச்சரியப்பட்டனர். இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த போது சேனாபதி தாம் முதல் நாளிரவு கண்ட ஆச்சரியகரமான கனவைப் பற்றிக் கூறினார்! மூன்று பேர் ஒரே மாதிரி கனவு கண்டிருக்கிறதை அறிந்தபோது அவர்கள் ஆச்சரியம் அதிகமாகியது. கடைசியில் ஒருவர், இருவர், மூவர் அல்ல இப்படி ஒரே மாதிரி கனவு கண்டது, ஏழு பேர் என்று அறிந்தபோது அவர்கள் அடைந்த வியப்பு இவ்வளவு அவ்வளவல்ல.

ஆனால் ஏழு பேரும் அந்தக் கிழவனின் பதிலை மறந்து விட்டார்கள் என்றால் இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என்று நினைத்தனர். கனவில் கண்ட காடும், மாளிகையும், கிழவனும் உண்மையாகவே இந்த உலகில் இருக்கலாம். இதை ஆராய்ந்தே தீரவேண்டும் என்று தீர்மானித்தனர். அதன்படி ஏழுபேரும் விதர்ப்ப நாட்டிலிருந்து கிழக்கு முகமாகப் புறப்பட்டனர். நான்கு நாட்கள் தொடர்ந்து பிரயாணம் செய்தனர். இடை நடுவில் அவர்கள் எங்கும் ஓய்வுக்கோ, உணவுக்கோ தாமதிக்கவில்லை. உள்ளத்தில் கனவில் கண்டது உண்மைதானா என்று அறிய ஆர்வம் இருக்கும்போது யாருக்குச் சாப்பாட்டிலும் தூக்கத்திலும் மனசு செல்லும்?

இவ்விதம் ஒரே குறிக்கோளோடு வந்த அவர்கள் தூரத்தில் மந்திரவாதியின் மாளிகை தெரிந்ததும், "ஆகா! கனவில் கண்ட மாளிகையேதான்!" என்று ஏழு பேரும் சேர்ந்து கூவினர். அவர்களுக்குண்டான மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல.

அடுத்தாற்போல் சிறிது கவலையும் ஏற்பட்டது. கனவில் கண்ட மற்ற விஷயங்களும் நனவாக வேண்டுமே என்பதுதான் அந்தக் கவலை. அந்தக் கவலையில், 'அது விடியற்காலை நேரமாயிற்றே, ஒருகால் அந்தக் கிழவன் தூங்கிக் கொண்டிருந்தால் எழுப்புவது நியாயமா?' என்றெல்லாம் யோசிக்கவில்லை. நேரே சென்று கதவைத் தட்டினர். அந்தச் சமயத்தில்தான் பிரபாவைப் படுக்கச் சொல்லிவிட்டு மந்திரவாதிக் கிழவன் வாசலுக்கு வந்தான். கதவைத் திறந்தான்.

கிழவனைக் கண்டதும் கனவுக்கும் நனவுக்கும் ஒருவித வித்தியாசமுமில்லாதிருப்பதைக் கண்டு அப்படியே பிரமை பிடித்து நின்றனர் அந்த ஏழு பேரும். அவர்களுக்குப் பேச நா எழவில்லை.

மந்திரவாதி "நீங்கள் எல்லோரும் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? என்ன காரியத்தை உத்தேசித்து என்னிடம் வந்தீர்கள்?" என்று கேட்டான்.

மந்திரவாதியின் குரலைக் கேட்டுச் சுய நினைவு பெற்ற முதல் மந்திரி சொன்னார்: "நாங்கள் விதர்ப்ப நாட்டைச் சேர்ந்தவர்கள். எங்கள் மன்னர் இருந்திருந்தாற்போல் அகால மரணமடைந்து விட்டார். அவருக்குச் சந்ததி கிடையாது. எங்களுக்கு ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர் யாராகிலும் வேண்டும்! இதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறோம்."

"இதற்காக நீங்கள் கவலைப் படாதீர்கள். நீங்கள் உங்கள் தேசத்துக்குத் திரும்பிச் செல்லுங்கள். நீங்கள் உங்கள் நாட்டை அடைந்த மறுநாள் விடியற்காலை கோட்டைக் கதவுகளைத் திறக்கிறீர்கள் அல்லவா? அப்பொழுது அந்த அருணோதய வேளையில் முதல் முதலாக ஒரு ராஜகுமாரன் வருவான். அவன் கழுத்தில் மாலையிட்டு அரண்மனைக்கு அழைத்துச் சென்று முடிசூட்டுங்கள்" என்றான் கிழவன்.

இப்படி மந்திரவாதிக் கிழவனும் விதர்ப்ப நாட்டு மக்களும் பேசிக் கொண்டிருந்தபோது, அந்த ஏழு பேரில் ஒருவரான சங்கீத வித்வான் தமது கண் பார்வையை நாற்புறமும் செலுத்தினார். அப்பொழுது ஜன்னல் வழியாகப் பிரபா எட்டிப் பார்ப்பதைக் கவனித்தார்.

பிரபாவின் முக காந்தியையும் அழகையும் கண்ட சங்கீத வித்வான், இவள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள்தான் என்று தீர்மானித்தார்.

(தொடரும்)

யோகாசன சிகிச்சை

வி. என். குமாரஸ்வாமி

1. எல்லாம் சுகத்துக்கே !

மக்களின் வாழ்க்கை லட்சியம் ஆனந்தமே. அச் சுகத்தை அடையவே மக்கள் பல துறைகளில் இறங்கிப் பாடுபடுகின்றனர். கவிபாடுவதும், காவியம் புனைவதும், ஓவியம் வரைவதும், சிற்பங்களைச் சிருஷ்டிப்பதும் மற்றும் பல கலைகளை வளர்ப்பதும் அறிவியல் துறைகளில் இறங்கி அறிவைப் பெறுவதும், விஞ்ஞானங்களை வளர்ப்பதும், தொழில்களை நடத்துவதும், வர்த்தகத்தை வளர்ப்பதும், பரமனை வழி படுவதும் எல்லாம் மானிட வர்க்கத்தின் சுகத்திற்காகவும், ஆனந்தத்திற்காகவும் செய்யப்படுகின்றன.

ஆனால் இவைகளெல்லாம் செவ்வனே செய்ய வேண்டுமானால் எல்லோருடைய உடல் நலமும் நன்றாய் இருத்தல் வேண்டும். உடல் நலம் குன்றினால் உன்னதக் கவிகள் கிளம்பா, கற்பனை மிகுந்த காவியம் எழும்பாது, ஓவியம் ஓடாது, சிற்பங்கள் உருவாகா, கலைகள் வளரா, அறிவுத் துறைகளில் முன்னேற்றம் காண முடியாது, வர்த்தகம் ஓங்காது, தொழில்கள் நடைபெறாது. சுவர் வைத்துத் தான் சித்திரம் எழுத வேண்டும். இவ் வுடலால் தான் சகலமும் நடைபெற வேண்டியிருக்கின்றது. முற்றும் துறந்த முனிவர்களும் இவ் வுடலை அசட்டை செய்ய முடியாது.

இவ் வுடல் நலனைப் பேண உலகில் பலர் பல ஆரோக்கிய விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். எல்லோருடைய வழிகளையும் காணும்போது சற்றேறக் குறைய ஒன்றாய்த்தான் இருக்கின்றன. ஒரு தேசத்தார் ஒரு வழக்கத்தைக் கெட்டது என்று சொல்லும்போது, மற்ற தேசத்தார் அதை நல்லது என்று சொல்ல மாட்டார்கள். அப்படியே நல்ல பழக்க வழக்கங்களும். உதாரணமாக மது பானம் கெடுதி என்று ஆரோக்கிய விதிகளில் இருக்கிறது. அதை எல்லா தேசத்தார்களும் ஒப்புக் கொள்ளத்தான் செய்கிறார்கள். அதைப் போலவே தேகப் பயிற்சி உடல் நலனைப் பேணச் சாலச் சிறந்தது என்றால் எல்லா தேசத்தார்களும் தான் அதனை ஏற்றுக் கொள்ளுவார்கள். நல்லதை நல்லதென்றும், தீயதைத் தீயதென்றும் உலகம் ஒப்புக் கொண்டுதான் தீரும். இம்மாதிரி பொதுவான ஆரோக்கிய விதிகள் பல இருக்கின்றன.

இந்த விதிகளைத் தவறாமல் அனுசரிப்பவர்களுக்கு உடல் நலம் பாதிப்பதில்லை, கெடுவதில்லை. என்றும் ஆரோக்கியமாகவும், சுறு சுறுப்பாகவும் வாழ்வார்கள். ஆனால் மக்கள் எல்லோரும் அவ் விதிகளைப் பல காரணங்களால் அனுசரிக்க முடியாமல் தவறி விடுகின்றனர். அப்பொழுது பல உடல் அசௌகரியங்கள், நோய்கள், பிணிகள் வர ஏதுவாகின்றன. அப்படி ஏதாவது வந்தால் அவைகளைப் போக்கப் பலமுறைகள், வைத்தியங்கள், மருந்துகள் அந்தந்த தேசத்தார்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள். இவைகளில் முக்கியமாக மேல் நாட்டு முறையாகிய அல்லோபதி, ஹோமியோபதி, முதலியனவும், நம் நாட்டு ஆயுர்வேதம் சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் முதலியனவும் முக்கியமாகச் சொல்லலாம். இவை தவிர இயற்கை சிகிச்சையைச் சேர்ந்த ஜல சிகிச்சை, உபவாச சிகிச்சை, உணவு சிகிச்சை, பிராண சிகிச்சை முதலிய பல இருக்கின்றன. இத்தனையும் தவிர கை வைத்தியங்கள்—சாதாரணமாய் வீடுகளில் பாட்டிமார்கள் செய்யும் வைத்தியங்கள்—ஏராளமாய் எல்லா நாடுகளிலும் உண்டு.

இவைகளில் அல்லோபதியைப் போன்று வேறு எந்த வைத்தியங்களும் அவ்வளவு முன்னேற்றமடையவில்லை எனலாம். நிறைமையான ஆராய்ச்சி விஞ்ஞான பூர்வமான முடிவுகள், ரகசியம், ஒளிவு, மறைவு இல்லாமை, கவர்ச்சிகரமான வெளியீடு இவைகளின் மூலம் இம்முறை மக்களிடையே மாறா நம்பிக்கையையும், ஓர் அபிமானத்தையும் பெற்று விட்டது. இன்னும் நமது நாட்டில் வைத்தியத்திற்காகப் படிப்பவர்களும் அம்முறைகளைத் தான் படிக்கிறார்கள். இதில் கவனம் செலுத்துவதைப் போல் நமது நாட்டு முறையாகிய ஆயுர்வேத, சித்த, யூனானி முதலிய முறைகளில் கவனம் இன்னமும் சரிவரச் செலுத்தப்படுவதில்லை. அந்நிய அரசாட்சி இருந்த காலத்தில், அவர்கள் தங்கள் நாட்டு முறைகளுக்கே பிரதானமான இடம் அளித்தார்கள். அப்பொழுது அவர்கள் கொடுத்த கல்வியே நாம் பெறவேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுது நாம் சுதந்திரப் பிரஜைகள். கல்வி முறையில் நமது சர்க்கார் மாறுதல் செய்தாற்போல, இதிலும் துணிந்து முனைந்தால்தான் நமது நாட்டு முறைகளும் விமோசன மடையும்.

ஆனால் இன்றைய நிலைமையில் மேல் நாட்டு முறைகளை முற்றிலும் புறக்கணிக்க முடியாது. எவ்வளவோ அற்புத சாதனங்களுடன் அவை மிக முன்னேற்ற மடைந்துள்ளன. இன்னமும் முன்னேறிக் கொண்டே யிருக்கின்றன. ஆனால் நமது நாட்டு முறைகளிலும் மகா அற்புதமான மருந்துகளெல்லாம் இல்லாமலில்லை. பல தலை முறைகளாக வந்த வைத்தியர்கள் அநுபவ பூர்வமாய் மருந்துகளைத் தயார் செய்து நல்ல பெயர்கூட எடுத்திருக்கிறார்கள். மருந்துகள் மட்டுமல்ல; சுளுக்குகள், எலும்பு முறிவுகள் முதலிய மிகச் சிக்கலான கேஸ்களுக்குக்கூட மேல் நாட்டு வைத்தியர்களைவிட மிகத் திறமையாய் நடத்துகிறவர்களும் இருக்கின்றார்கள். எலும்பு முறிந்து கால், கைகளை வெட்டி எடுத்து விடவேண்டியதுதான் என்று மேல் நாட்டு வைத்தியர்கள் முடிவு கட்டிவிட்ட எத்தனையோ பேர்களைப் புத்தூர் வைத்தியம் என்ற முறையில் குணப்படுத்துகின்றார்கள். ரோகணி பேதி என்று பல மருந்து கொடுப்பார்கள். எதிலும் நிற்காது. அப்பேர்ப்பட்டவர்களைச் சில இடங்களில் நரம்புகளைப் பிடித்து இழுக்கவோ, தட்டவோ செய்தால், மிக ஆச்சரியப்படும் வகையில், இத்தனை நாளும் எந்த மருந்துகளுக்கும் கேட்காத பேதி உடனே நின்றுவிடும். இப்படியே எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம்.

இவர்க ளெல்லோரும் முறைப்படி கலாசாலைகளில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் அல்ல. பல தலை முறைகளாகவும், அநுபவ பூர்வமாகவும் வந்தவர்கள். இம்முறைக ளெல்லாம் தற்கால விஞ்ஞான ரீதியாய் இன்னமும் நன்கு ஆராய்ச்சி

செய்து நல்ல முறையில் நடத்தலாம். வெறும் மேல்நாட்டு முறைகளை மட்டும் வைத்தியப் படிப்பில் சொல்லித் தராமல், நம் நாட்டு முறைகளையும் சொல்லித் தரவேண்டும். அப்படிச் சொல்லித் தந்தால் நம் நாட்டு முறைகளும் முன்னேற்ற மடைவதுடன், பல கோடி ரூபாய் நமது நாட்டை விட்டு அந்நிய நாட்டிற்குப் போகாமல், நமது நாட்டில் இருக்கச் செய்யலாம்.

ஆனால் இவைகளெல்லாவற்றையும் விட மிக உன்னதமான சிகிச்சை ஒன்று இருக்கின்றது. உலகத்திலுள்ள தேசங்க ளெல்லாம் மனிதன் மிருக நிலையில் வாழ்ந்த காலத்திலேயே, நம் பாரத நாட்டு மக்கள் நாகரிகப் படியில் மிக முன்னேற்ற மடைந்து வாழ்ந்து வந்தார்கள் என்று சரித்திரம் சான்று கூறுகின்றது. அக் காலத்திலேயே மக்கள் ஆரோக்கியமாக வாழ, திடகாத்திரமாக வாழ, நோயின்றி வாழ, தீர்க்காயுளுடன் வாழ வழிகளை அமைத்து விட்டார்கள்.

மண்ணில் பிறந்த எந்த உயிரும் முன்னேற்ற மடையவே விரும்புகிறது. அவ்வாறு ஆதி முதல் முயன்று, முயன்றே இன்று இந்த உலகம் இந்த நிலைமையில் காட்சி அளிக்கிறது. இதில் எத்தனையோ புதிதுபுதிதாகத் தோன்றியிருக்கின்றன. இது உலக நியதி. இதில் மனிதன் மட்டும் விலக்கல்ல; மானிடப் பிறவிதான் மற்றெல்லாப் பிறவியை விட மேலாகக் கருதப்பட்டாலும், அந்த நிலையிலேயே மனிதன் வாழ விரும்பினான் இல்லை. முன்னேற்றம்! முன்னேற்றம்! இதுவே அவன் வாழ்க்கை இலட்சியம். அப்படி முன்னேற்றமே இலட்சியமாகக் கொண்டு சென்றால் அதன் முடிவுதான் என்ன! எதில் போய் முடிவது! அதற்கும் விடை கண்டார்கள் நமது முன்னோர்கள்.

மனிதனாய்ப் பிறக்கும் ஒவ்வொருவனும் இறைவனோடு கலக்கும் ஒரு உன்னத நிலைக்கு வரவேண்டியதுதான் கடைசி எல்லையாகக் கொண்டார்கள். இறைவன் என்றால் உலகை இயக்கும் சக்தியாகக் கொள்ளலாம். இயற்கையாகக் கொள்ளலாம். அதாவது மகா உன்னதமான ஒரு நிலையை அடைவது என்று கண்டார்கள். ஆனால் அந்நிலை ஒரே பிறவியில் அடைய முடியாது. அவரவர்களின் முயற்சிக்கும், செயலுக்கும் தக்க முன்னேற்றம் அடையும். அதற்குப் பல படிகளை ஏற்படுத்தினார்கள். அதற்குத்தான் அஷ்டாங்க யோகம், அதாவது எட்டுப் பாகங்களைக் கொண்ட யோகம், இயமம், நியமம் என்ற முதல் இரண்டு படிகளும், மக்களை ஒழுக்கமுடன், உத்தமர்களாய் வாழச் சொல்லுகின்றது. மூன்றாவது படியாகிய ஆசனம் உடலை உறுதிப்படுத்தச் சொல்லுகின்றது. இந்த ஆசனமானது உடலை உறுதிப்படுத்த மாத்திரம் உபயோகப்படுவதல்ல. பிணிகளைப் போக்கும் சிறந்த குணமும் இதற்குச் சிறப்பாய் அமைந்திருக்கின்றது. அதனால் இம் முறையால் அதாவது ஆசனங்களால் பிணியைப் போக்குவதற்கு யோக ஆசன சிகிச்சை என்று அழைப்பது பொருத்தமாயிருக்கும்.

அல்லோபதி, நாட்டு முறைகளைப் பற்றியெல்லாம் முன்பு சொன்னோம். ஆனால் யோகாசன சிகிச்சையானது, மற்றெல்லாச் சிகிச்சைகளைவிட, மற்றெல்லா வைத்தியங்களை விட மிக உன்னதமானது, உயர்ந்தது, உகந்தது, உயர்வளிப்பது, ஒப்பற்றது, ஈடு இணையில்லாதது, சிக்கனமானது, எல்லோராலும் எளிதில் கையாளக் கூடியது. ஏழை — பணக்காரன் முதல், பாட்டாளி—பட்டதாரி முதல் பாமரன்—பரம ஞானி முதல், சிறியவர்—வயதானவர்கள் முதல் ஆண், பெண் சகலரும் சுலபமாய் அனுசரிக்கக் கூடியது.

அப்பேர்ப்பட்ட ஓர் அரும் பெரும் கலையை, மகத்துவம் பொருந்திய கலையை, கவனிப்பாரற்று, போற்றுவார் அற்று, வளர்ப்பாரற்று, மற்ற நாட்டு முறைகளைப் போலவே இதுவும் இருந்து வந்தது. மக்கள் நலனுக்காக என்று ஏற்பட்ட அதி அற்புத, சிரஞ்சீவி வரம் பெற்ற நமது யோகக் கலையானது, ஓராயிரம் வருடம் அந்நிய அரசாட்சியால் மறக்கடிக்கப்பட்டு, ஓய்ந்து கிடந்தது. அந்தச் சமயத்தில் அந்நியநாட்டு நாகரிக மோக வலையில் மூழ்காத சில யோகிகள், சந்நியாசிகள், துறவிகள் மடியில் இந்தக் கலையானது வளர்ந்தது.

அப்படி அவர்கள் இக்கலையை வளர்த்ததாலேயே யோக ஆசனங்கள் என்றால் யோகிகள், சந்நியாசிகள், துறவிகள்தான் செய்யக் கூடியது நம்மைப் போன்ற சாதாரணக் குடும்பஸ்தர்கள் செய்யக் கூடாதது என்று மக்கள் தவறாக நினைக்க ஆரம்பித்தார்கள். அதற்குத் தகுந்தாற்போல் சிலர் யோகி என்று பெயர் வைத்துக் கொண்டு ஜனங்கள் கூடும் மூலைகளில் கல்லடி மங்கன்போல மிகக் கஷ்டமான—மக்கள் பார்த்துப் பிரமிக்கத் தகுந்த சில ஆசனங்களையெல்லாம் போட்டு, காசுகளை வசூலித்து வயிறு வளர்த்து வந்தார்கள். சிலர் பொது மேடைகளில் செய்து 'சபாஷ்' பட்டம் பெற்றும் வந்தார்கள்.

ஆனால் இவ்வளவு கஷ்டமான ஆசனங்களைச் செய்யும் இவர்களின் ஒழுக்கங்களைக் கவனித்தால் சுத்த மோசமாக இருக்கும். எனவே வயிற்றுப் பிழைப்புக்கு இவைகளைக் கையாளுவதைத் தவிர, இவற்றினால் அவர்கள் அடைந்த பலன் ஒன்றுமிருக்காது. இப்பேர்ப் பட்டவர்கள் செய்யும் கடின ஆசனங்களைப் பார்த்த ஜனங்கள் 'யோகாசனங்கள் என்றால் இவ்வளவு கஷ்டமானதா! அப்பப்பா! எப்படிக் காலையும், கையையும் போட்டு முறித்துக் கொள்ளுகின்றான்! உடலில் எலும்புகள் இருப்பதாகவே தெரியவில்லையே!' என்று சொல்லுவதோடு சரி. கனவிலும்கூட 'ஆசனங்களை நாம் செய்யலாம்' என்று நினைக்க மாட்டார்கள். சிலர் தௌதி (வஸ்திரத்தை விழுங்கி எடுத்தல்) நேத்தி (மூக்குத் துவாரங்களில் ரப்பர் குழாய் போட்டு இழுத்தல்) மூக்கால் ஜலம் பால் முதலியவைகளைக் குடித்தல், மற்றும் வஜ்ரோலி முதலியவைகளைச் செய்து பிரமிப்பை உண்டாக்குவார்கள்.

இவைகளெல்லாம் மிக உயர்ந்த ஆசனங்களைச் சேர்ந்த கிரியைகள்தான். ஆனால் இவைகளெல்லாம் எல்லோராலும் செய்ய முடியாது. அவசியமுமில்லை. ஆனால் இந்த யோகாசன சிகிச்சையில் சொல்லப் போகும் யோகாசன சிகிச்சையானது, எல்லோராலும் எளிதில் கைக்கொள்ளக் கூடியது. குடும்பஸ்தர்கள் செய்யக் கூடியது. நம்மைப்போல எல்லா உலக விவகாரங்களில் ஈடுபட்டவர்களாலும் அனுசரிக்கக் கூடியது. இதில் பயமோ, பிரமிப்போ அடையக்கூடிய விஷயம் ஒன்றுமில்லை. அவ்வளவு எளிதானது; சிரமம் எதுவும் இல்லை.

இந்தச் சுலபமான சிகிச்சை முறைகளை மக்கள் எல்லோரும் சுலபமாக அறிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்தி நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என்பதுதான் என் விருப்பம். சிகிச்சை முறைகளைக் கவனமாகப் படிக்க வேண்டும். (தொடரும்)

நமது சோப்புத் தொழில்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மாகாண சுயாட்சி வந்ததல்லவா? அப்போது எல்லோருமே பூரண சுதந்திரம் கிடைத்து விட்டது போல் சந்தோஷப் பட்டோம். அதிலும் பல காங்கிரஸ் தொண்டர்கள் அடைந்த குதூகலம் கொஞ்ச நஞ்சமல்ல. அத்தகைய தொண்டர் ஒருவர், ஒரு மாகாணப் பிரதமரிடம் சென்று, தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு, "முதலில் நீங்கள் மதுவிலக்குத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் ஏழைகளுக்கு உண்மையான கஷ்ட நிவாரணம் அளித்ததாகும். கதர் திட்டமும் கொண்டு வந்து விடுங்கள். ஆலயப் பிரவேசத்தைச் சட்டமாகச் செய்தால்தான் ஹரிஜனங்களுக்கு உண்மையான தொண்டு செய்ததாகும்..." என்று மூச்சு விடாமற் பல சீர்திருத்தங்களைச் சொல்லிக் கொண்டே போனார்.

கடைசியில் ஒருவாறு அவர் நிறுத்தியவுடன் அந்தப் பிரதமர், "பேஷாக, நீங்கள் சொன்ன அத்தனை சீர்திருத்தங்களையும் செய்து விடுவோம். அதற்குமுன் ஓரணா கொடுத்து சோப்பு வாங்கி, உங்கள் சட்டை வேட்டிகளை நன்றாகத் துவைத்துப் போட்டுக்கொண்டு வாருங்கள். முதலில் அந்தச் சீர்திருத்தம் ஆகட்டும்" என்றார்.


உலகத்தைச் சீர்திருத்துவதற்கு முன்பு முதலில் நம்மைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டாமா? ஒன்றுமில்லா விட்டாலும் புற அழுக்கில்லாத உடலும், துணியுமாகிலும் பெற்றிருக்க வேண்டும் அல்லவா? இதை உத்தேசித்தே "கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக்குடி" என்று நம் முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள் அல்லவா?

இந்தப் பழமொழி ஏற்பட்ட காலத்தில் நம் நாட்டில் 'சோப்பு' உபயோகிக்கும் வழக்கம் ஏற்படவில்லை. ஆனால் இப்பொழுதெல்லாம் கந்தையைக் கசக்குவதற்குச் சோப்பு வேண்டியிருக்கிறது; உடம்பைத் தேய்த்துக் குளிப்பதற்குச் சோப்பு வேண்டியிருக்கிறது. மற்ற எந்த நாட்டையும் விட நம் நாட்டில்தான் மிக மலிவான விலையில் சோப்பு விற்கிறார்கள். ஆயினும், மற்ற தேசங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் தேசத்தின் ஒரு மனிதனின் சராசரிச் சோப்புச் செலவு மிகக் குறைவு. அமெரிக்காவில் ஒரு மனிதன் 25 பவுண்டு சோப்பு உபயோகிக்கிறான். நம் நாட்டில் 12 அவுன்ஸ்தான்! அதாவது 100-ல் 3 பங்குதான்.

நமது தேசத்தின் சோப்புத் தேவை 270,000 டன்கள் என்று திட்டக் கமிஷன் கூறுகிறது. இதில் 2,60,000 டன்கள் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திர சாதனங்கள் நம்மிடம் இன்று இருக்கின்றன என்று சொன்னால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

திட்டக் கமிஷன் கூறும் எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றுவதில் எத்தனையோ ஆண்டுகள் பிடிக்கும் என்று தோன்றும்போது, இந்தச் சோப்புத் தொழில் மட்டும் திட்டக் கமிஷன் கூறுவதை இன்றே நிறைவேற்ற முடியும் என்றால் ஆச்சரிய

சென்ற ஜூன் மாதம் 2-ம் தேதி பம்பாயில் நிகழ்ந்த இந்திய சோப்புத் தயாரிப்பாளர்கள் மகாநாட்டில், வரவேற்புக் குழுத்தலைவர் ஸ்ரீ எஸ். பி. கோத்ரஜ் வரவேற்புரை நிகழ்த்துகிறார். அவருக்கு வலப்புறம், உட்கார்ந்திருப்பவர் உதவி வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. பி. கர்மார்கர். படத்தின் இடது கோடியில் காந்தி குல்லாய் அணிந்து உட்கார்ந்திருப்பவர்தான் பம்பாய் மாகாண காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். கே. பட்டீல்.





இந்திய சோப்புத் தயாரிப்பாளரின் மகாநாட்டுக்கு வந்திருந்த வர்த்தகப் பிரமுகர்கள்

மாகத் தானே இருக்கும்! ஆனால் இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை என்பதைப் பின்கண்ட விவரங்கள் மிகவும் விளக்கமாகக் கூறும்.

இந்தியாவில் சோப்புத் தொழில் ஆரம்பமாகிக் கிட்டத்தட்ட எழுபது வருஷங்கள் ஆகின்றன. அந்நிய நாட்டுப் போட்டியுடன் ஈடு கொடுத்து இத்தனை நாள் வாழ்ந்து, வளர்ந்து வந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் நம் நாட்டுச் சோப்புகள் மேல் நாட்டுச் சோப்புகளை விட எவ்விதத்திலும் தரம் குறையாம லிருப்பதுதான். நம் நாட்டுச் சோப்புகள் பெரும்பாலும் தாவர எண்ணெய்களைக் கொண்டே செய்யப்படுகின்றன. இப்படி தாவர எண்ணெயை உபயோகித்தே மேல் நாட்டுச் சோப்பு எதற்கும் சமானமான சோப்புச் செய்யலாம் என்று நிரூபித்த பெருமை இந்திய சோப்புத் தொழில் அதிபர்களைச் சேர்ந்தது.

நம் நாட்டில் பெரிய அளவில் சோப்புகள் தயார் செய்யும் தொழிற்சாலைகள் 42 இருக்கின்றன. இவற்றில் வாசனைச் சோப்புகள், துணிக்குப் போடும் சோப்புகள், 'ஷேவிங் ஸ்டிக்'குகள், சோப் தூளுக்குகள் ஆகியவை உற்பத்தியாகின்றன.

இவை தவிர, நம் நாட்டில் சோப்புச் செய்தல் நீண்ட நாட்களாகக் குடிசைத் தொழிலாக மதிக்கப்பட்டு வந்துள்ளது. ஆகவே, சோப்புத் தயாரிக்கும் சிறு சிறு தொழிற்சாலைகள் 4000-க்கு மேல் இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளையும் இவைகளையும் கொண்டே நம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதோடன்றி, அக்கம் பக்கத்திலுள்ள நாடுகளுக்கும், நாம் பலவித சோப்புகள் ஏற்றுமதியும் செய்யக் கூடும்.

ஆனால் இன்று நமது நாட்டுச் சோப்புத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டுத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக் கூடிய சக்தியில், 30 சத விகிதம் தான் உற்பத்தி செய்கின்றன.

மேலும், சோப்புத் தொழிலுக்கு அவசியமான மூலப்பொருளாகிய தேங்காய் எண்ணெய், கடலெண்ணெய், பாம் ஆயில், மார்ரோ முதலியவற்றின் விலைகள் ஏகத்தாறுக ஏறியிருக்கின்றன. 1940 விலையை விட ஏழு மடங்கு உயர்ந்திருக்கிறது இன்று தேங்காய் எண்ணெயின் விலை. இப்படியே ஒவ்வொரு எண்ணெயின் விலையும். எனவே குடிசைத் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் படும் கஷ்டம் கொஞ்சம் அல்ல. இவற்றிற்கெல்லாம் அரசாங்கம் விலைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும். அல்லது இலங்கை, மலேயா, சிங்கப்பூர் முதலிய இடங்களிலிருந்து எண்ணெயை அரசாங்கமே விலைக்கு வாங்கித் தொழிலுக்குச் சகாய விலையில் கொடுத்து உதவ வேண்டும்.

நமது சோப்புகள் மிகவும் தரம் வாய்ந்த சோப்புகள். வெளி நாட்டுச் சோப்புகள் எதனுடனும் சுலபமாக ஈடு நிற்கக்கூடிய சோப்புகள். இவற்றை நம் நாட்டிலிருந்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களில் ஒன்றாகச் சேர்க்க வேண்டும்.

மொத்தத்தில் சோப்பின் வழவழப்புத் தன்மையைச் சோப்புக்கே விட்டு விட்டு, நமது சர்க்கார் உறுதியும் உருப்படியுமான உதவிகள் சோப்புத் தொழிலுக்குச் செய்வார்கள் என்று சோப்புத் தொழில் அதிபர்கள் நம்புகிறார்கள்.

பாமாவின் உள்ளம்

கௌஸல்யா

குழந்தை சந்துருவின் ஆண்டு நிறைவுக்கு இன்னும் மூன்றே நாட்கள்தான் பாக்கி யிருந்தன. தங்களுடைய மூன்று வருஷ ஆதர்ச தாம்பத்திய வாழ்க்கையின் முதற்கனியாகத் தோன்றியிருக்கும் சந்துருவின் ஆண்டு நிறைவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் போகும் பெருமையிலும், மகிழ்ச்சியிலும் பூரித்துத் துள்ளிக் கொண்டிருந்தன லலிதா—கோபாலன் இருவர் உள்ளங்களும். சந்துருவுக்காக வாங்கி வந்திருக்கும் கொலுசு, தண்டை, கைக்காப்புடன் மெல்லிய தங்கச் சங்கிலியால் இணைக்கப்பட்டிருந்த மோதிரம், முதல் முதலாகச் சாதம் ஊட்டுவதற்காகச் செய்திருந்த வெள்ளிக் கிண்ணம் முதலியவைகளை பீரோவிலிருந்து எடுத்துக் கீழே வைத்துக் கொண்டு பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள் லலிதா.

அன்றுதான் ஊரிலிருந்து வந்திருந்த கோபாலனின் தம்பி சுந்தரம் தன்னுடைய பெட்டியிலிருந்த துணி மணிகள் மற்றுமுள்ள சாமான்கள் முதலியவற்றை வெளியே எடுத்துச் சீர்ப்படுத்திக் கொண்டிருந்தான். சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் பெட்டியடியிலிருந்த காகிதப் பை ஒன்றைப் பத்திரமாக எடுத்துக் கொண்ட அவன், கோபாலனின் அறைக்கு வந்தான். "அண்ணா!......இது பெரிய அண்ணாவும், மன்னியும் சந்துருவுக்கு வாங்கியிருக்கிற 'வெகுமதி!' உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்" என்று தன் கையிலிருந்த பையைக் கோபாலனிடம் கொடுத்தான்.

"ஏன்! அவர்கள் ஆண்டு நிறைவுக்கு வரப் போகிறதில்லையா என்ன!......இதை முன்னதாகக் கொடுத்தனுப்புவானேன்!" என்று வியப்புடன் ஏக காலத்தில் கேட்டனர் கோபாலனும் லலிதாவும்.

"இல்லை......அண்ணாவுக்கு லீவு கிடைக்கிறது கஷ்டமாயிருக்கும் போல் தோன்றுகிறதாம். ஒரு சமயம் லீவு கிடைக்காமல் வர முடியாமல் போய் விட்டால் என்ன செய்கிறது என்று இதை என்னிடம் கொடுத்தனுப்பி விட்டார். அதுவுமின்றி அந்த ஊரிலிருந்து இங்கே வருகிறது என்றால் ரயில்சார்ஜ் ரொம்ப ஆகிறது. கொஞ்சநாளாகவே அவர்களுடைய நிலைமை ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதென்று நான் போன கடிதத்திலேயே உங்களுக்கு எழுதியிருந்தேனே! அது வேறே கஷ்டம். இன்னும் கேட்டால் அதைப் பார்த்து மனசு சகிக்காமல்தான் ஏதோ அவருடைய ஆசைக்குப் போகேன்று பெயர் பண்ணிவிட்டு நானே இவ்வளவு சீக்கிரம் ஊரிலிருந்து திரும்பி விட்டேன். அதனாலே இப்போது ஒன்றும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. கூடியவரை முயற்சி செய்து எப்படியாவது மன்னியையும் அழைச்சிண்டு வரப் பார்க்கிறேன், என்றுதான் சொல்லியிருக்கிறார்..." என்று சொல்லிவிட்டு அறையை விட்டுச் சென்று விட்டான் சுந்தரம்.

"இப்படிக் கொடுங்கோ அதை!"—என்று தன் பெரிய மைத்துனர் தன் குழந்தைக்காகக் கொடுத்தனுப்பி யிருக்கும் வெகுமதி என்னவென்றறியும் ஆவலில் கையை நீட்டினாள் லலிதா.

கோபாலன் கொடுத்த பைக்குள், நீலநிற வெல்வெட்டில், சேர்த்தாற்போல் இணைத்துத் தைக்கப்பட்டிருந்த சட்டையும் நிஜாரும் அப்படியே 'ரெடிமேடா'க வாங்கியது என்பதற்கு அடையாளமாக அழகிய தையல் வேலைப்பாடுகளுடன் மெல்லிய வெள்ளை நிறக் காகிதத்தில் சுற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

வைத்த கண் வாங்காமல் அந்தச் சட்டையையும், நிஜாரையுமே திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த லலிதாவின் முகத்தில் திடீரென்று ஏதோ மாறுதல் கண்டது. "...ஐயோ!...இது உங்கள் அண்ணாவின் குழந்தை முரளியினுடைய ஆண்டு நிறைவன்று ஒரே ஒருதரம் தானே கொஞ்ச நேரம் போட்டுப் பார்த்தோம்! நம்ப நிலைமையிலே வேறே வாங்க முடியாதுன்னு அதையே கொடுத்தனுப்பி யிருக்கிறார்கள்!......எனக்கு நன்றாக ஞாபக மிருக்கிறது. இது அதுவே தான்! என்ன கெட்ட எண்ணம்!"

"போதும்! நிறுத்து! தீர விசாரிக்காமல் இப்படிப்பட்ட ஒரு குற்றச் சாட்டை நீ சாட்டக் கூடாது. ஏன்! அதே மாதிரியில் கடையில் வேறு இருக்கவே இருக்காதா என்ன! அதுவுமில்லாமல் எங்க அண்ணா மன்னிக்கு அதுமாதிரியான கெட்ட எண்ணம் ஒரு நாளும் கிடையாது!" என்றான் அவன். "அதெல்லாம் எனக்குத் தெரியாது!...நான் அந்தச் சட்டையைக் குழந்தைக்குப் போட மாட்டேன்! எனக்குப் பயமாயிருக்கு!..." என்று உறுதி தொனிக்கும் குரலில் கூறிய லலிதாவைத் தாங்க முடியாத சினத்துடன் உறுத்து நோக்கினான் கோபாலன்.

"இதோ பார் லலிதா! ஏற்கெனவே தங்களுடைய ஒரே அருமைக் குழந்தையும் போய் விட்டதே என்னும் அதே ஏக்கத்திலே எங்க அண்ணாவும், மன்னியும் மனசு நொந்து போகும் போது, புண்ணிலே கோல் இடுவது போல நீ அன்றைக்கு அவர்கள் வந்திருக்கும்போது இது மாதிரி துடுக்குத்தனமாக ஏதாவது செய்தால் அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்!" என்றான் கோபாலன்.

'விருக்' கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே சென்ற லலிதா, 'தொப்'பென்று அந்தப் பையைக் கீழே போட்டு விட்டு முகத்தை 'உர்'ரென்று வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். அடுக்களையில் ஏதோ மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்த லலிதாவின் தாயார் ஜனகம், "என்னடீ லலி!..." என்று திடுக்கிட்டு வினவியவாறே அவள் விட்டெறிந்த காகிதப் பையை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். லலிதா மடமடவென்று நடந்த விஷயத்தைக் கூறி முடித்தபோது, கைகளிரண்டையும் தட்டி முகவாயில் வைத்துக்கொண்டு பரத காட்டிய பாவத்தில் ஒரு கணம் நின்ற ஜனகம், "ஆமாண்டீ! அந்த பாமாவோட வயிற்றெரிச்சலைப் பார்த்தாயோன்னோ!...உங்க மச்சினருக்கு வேண்டுமானால் தன்னுடைய தம்பி குழந்தையாயிற்றே என்று ரத்த பாசம் இருக்கும். உன் ஓர்ப்படி அயலார் வீட்டுப் பெண்தானே!" என்று லலிதாவின் எண்ணத்திற்குத் தூபம் போட்டு அதிகமாக்கிப் புகையச் செய்தாள்.

* * *

கோபாலனுடன் கூடப் பிறந்த சகோதரர்கள் இருவர். கோபாலனுக்கு மூத்தவன் ஜெயராமன். இளையவன் சுந்தரம். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து விட்ட காரணத்

தினால், தானே தாய், தந்தை, வீட்டுக்குப் பெரிய பிள்ளையாதலால் மூத்த சகோதரன் எல்லாமாக ஆகிவிட்ட ஜெயராமன் தன் சகோதரர்களைப் பாசத்துடன் வளர்த்துப் பெரியவர்களாக்கினான்.

படிப்பு முடிந்து ஒரு வேலையில் அமர்ந்தவுடன், தன்னுடைய வாழ்க்கையில் ஒரு புது மலர்ச்சியை உண்டாக்கப் பாமாவின் கரம் பிடித்தான் ஜெயராமன். பாமா தன் மைத்துனர்களிருவரையும் மரியாதையுடன் கூடிய அன்புடன் நடத்தி வந்தாள். தான் படித்தது போதும் என்று ஸ்கூல் பைனல் முடிந்ததும் பொறுப்பான தொரு வேலையில் அமர்ந்து தன் சகோதரன் கோபாலனை ஸ்கூல் பைனல் முடிந்ததும் கல்லூரியிலும் சேர்த்து பி.ஏ. வரை படிக்க வைத்த காரணத்தால், ஆபிஸிலிருந்தே ஜெயராமன் பொருளாதார நெருக்கடியில் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தான்.

கோபாலன் பி. ஏ. முடித்தவுடனேயே அவனுக்கு நெசவுத் தொழிற்சாலை யொன்றில் நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்தது. பின்பு சில நாட்களுக்கெல்லாம் பாமாவுக்கு ஓர்ப்படியாக, கோபாலனின் மனைவியாக வந்து சேர்ந்தாள் லலிதா. லலிதா புக்ககம் வந்தபோது பாமா ஆறு மாதக் கர்ப்பிணி. அவளைத் தன் சொந்த சகோதரியைப் போல் அருமையுடன் உட்கார வைத்து ஓடியாடிக் காரியங்கள் செய்த லலிதாவைக் கண்டு கோபாலன் பூரித்துப் போய் விட்டான்.



பின்பு சில நாட்களுக்கெல்லாம் ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் பாமா. லலிதா சதா சர்வகாலமும் தன் ஓர்ப்படி குழந்தையை—முரளியைக்—கொஞ்சிக் கொஞ்சி மகிழ்ந்தாள். அவர்களுடைய ஒற்றுமையைக் கண்டு சகிக்காதது போல் தானோ என்னமோ, விதி, கோபாலனுக்குச் சென்னைக்கு உத்தியோக மாற்றலை ஏற்படுத்தியது. பிறந்தது முதல் ஒன்றாகவே இருந்து வளர்ந்து விட்ட சகோதரர்கள் ஒருவரையொருவர் பிரிய மனமின்றி உள்ளம் கலங்கிக் கண்ணீர் வடித்தனர்.

லலிதாவுக்குக் கேட்கவே வேண்டாம். தன் கணவனுக்கு இந்த மாற்றல் உத்தியோகத்தினால் இனிச் சம்பள உயர்வுகூட ஏற்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியைக் கூட அவள் பாராட்டாமல் தங்களைப் பிரிப்பதற்காக வென்றே ஏற்பட்ட அந்த வியாஜத்தை மனமாரச் சபித்தாள். "போய் விட்டு வா லலிதா!......குழந்தை முரளியின் ஆண்டு நிறைவுக்குத் தவறாமல் முன்னதாகவே வந்துவிடு..." என்று கூறிக் கண்களில் கண்ணீர் பொங்கப் பிரிய மனமின்றி அவளுக்கு விடை கொடுத்து அனுப்பினாள் பாமா.

தங்களுடைய குடும்பத்திலேயே முதல் முதல் குழந்தை என்று ஜனித்த முரளியின் ஆண்டு நிறைவைப் பிரமாதமான முறையில், ஏராளமான செலவில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த ஜெயராமன் முன்னதாகவே வரச் சொல்லிக் கோபாலனுக்குக் கடிதம் எழுதிப் போட்டான். கோபாலனும் அவன் அழைப்புக்கிணங்க லலிதாவையும் அழைத்துக் கொண்டு முன்னதாகவே வந்து விட்டான்.

ஆண்டு நிறைவன்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் பம்பரமாகச் சுழன்று வேலை செய்தாள் லலிதா. பாமாவை அவள் சமையலறைப் பக்கம் வர விடவே இல்லை. பாமா முரளியை விதம்விதமாக அலங்கரித்துப் பார்த்துக் கொஞ்சி மகிழ்ந்தாள். அன்று மாலை முரளியை மணையில் உட்கார வைத்துப் பாடவேண்டும் என்று சொல்லி ஊரையெல்லாம் அழைத்துவிட்டு வந்தாள் லலிதா.

ஆண்டு நிறைவு விழா முடிந்து லலிதாவும் கோபாலனும் ஊருக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் சென்னைக்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் லலிதாவுக்குச் சந்துரு பிறந்தான். அதே சமயம் பாமா ஜெயராமனுடைய மகிழ்ச்சிக்கு அஸ்தமனம் ஏற்பட்டு விட்டது. திடீரென்று சில நாட்களாக உடம்பு சரியில்லாமலிருந்தது முரளிக்கு. இதனால் தவித்துப் பதை பதைத்துப் போன ஜெயராமன் சிறந்த டாக்டர் ஒருவரிடம் முரளியின் உடம்பைக் காண்பித்துப் பணத்தைப் பணமாகப் பாராமல் செலவழித்தான். ஆனால் என்ன செய்தும் பலனில்லாமல், ஒரு க்ஷண நேரம் தன் வர்ண ஜாலங்களால் மாயத்தோற்றம் காட்டி மறைந்துவிடும் வான வில்போன்று உலகத்தை விட்டே மறைந்து விட்டான் முரளி.

விஷயம் தெரிந்தவுடன் கோபாலன் மட்டும் தாங்க முடியாத சோகத்துடன் அண்ணா மன்னியிடம் வந்து துக்கம் விசாரித்து விட்டுச் சென்றான். அப்போதுதான் பிரசவித்த புதிதாகையால் அதே சாக்கை வைத்துக் கொண்டு அவளைத் துக்கம் விசாரிக்க அனுப்பக் கண்டிப்பாக மறுத்து விட்டாள் ஜனகம். தாயின் உபதேசத்தால் லலிதாவுக்குப் பாமாவின் மேலிருந்த பிணைப்பும், பாசமும் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து கொண்டே வந்து விட்டது. அதனால் அவளும் ஒரு காலத்தில் ஒருயிர் ஈருடலாக உடன் பிறந்த

சகோதரியைப் போல் பழைய தன் ஓர்ப்படிக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுவதில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை.

* * *

அன்றுதான் சந்துருவுக்கு ஆண்டு நிறைவு. விடியற் காலையிலேயே எழுந்த லலிதா ஓடியாடி உற்சாகத்துடனும், மட்டற்ற பெருமையுடனும் காரியங்கள் செய்து கொண்டிருந்தாள். அந்த நிமிஷம் வரை இன்னும் ஜெயராமனும், பாமாவும் வராதபடியால் அவளுக்கும், ஜனகத்துக்கும் பூரண சந்தோஷமாக இருந்தது. 'அவர்கள் வராமலிருந்து விட்டால் பேசாமல், மரியாதைக்குப் பந்தலில் அவர்கள் கொடுத்த சட்டை, நிஜாரை ஆசிர்வாதம் செய்து விட்டுப் பின்பு பெட்டியில் வைத்துப் பூட்டிவிடலாமே' என்று எண்ணிக் கொண்டிருந்தாள் லலிதா.


பாமாவும் அவள் கணவனும் கடைசியில் வரத்தான் செய்தார்கள். லலிதாவின் தாயாருக்கு மட்டும் அவர்கள் வந்தது பிடிக்கவில்லை. லலிதாவுக்கும் இப்போது மனம் மாறியிருந்த படியினால் ஓர்ப்படி வருவது மகிழ்ச்சியை அளிக்கவில்லை.

கோபாலனுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. தன் அண்ணாவையும், மன்னியையும் பரிந்து பரிந்து உபசரித்தான். ஆண்டு நிறைவு முடிந்ததும் குழந்தை சந்துருவை உள்ளே கொண்டு வந்து முதலில் தன் மன்னியிடம்தான் அதைக் கொடுத்தான். அதுமட்டுமில்லாமல், கண்களில் கோபக் கனல் கழியிட நின்று கொண்டிருந்த லலிதாவை ஜாடை காட்டி, வாசற்புற அறைக்கு அழைத்துச் சென்ற அவன், "முதலில் மன்னியும் அண்ணாவும் கொடுத்த 'டிரஸ்'ஸைக் குழந்தைக்குப் போடு!......இப்பவே போடணும்! ம்...போ சீக்கிரம்!......"—என்று கண்டிப்பு தொனிக்கும் குரலில் கூறித் துரிதப் படுத்தினான். முகத்தை 'உர்'ரென்று வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் லலிதா. "என்ன! ......சொன்னது காதில் விழுந்ததோ இல்லையோ!......போ, உடனே! உன் குழந்தை மேலே உனக்கு இருக்கிற அக்கறை எனக்கும் இருக்கும்!......" என்று சொன்னான் கோபாலன்.

"...உம்...உங்கள் நண்பர் சதாசிவம் கொடுத்தாரே அந்த 'லாடின்' சொக்காய் நிஜாரைத்தான் இப்போ போடுகிறேன்......உங்க அண்ணா மன்னியாவது இன்னிக்குக் காலம்பர பெரிய மனுஷாளாட்டம் வந்திருக்கா! அவர் நேற்றே வந்திருக்கிறார். அவர் என்ன நினைக்க மாட்டார், அவர் வாங்கிக் கொடுத்த 'டிரஸ்'ஸைக் குழந்தைக்குப் போடலேன்னு!......" என்றாள் லலிதா விடாப் பிடியாக, தான் நின்ற இடத்தை விட்டுச் சிறிதும் அசையாமல்.

"ச்!..." என்று காற்காலியை விட்டு 'விருக்'கென்று எழுந்த கோபாலன் விடுவிடுவென்று உள்ளே சென்று, தன் அண்ணா மன்னி சந்துருவுக்கு ஆசீர்வாதம் செய்திருந்த வெல்வெட் சட்டையையும், நிஜாரையும், தானே உள்ளிருந்து எடுத்து வந்து, சந்துருவை மடிமேல் வைத்து ஆசை வார்த்தைகள் கொட்டிக் கொஞ்சி மகிழ்ந்து கொண்டிருந்த பாமாவிடம் கொடுத்து, "மன்னி! இந்தா! இதை நீயே உன் கையால் சந்துருவுக்குப் போட்டு விடு!" என்று, அங்கு கவரோரமாக நின்று கொண்டிருந்த லலிதாவின் முகத்திலறைந்தாற் போல் கூறி அவளை விறைத்துப் பார்த்து விட்டுச் சென்று விட்டான். லலிதாவின் கண்கள் 'பொல' 'பொல' வென்று கண்ணீரைக் கொட்டின. அம்மாவிடம் போய் ரகசியமாக முறையிட்டாள். 'தொலையட்டும்! இன்னும் கொஞ்ச காழி கழிச்சுக் கழற்றி எறிஞ்சுடலாம்" என்று அவளைச் சமாதானப்படுத்தினாள் ஜனகம்.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்தவுடன் முதல் வேலையாகச் சந்துருவின் 'டிரஸ்'ஸைக் கழற்றித் தூரப் போட்டாள் லலிதா. "ஏன்! இன்னும்



கொஞ்ச நேரம்தான் இருக்கட்டுமே!..." என்றாள் பாமா. "இல்லை!...குழந்தைக்குக் 'கச,கச' என்று வேதனையாக இருக்கும்!" என்றாள் லலிதா.

அன்று மாலை கோபாலனின் சிநேகிதன் கொடுத்த ஜிஜார் சொக்காயைத் தன் குழந்தைக்குப் போட்டு எல்லா அலங்காரத்தையும்தானே செய்து மணையில் உட்கார வைத்து எல்லோரையும் அழைத்து விட்டு வந்தாள் லலிதா.

அவ்வளவு நேரமும் இல்லாத ஒரு புது பாவத்தைப் பாமாவின் முகம் பிரதிபலித்தது. மெதுவாகச் சந்துருவின் அருகில் போய் உட்கார்ந்து அந்தச் சொக்காயையும் ஜிஜாரையும் தடவித் தடவிப் பார்த்து, உள்புறமும் வெளிப்புறமும் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு தாங்க முடியாத வேதனை அழுத்த, கண்களில் கண்ணீர் கொப்பளிக்க மெள்ள எழுந்து சென்றாள் அவள். "கல்ல ஜீவித்தனம்தான்!... எப்போ பார்த்தாலும் என்ன அழுகை வேண்டியிருக்கு" என்று முணு முணுத்தாள் லலிதா.

மறு நாளே சந்துருவின் ஆண்டு நிறைவு ஆனகையுடனேயே பாமாவை அழைத்துக் கொண்டு ஊருக்குச் சென்று விட்டான் ஜெயராமன். வந்திருந்த மற்ற மனிதர்கள் எல்லோரும் கூட இரண்டொரு தினத்தில் ஒவ்வொருவராய் ஊருக்குக் கிளம்பி விட்டனர்; லலிதாவின் உடம்பைச் சாக்கிட்டு மாதக்கணக்காக வந்து 'டேரா' போட்டிருந்த அவள் தாயார் ஜனகத்தைத் தவிர.

அன்று காலைச் சாப்பாடு முடிந்ததும் அங்கங்கே தாறுமாறாக இறைந்து கிடந்த புதுத் துணி மணிகளை லலிதா மடித்து பீரோவில் வைத்துக் கொண்டிருந்தாள். கடைசியில் எல்லாவற்றையும் மீண்டும் ஒரு தடவை சரி பார்த்தபோது அவளுடைய கணவனின் சிநேகிதர் சதாசிவம் கொடுத்த சட்டை மட்டும் காணாமல் இருக்கவே திகைத்து விட்டாள். அம்மாவிடம் விஷயத்தைத் தெரிவித்தாள். "இதென்னடி, அதிசயம்! எல்லாம் இருக்கச்சே அது ஒண்ணு மட்டும் எங்கே போய் விடும்!" என்றாள் ஜனகம்.

லலிதா வீட்டின் மூலை முடுக்குகளெல்லாம் நன்றாய்த் தேடியும் பலனில்லாமையால், ஆயாசத்துடன் பீரோ அருகில் வந்தாள். பாமாவும் ஜெயராமனும் கொடுத்த ஜிஜார் சொக்காயை எடுத்தாள். "சனியன்! இது போய்த் தொலைந்திருக்கக் கூடாதோ! நான் விசாரப்பட்டே இருக்க மாட்டேனே!" என்று கூறி அதைக் கழற்றி எறிந்தாள். அதே சமயத்தில் "போஸ்ட்!" என்ற குரல் கேட்டு வாசற்புறம் ஓடிய லலிதா ஒரு கவரைக் கையில் வாங்கிக் கொண்டு வந்தாள். "யார் கடிதாசு போட்டிருக்கா!" என்றாள் ஜனகம். கவரைப் பிரித்துக் கடிதத்தை எடுத்தாள் லலிதா. அது அவள் ஓர்ப்படி பாமாவிடமிருந்துதான் வந்திருந்தது. ஜனகத்துக்குக் கேட்கும்படி கடிதத்தை உரக்கவே படித்தாள் லலிதா. "என் அன்புக்குரிய லலிதா,

நான் இப்போது எழுதப் போகும் விஷயம் உனக்கு மட்டற்ற ஆச்சரியத்தையும் அதே சமயத்தில் வருத்தத்தையும் அளிக்கும். உன் கணவருடைய சிநேகிதர் சதாசிவம் உன் குழந்தைக்கு ஆசீர்வாதம் செய்த 'லேடின்' ஜிஜாரையும் சட்டையையும் காணவில்லை என்று தேடிக் கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். அது எங்கும் போய்விடவில்லை. அதை எடுத்து வந்தவள் நான்தான். காரணம், அது என் வாழ்வில் தோன்றி ஏங்க வைத்து விட்டு மறைந்து விட்ட என் குழந்தை முரளியினுடையது என்பதுதான்.

என்னுடைய அருமைப் பாலகன் முரளியின் ஆண்டு நிறைவன்று அவனுக்குப் போடுவதற்காக என் கணவர் ஆசையுடன் வாங்கி வந்தவை அவை. என் முரளியின் பாலன்ன வண்ண மேனிக்கு அந்த நிறம் எவ்வளவு எடுப்பாக இருந்தது என்று உனக்குக்கூட நினைவிருக்குமே! அன்று கொஞ்ச நேரம்தான் அவன் அதைப் போட்டுக் கொண்டு பார்க்க என் கண்கள் கொடுத்து வைத்தன!

என்னுடைய சோக நிலைமையைத் தெரிந்து கொண்ட என் கணவர் சென்ற மாதம், அந்தப் புத்தம் புதிய வாடா மல்லி நிற ஜிஜார் சட்டையை எனக்குத் தெரியாமல் கொண்டுபோய் அதை ரெடிமேடாக வாங்கிய கடையிலேயே விற்று விட்டு வந்துவிட்டார்! பிறகு ஒரு நாள் எனக்கு அவற்றைப் பற்றி நினைவுக்கு வந்து பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது அவற்றைக் காணாமல் என் கணவரிடம் கேட்டபோதுதான் எனக்கு உண்மை புலப்பட்டது. 'ஐயோ! என் முரளியின் ஞாபகார்த்தச் சின்னமான அதை எப்படி நீங்கள் விற்கலாம்? உடனே வாங்கி வாருங்கள் அதை! அதைப் பார்த்தாவது என் மனத்தைத் தேறுதல் செய்து கொள்ளுவேன்!' என்று பைத்தியம் பிடித்தவள் போல் என் கணவரிடம் மன்றாடினேன். என் தொல்லை சகிக்காமல் அவர் அதை வாங்கிவர அந்தக் கடைக்குச் சென்றபோது, அது இரண்டு நாட்கள் முன்புதான் விற்றுப் போய்விட்டதென்றும் சதாசிவம் என்று ஒருவர் அதை வாங்கிச் சென்று விட்டார் என்றும் கூறிவிட்டான் கடைக்காரன்.

அன்று உன் குழந்தை அந்த வாடாமல்லி நிறச் சட்டை ஜிஜாரைப் போட்டிருந்ததையும், அதைப் பரிசளித்தவர் பெயர் சதாசிவம் என்றும் அறிந்த போது சட்டென்று எனக்கு என் கணவர் விற்று விட்டு வந்தது நினைவுக்கு வந்தது. உடனே என் சந்தேகத்தைத் தீரத் தெளிய வைத்துக் கொள்ளச் சந்துருவினருகில் உட்கார்ந்து அந்தச் சட்டையின் காலரை உட்புறமாகத் திருப்பிப் பார்த்தேன். அதில் என் கணவர் விற்று விட்டு வந்த அதே கடைப் பெயரின் முத்திரை விலாசத்துடன் இருந்தது. உடனே எனக்கு விஷயம் நன்றாக விளங்கி விட்டது. மெள்ள அங்கிருந்து நழுவி மாடிக்குச் சென்ற நான் என் கணவரிடமும் விஷயத்தைச் சொல்லி அப்போது அவருடன் பேசிக் கொண்டிருந்த உன் கணவரின் சிநேகிதர் சதாசிவத்திடம் ஜாடையாக அவர் என்று, எங்கு அந்த சட்டை ஜிஜாரை வாங்கினார் என்று விசாரிக்கச் சொன்னேன்.

என் கணவர் பிறகு மெள்ளப் பேச்சு வாக்கில் விசாரித்து உண்மையைத் தெரிந்து கொண்டு அதுவேதான் என்று சொன்னபோது என் மனம் பட்ட பாட்டை என்னவென்று சொல்லுவேன்! நடுவில் அதைக் கழற்றினால் வீண் கேள்வி பதில்களுக்கு இடமாகுமே என்று பேசாமலிருந்தேன். பிறகு அன்றிரவு நீ அதைக் கழற்றி எறிந்தபோது அதை ரகசியமாக நான் எடுத்து வைத்துக் கொண்டு விட்டேன்! நீ அதைத் தேடாதே! அது இனி என் முரளியின் ஞாபகார்த்தமாக என்னிடமே இருக்கட்டும்! என் சந்துருவுக்கு அது வேண்டவே வேண்டாம்!

பாமா."

கடிதத்தைப் படித்து முடித்த லலிதா, "மன்னி! நான் சந்துருவைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய். ஆனால் நீ அவனைப் பெறாமலேயே அவன் மீது என்னைவிடப் பன்மடங்கு பாசத்தையும் வாத்ஸல்யத்தையும் வைத்திருக்கும் தாய்!" என்று விசும்பல்களிடையே முணுமுணுத்தாள்.



தில்லைவாசி

மூப்பத்தைந்து ஆண்டுகள் உத்தியோகத்திலும், ஐம்பத்தைந்து ஆண்டுகள் வயதிலும் எனக்கு ஆகிவிட்டது என்பதினால் நான் வீட்டில் நிம்மதியாக உட்காரும்படி நேர்ந்திருந்தது. ஆமாம், ஒரு நாள் காலையிலிருந்து, நான் ஓய்வு பெற்று, பென்ஷன் வாங்கும் ஆசாமியாக மாறிவிட்டேன். உடலில் வலுவிருந்தும், உள்ளத்தில் தென்பிருந்தும், கூரிய அறிவிருந்தும், உத்தியோகத்தைச் செவ்வனே செய்ய நல்ல நிதானமிருந்தும், சர்க்கார் சட்டப் புத்தக அகராதிப்படி நான் ஒன்றுக்கும் அருகதை யற்றவனாகி விட்டேன். அதாவது நான் கிழவன்.

மீசை நரைத்தாலும் எனக்கு ஆசை நரைக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், ஓய்வு பெறப் போகும் பருவத்தில்தான், இந்த ஆசை இளமை முறுக்கோடு இருப்பதாக எனக்குத் தோன்றியது.

"இன்னும் இரண்டு மூன்று வருஷங்கள் உழைக்கவும், உழைத்ததற்காக முழுச் சம்பளம் பெறும்படியும் விட்டு வைக்க மாட்டார்களா" என்று நான் முதலில் எண்ணியதுண்டு.

ஆனால் நன்றாக யோசித்துப் பார்த்தபோது, என் உள்ளத்தின் ஆசை தவறானது, சுயநலத்தின் அடிப்படையில் எழுந்தது என்பது நன்கு புலப்பட்டது.

"ஆமாம், ஆசைக்கோர் அளவில்லை. உத்தியோகத்தில் நெடுநாள் நிலைத்து நிற்க வேண்டும் என்றுதான் தோன்றும். நம்முடைய குடும்ப பாரம் ஒன்றையே மனசில் கொண்டு, உத்தியோகத்தில் அட்டையைப்போல் ஒட்டிக் கொண்டு ஐம்பத்தைந்து வயசைத் தாண்டி, அறுபது இல்லை அறுபத்தைந்து வயது வரையில் வேலை பார்க்கச் சொன்னாலும், அப்பொழுது கூட உத்தியோகத்தை விட்டு நீங்கும் போது, மனத்திருப்தி என்பது அவ்வளவு எளிதில் ஏற்பட்டுவிடுமா, என்ன! இதற்கு ஒரு எல்லையே இல்லாது போய்விடும். அதே சமயம், பள்ளிக் கூடம், கல்லூரிகளில் படித்து அறிவும், பட்டமும் பெற்று ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் வேலைக்குத் திண்டாடித் தவிக்கும் ஒரு நிலைமையை இப்படி வயசு வந்தவர்கள் விலகிக் கொள்வதினால், ஓரளவு தவிர்க்கலாம் என்றால், அதற்கு ஒரு முட்டுக்கட்டையாக இருப்பதும் தவறுதான்."

இந்த எண்ணம் காரணமாகவே, உத்தியோகத்தை விட்டு நீங்கும்போது, பொங்கும் மகிழ்ச்சியுடன், மனத் திருப்தியோடு விலகிக் கொண்டேன். விடுதலை பெற்ற சிட்டுக் குருவியைப் போன்று, என் மனமும் மிக மிக இலேசாக, கவலையின்றி, நிம்மதி நிறைந்து காணப்பட்டது.

செக்கு மாட்டைச் சுற்றிவரும் மாட்டைப் போல இருந்து விட்டுத் திடீரென்று இப்படி ஒரு நாள் ஓய்வு பெற்று, வீட்டில் உட்கார்ந்த போது தான் பொழுது போவது சற்றுச் சிரமமாக இருந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டேன். காலையில் எட்டு மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பி, நகரசபைப் புத்தக சாலைக்குப் போனால், பதினொரு மணி வரையில், தினசரி, வாராந்திர, மாதாந்திரப் பத்திரிகைகளையும், மற்ற அறிவு வளர்ச்சிப் புத்தகங்களைப் படிப்பதிலும், பொழுது போய்விடும். பிறகு வீட்டுக்கு வந்து, குடும்பக் காரியங்களில் கொஞ்சம் கவனம் செலுத்தியும், பேரக் குழந்தைகளுடன் விளையாடியும் வரும்போது, மணி தன்னாலேயே பறந்து கொண்டிருந்தது. சாப்பிட்டுவிட்டு ஒரு தூக்கம் போட்டால், எழுந்திருக்க மூன்று மணியாகிவிடும். நான்கு மணிக்கு மறுபடியும் வெளிக் கிளம்பிவிட்டால், வீடு திரும்ப இரவு ஒன்பது மணியாகிவிடும்.

மாலை வேளையில் தான் பொழுது மிக மிகச் சௌகரியமாகப் போய்க் கொண்டிருந்தது. வீட்டை விட்டு, இரண்டு மைல் தூரம் நடந்து கடற்கரைக்கு வந்துவிட்டால், பரந்து கிடக்கும் வெண்ணிற மணற் பரப்பு என்னை ஆட்கொண்டு விடும். வேறு எந்த ஞாபகமும் இருக்காது. எழுந்து, அழுங்கி, மேலே பாயும் அலைகளும், அவைகளின் போராட்டங்களும் காணக் கண்களுக்கு இனிய விருந்தா யிருக்கும். கடற் பரப்பிலிருந்து வீசும் குளிர்ந்த தென்றல், உடலுக்கும் உள்ளத்துக்கும் இதமாக இருந்தது. மணலில், தனிமையில் மோன நிலையில், ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்து விட்டுக் கிளம்பினால் மைதானத்துப் பார்க்குக்கு வந்து சேர ஆறுமணி யாகிவிடும்.

இத்தனை காலமாக, இந்த மைதானத்தைப் பற்றி அக்கறை கொள்ளாத எனக்கு, இப்படி ஒரு மோகம் ஏற்பட்டது எனக்கே ஆச்சரியமாகத் தானிருந்தது.

மைதானத்துப் பார்க்கில், ஒரு பெஞ்சியின்மீது வந்து உட்கார்ந்து விட்டால், இந்தப் பரந்த வெளி

தரும் குளிர்ந்த காற்றும், வானொலி தரும் இன்னிசை விருந்தும் என்னை மெய்மறக்கச் செய்து விடும். நடுவில் அறிந்த, தெரிந்த நண்பர்கள், யாராகிலும் வந்தால், அவர்களிடம் பேசிக் கொண்டிருப்பதிலும் ஒரு தனி இன்பம்தான்.

இப்படிப் போய்க் கொண்டிருந்த என் அந்திய வாழ்வில் ஒருநாள் அந்த மனிதர் குறுக்கிட்டார்.

வழக்கம்போல், நான் பார்க்கு பெஞ்சியின் மீது உட்கார்ந்திருந்தேன். அப்பொழுதுதான், இது வரையில் நான் பார்த்திராத அந்தப் புது மனிதரும் வந்து, மற்றொரு பக்கம் உட்கார்ந்தார். நான் அவரோடு பேச்சுக் கொடுத்தேன். அப்பொழுதிலிருந்து நாங்களிருவரும் பல நாட்களாகப் பழகியவர்களைப் போல நெருங்கிய நண்பர்களாகி விட்டோம்.

அவர் பெயர் செல்வரத்தினம்; நல்ல சுபாவம்; கவலையை மறந்த சிரித்த முகம்; அன்பு கனிந்த வார்த்தைகள்; இப்படி நிறைய நிறையச் சொல்லலாம் செல்வரத்தினத்தைப் பற்றி. அவருக்கு வயது ஐம்பது. பிள்ளை குட்டிகள் வீடு நிறைய அவருக்கும் இருந்தார்கள். அவர் குடும்பத்தில் சம்பாதிப்பவர் அவர் ஒருவர்தான். அவர் மூத்த மகன் அந்த வருஷம் படித்து முடித்திருந்தான். அவனும் வேலைக்குப் போனால், அவர் குடும்பத்தில் கொஞ்சம் சிரமம் குறையும். அப்படி அவன் உத்தியோகத்தில் ஸ்திரப்படுவதற்குள், செல்வரத்தினமே வயது முடிந்து, ஓய்வு பெற்றுக் கொண்டு விடுவார்.

மனத்தை உருக்கும், அவர் கூறிய சோகக் கதைதான், என்னை அவரிடம் அதிக அக்கறையும், அனுதாபமும் காட்டச் செய்து விட்டது.

செல்வரத்தினம் ஒரு பர்மா அகதி. யுத்தத்தின் போது, உயிர் தப்பினால் போதும் என்று கால் நடையாகவே ரங்கூனிலிருந்து கிளம்பி வந்தவர். இதுவரையில் பல கதைகளிலும், வாழ்க்கைச் சரித்திரத்திலிருந்தும் படித்து அறிந்த அவதிகளை இவரும் பட்டிருந்தார்.

இவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். ரங்கூனில் நல்ல சம்பளத்தில் சர்க்கார் உத்தியோகம் பார்த்தவர். நல்ல வேளை, யுத்தத்துக்கு முன்பே தம் குடும்பத்தாரை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டிருந்தார். எனவே உயிர் பிழைத்து அவர் திரும்பி, மனைவி மக்களோடு வந்து சேர்ந்து கொள்ளுவதற்கு முடிந்தது.

இப்படித் தவித்த பர்மா அகதிகளுக்கு, இந்திய சர்க்கார் உத்தியோகம் கொடுத்து உதவியது. அப்படிக் கிடைத்த உத்தியோகத்தைத்தான் அவர் மேற்கொண்டிருந்தார். சுமாரான சம்பளம்; அவர் குடும்பத்தைச் சமாளிக்கப் போதுமென்று சொல்ல முடியாது.

செல்வரத்தினம் ஒழிந்த நாட்களில் என் வீட்டுக்கு வந்திருந்து பேசிவிட்டுப் போவார். காப்பி, டிபன் கொடுத்து, அவரை எங்கள் வீட்டில் உபசரித்தோம். அதேபோன்று, என்னையும் வலுக் கட்டாயப்படுத்தி, தம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவார். பன்மடங்கு அதிகமாகவே எனக்கு உபசாரனை செய்தால்தான் அவர் மனம் திருப்தி கொள்ளும். அவர் மனைவியாரும் சரி, மக்களும் சரி என்னிடம் அதிகம் அன்பு காட்டி, பிரியமாக வாஞ்சையுடன் பேசி நடந்து கொண்டார்கள். எல்லாரும் நல்லவர்கள்.

ஒரு நாளிரவு, நானும் செல்வரத்தினமும் பார்க்கில் உட்கார்ந்து, நெடு நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டுக் கிளம்புப்போது, "ஸார், பத்து ரூபாய் இருந்தால், நாளைச் சாயந்திரம் வரும்போது தயவு செய்து கொண்டு வாருங்கள். முதல் தேதி சம்பளம் வாங்கியதும் கொடுத்து விடுகிறேன்" என்று செல்வரத்தினம் என்னைப் பார்த்துச் சொன்னார். அப்பொழுது முதல் தேதி பிறக்க இன்னும் நாலைந்து நாட்களிருந்தன. அதற்குள் அவர்கள் வீட்டில் என்ன செலவோ!

"அதற்கென்ன ஸார், தருகிறேன். ஒருத்தருக்கு ஒருத்தர் முடிந்த உதவியைச் செய்யத்தானே நாமிருக்கிறோம்!" என்று அவரிடம் கூறி, விடை பெற்றுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

என்னிடம் அப்போதைக்கு இருபது ரூபாய் இருந்தது. பத்து ரூபாய் அவருக்குக் கடனாகக் கொடுத்து விட்டால், பத்து ரூபாயைக் கொண்டு, என்னுடைய குடும்பச் செலவும் முதல் தேதி வரைக்கும் ஓடிவிடும் என்ற நினைப்பு ஏற்பட்டது.

மறுநாள் பொழுது புலர்ந்தது. சாயந்திரம் செல்வரத்தினத்தைப் பார்க்கில் காணும் வரையில் நான் காத்திருக்கவில்லை. "செல்வரத்தினத்தின் வீட்டில் என்ன கஷ்டமோ! குடும்பச் செலவுக்குப் பணம் இல்லாமல் தவிக்கிறார்களோ, என்னவோ" என்று நினைத்து அன்று பகல் புத்தகசாலையிலிருந்து கிளம்பி, அவர் வீட்டிலேயே பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வரவேண்டுமென்று போனேன்.

நான் போனபோது, அவர் மூத்த மகன் தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். மிகவும் மரியாதையுடன் எழுந்திருந்து வணக்கம் தெரிவித்து, முகமன் கூறி, முகமும் அகமும் மலர்ந்து, அன்புடன் என்னை அவன் வரவேற்றான். நான் எதிர்பார்த்து வந்திருந்தபடி, செல்வரத்தினம் காரியாலயத்துக்குத்தான் போயிருந்தார். அவர் மனைவியும் அச்சமயம் வீட்டில் இல்லை.

"தம்பி! உன் தந்தை பத்து ரூபாய் பணம் ஏதோ அவசரம் என்று கேட்டிருந்தார். இதோ கொண்டு வந்திருக்கிறேன். பெற்றுக் கொள். உன் அன்னை வந்தவுடன் சொல்லிக் கொடுத்து விடு" என்று ஒரு பத்து ரூபாய் நோட்டைப் பையனிடம் கொடுத்தேன். அவனும் பொங்கும் மகிழ்ச்சியுடன், அதை வாங்கிக் கொண்டான். நானும் வீடு திரும்பினேன்.

அன்று சாயந்திரமே நான் செல்வரத்தினத்தைப் பார்க்கில் பார்த்தேன். "நீங்கள் கேட்டிருந்தபடி பணத்தை வீட்டில் உங்கள் பையனிடம் கொடுத்து வந்தேன்" என்று நான் சொல்லவில்லை. வீணாக இப்படிச் சொல்லிப் பெருமையடித்துக் கொள்ளவும் எனக்கு விருப்பமில்லை. மேலும் அப்படிச் சொல்லுவது அவர் என்னிடம் கடன் பட்டிருந்ததை ஞாபகப் படுத்துவது போலிருந்தது. அவர் மனம் வேதனை அடைந்து விடக் கூடாது என்று நான் சும்மா யிருந்து விட்டேன்.

'நீங்கள் வீடு தேடி, கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போன பணம், எங்களுக்குச் சமயத்தில் உதவியது. நன்றி' என்று செல்வரத்தினமாகவே சொல்லட்டும் என்று நான் எதிர்பார்த்தேன். அதுவும் அவர் சொல்லவில்லை.

இப்படி இருவருமாக, அந்தப் பத்து ரூபாயைப் பற்றி மறந்து, வேறு எதை எதையோ பேசிக் கொண்டிருந்துவிட்டுப் பிரிந்தோம்.

முதல் தேதி வந்து போய், இரண்டு மூன்று நாட்கள் கூடக் கழிந்து போயின.

செல்வரத்தினம் சொல்லியபடி பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. "பாவம்! அவருக்கு என்ன கஷ்டமோ, எவ்வளவு பணமுடையோ! அவராகக் கொடுக்கும்போது வாங்கிக் கொள்வோம்" என்று நான் அவரிடம் பணத்தைப்

பற்றி ஒரு மூச்சும் விடவில்லை. அவரும் எந்தச் சமாதானமும் சொல்லவில்லை.

நாட்கள் விரைந்து கொண்டிருந்தன. இரண்டு மாதங்களும் கழிந்து போயின.

அப்பொழுதுகூட நான் பணத்தைப் பற்றிக் கேட்டுக் கொள்ளவில்லை. அவரும் கொடுக்க முன் வரவில்லை.

இதற்கிடையில் நாங்கள் வழக்கம்போல், மாலை வேளையில் பார்க்கில் சந்திப்பது மட்டும் நிற்க வில்லை. ஒருவரோடு ஒருவர் உரையாடி மகிழ்ந்ததிலும் குறையில்லை.

ஒருநாள் காலையில் செல்வரத்தினத்தின் மகன் என் வீட்டுக்கு வந்தான். அப்பொழுது ஒன்பது மணியிருக்கும். நான் வீட்டில்தான் இருந்தேன்.

"அப்பா உங்களை அழைத்து வரச் சொன்னார். இன்று எங்கள் வீட்டில் உங்களுக்கு விருந்து என்று சொல்லச் சொன்னார்" என்று கூறி அந்தப் பையன் என்னைக் கையோடு அழைத்துப் போக விரும்பினான்.

விருந்துக்குக் காரணத்தையோ, அவசியத்தையோ அவன் சொல்லவில்லை. செல்வரத்தினம் என்னிடம் நேரில் சொல்ல இருப்பதாக அவன் சொன்னதினால், நான் மேற்கொண்டு எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை. ஆனால் என் வியப்பும், ஆவலும் அடங்கவில்லை. செல்வரத்தினத்தின் வீட்டை நோக்கிக் கிளம்பி விட்டேன்.

"வரவேணும், வரவேணும்" என்று முக மலர்ந்து செல்வரத்தினம் என்னை வரவேற்று, ஓர் ஆசனத்தில் அமர்த்தி வைத்தார்.

"என்ன, திடீரென்று எனக்கு விருந்து என்று என்னை அழைத்து வரச்சொல்லி விட்டீர்கள்! என்ன விசேஷம்!" என்று அவரைப் பார்த்துக் கேட்டேன்.

"சொல்லுகிறேன்; அதற்குள் நானே வந்து உங்களை அழைக்க முடியாததற்கு மன்னிப்பைக் கோருகிறேன். வேறு ஒரு முக்கியமான அலுவல் இருந்ததினால் முடியாமல் போயிற்று" என்றார் அவர் மிக்க விநயத்தோடு.

"அதனால் என்ன! அன்புதான் முக்கியம். உங்கள் அன்புக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றேன் நான்.

"ஆனால் உங்கள் அன்புக்குத்தான் எங்கள் குடும்பத்தினர் முழுக்க முழுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்" என்று அவர் சொல்ல ஆரம்பித்தார். நானும் ஆவலோடு அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டு வந்தேன்.

அவர் சொன்ன விவரம் இதுதான்.

செல்வரத்தினம் என்னைப் பணம் கடனாகக் கேட்ட அன்று காலையே, அவருடைய மகன் பத்திரிகையில் உத்தியோகத்திற்கான விளம்பரத்தைப் பார்த்து, விண்ணப்பத்துடன் கட்டணம் செலுத்தப் பத்து ரூபாய் பணம் கேட்டிருந்தான். அதற்கு மறுநாள்தான் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாள். செல்வரத்தினத்திற்கு இப்படி ஒரு உத்தியோகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை. போதாக்குறைக்கு அவரிடம் பணமும் இல்லை. அதனால் அவர் மகனின் வேண்டுகோளைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே அலட்சியமாக இருந்து விட்டார். ஆனால் அன்றிரவு என்னைச் சந்தித்தபோது, அவர் பணம் கேட்டது வேறு நோக்கத்திற்காக. நல்ல மனிதர்களிடத்தும், ஏதாவது ஒன்றிரண்டு கெட்ட பழக்கங்கள் சிலவேளை இருந்து விடுவதுண்டு. இவர்களைச் சூழ்நிலைகள் அப்படிக் கெடுத்து விடுவதுண்டு. செல்வரத்தினத்திற்கு ரங்கு விளையாட்டில் கொஞ்



சம் பைத்தியமுண்டு. பணத்தைப் பிடித்துவிட வேண்டுமென்ற மனித ஆசையையும் தவிர்க்க முடியாமலேயே அவர் இருந்திருக்கிறார். சில காரியாலய நண்பர்களும் அவருடைய பைத்தியத்திற்குத் தூபம் போட்டு விட்டிருந்தார்கள். அவர்களே பைத்தியக்காரர்கள் தான். எல்லாரும் சேர்ந்து பெரிய பிடியாகவே பிடித்துவிட வேண்டும் என்று எண்ணினார்கள். மறுநாள் இரவு அவர்கள் கூடிவிட வேண்டும். ஒவ்வொருவரும் பத்து ரூபாய்க்குக் குறையாமல் கொண்டுவரும் புள்ளிகளாக இருக்க வேண்டும். இப்படிப்பட்டது அவர்களது திட்டம்.

செல்வரத்தினமும் அந்த ஆசை வலையில் விழுந்தார். என்னையும் துணிந்து பணம் கேட்டார். நானும் ஒப்புக் கொண்டேன்.

ஆனால் பணத்தை அவர் மகனிடம் கொடுத்து வந்ததை அவர் அறிய மாட்டார். அந்தப் பையனும் தந்தையிடம் சொல்லவில்லை. பிறகு அவர் என்னைச் சந்தித்தபோது, நானகப் பணம் கொடுத்தால் வாங்கிக் கொள்வது; இல்லாவிட்டால் ரங்கு விளையாட்டு நண்பர்களை மறந்து விட்டோடு இருந்து விடுவது என்று எண்ணியிருந்தார். அதனால்தான் நான் பணம் கொடுக்காமல் இருந்தபோது "பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா!" என்று அவருக்குக் கேட்கத் தைரியம் வரவில்லை.

நான் பணம் கொடுக்க இஷ்டப் படவில்லை என்றோ, அல்லது என்னிடம் கொடுக்கும்படியாகப் பணம் இல்லை என்றோ அவர் எண்ணி விட்டார். அதற்காக வருத்தப் படவில்லையாம்.

நான் அவர் மகனிடம் பணம் கொடுத்ததை, இப்படி அவர் அறியாமலே இருந்து விட்டதினால், இரண்டு மூன்று முதல் தேதிகள் வந்து போயும்,

அவர் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. அதற்கேற்ப நானும் "பணம் என்ன ஆயிற்று!" என்று கேட்காமலே இருந்து விட்டேன்.

என்னிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்ட செல்வரத்தினத்தின் மகன் ஒரு புத்திசாலித்தனமான காரியம் செய்தான். தன்னிடமிருந்த ஒரு ரூபாய்ப் பணத்தையும் சேர்த்து, பத்து ரூபாய் கட்டணம் செலுத்தி, அன்றே விண்ணப்பத்தை உத்தியோகம் கோரி எழுதிப் போட்டு விட்டான். செல்வரத்தினம் அவனுக்காகத்தான் என்னிடம் பணம் கடன் கேட்டிருந்தார் என்று எண்ணிச் செய்ய வேண்டியதை எல்லாம் அவன் செய்து விட்டான்.

பையன் விண்ணப்பம் அனுப்பி இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு, இன்று பார்த்து, அவனைத் தேர்ந்தெடுத்து இருப்பதாகவும், உடனே வந்து உத்தியோகத்தை ஒப்புக் கொள்ளவும் என்றும், ஆரம்பச் சம்பளம் இருநூறு ரூபாய் என்றும் உத்தரவு வந்திருக்கிறது. அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்திருக்கிறது.

செல்வரத்தினத்தின் வீட்டில் எல்லாருமே இப்படி ஒரு நல்ல செய்தி கிடைத்ததும், ஆச்சரியப் பட்டுக் கொண்டார்களாம். அவர்களின் மகிழ்ச்சிக்குக் கங்குகரையில்லை.

"நான்தான் உனக்குப் பணம் கொடுக்கவில்லையே. உனக்கு ஏது பணம்! என்ன செய்தாய்!" என்று செல்வரத்தினம் மகனைக் கேட்ட பின்தான் அவன் நடந்ததை ஒன்று விடாமல் சொன்னானாம். அவனுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாததினால், அவன் முன்பே சொல்லாமல் இருந்து விட்டானாம்.

இந்த எதிர்பாராத வெற்றியையும், மகிழ்ச்சியையும் கொண்டாடத்தான் இந்த ஏற்பாடு!

என் பத்து ரூபாய் செய்த சாதனையை, கதை போலச் சொன்ன செல்வரத்தினம் நன்றி நிறைந்த கண்களோடு என்னைப் பார்த்தார்.

மறுகணமே செல்வரத்தினம், "ஸார், உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே எனக்குத் தோன்றவில்லை. உங்களுடைய பெருந்தன்மையை எப்படிப் புகழ்ந்து பாராட்டுவதென்றே எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கொஞ்சம் பொறுத்திருந்து, என்னிடம் பணம் கொடுத்திருந்தால், நானும் பேயாட்டம் ஆடியிருந்திருப்பேன். அதிலேயே என் புத்தியை மேலும் மேலும் செலுத்திக் கொண்டிருந்திருப்பேன். அதற்குப் பதில் என் மகனிடம் கொண்டு வந்து கொடுத்து, அவன் எதிர்காலத்துக்கு ஒரு நல்ல வழியைக் காண்பித்து விட்டீர்கள். உங்களுடைய நல்லெண்ணம் அவனுக்கு அதிர்ஷ்டத்தைத் தேடித் தந்திருக்கிறது. உங்கள் கைராசி தான் இதற்குக் காரணம். நீங்கள் பணம் கொடுத்தது பெரிதல்ல. கொடுத்த பணத்தை இதுவரையில் திரும்பித் தராமல் இருந்தும்கூட, ஒரு வார்த்தை அதைப் பற்றிக் கேட்காமலேயே இருந்துவிட்ட உங்களுடைய மனிதப் பண்பை, நான் என்னவென்று சொல்லி வியப்பேன்! ஆனால் ஒன்று, நானும் என் குடும்பத்தாரும், உங்களுக்கு நிறையக் கடமைப்பட்டிருக்கிறோம். சமயத்தில் நீங்கள் செய்த இந்த உதவியைப் போற்றி, வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு நன்றி செலுத்த என் மகனும் கடமைப்பட்டிருக்கிறான். போதும், உங்களை நேரில் வைத்துக் கொண்டு இன்னும் நிறையப் புகழ்ந்தால், உசிதமாக இருக்காது" என்று உணர்ச்சியோடு பேசினார்.

அன்று பலமான விருந்தாகவே வைத்து, என்னை எழுந்திருக்க முடியாமல் செய்து விட்டார்கள். கிழவனுகிய எனக்குச் (சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகிப் பென்ஷன் வாங்குவதினால் நான் கிழவன்தானே) செல்வரத்தினத்தின் வீட்டில் கிடைத்த மரியாதையையும், உபசாரத்தையும் இப்படி, அப்படி என்று விவரிக்க வார்த்தைகளில்லை. நான் மாப்பிள்ளையாக மாமனார் வீட்டுக்கு முதன் முதலாகப் போன போதுகூட எனக்கு இத்தகைய மரியாதை கிடைக்கவில்லை. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடிகிறது.

செல்வரத்தினத்தின் மனைவி, மக்கள் எல்லாரும் தனித் தனியாக என்னிடம் வந்து வணக்கம் செலுத்தி, நன்றி தெரிவித்தார்கள். நல்ல வேலை கிடைத்துப் போகும் அந்தப் பையன்தான் என்னைக் கடைசி வரையில் விடவேயில்லை. திரும்பத் திரும்ப நன்றி செலுத்தி, என்னைத் திணற அடித்து விட்டான்.

"தம்பி! இதெல்லாம் அவசியமில்லை. நல்லவன் என்று பெயரெடுத்து, பெற்றோர்களுக்கு நல்ல பெயரை வாங்கித் தரத்தான் நீ முயலவேண்டும். நிறம்பட உத்தியோகத்தைப் பார்த்து, பெரிய பதவிக்கு நீ போக வேண்டும்" என்று நான் அவனை ஆசீர்வதித்தேன்.

அன்றிரவே பையன் வேலையை ஒப்புக்கொள்ள, பெற்றோர்களையும் என்னையும் பிரிய மனமின்றிப் பிரிந்து போனான்.

மறுநாளே செல்வ ரத்தினம் என் வீட்டுக்கு வந்து, அந்தப் பத்து ரூபாயை மிக்க விநயத்தோடு, திருப்பிக் கொடுத்து, "இந்த உதவியை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம்" என்று தம் நன்றி உணர்ச்சியைத் திரும்பவும் சொல்லிக் கொண்டார்.

"அது சரி! உங்களை ஒன்று கேட்கிறேன். ரேஸ் விளையாட்டு, அது இது என்று சொன்னீர்களே, அந்தப் பைத்தியம் இப்போது எப்படியிருக்கிறது!" என்று நான் குறும்பாக அவரைப் பார்த்துக் கேட்டேன்.

"அன்று அந்தப் பத்து ரூபாய் கிடைக்காததினால், பைத்தியம் பிடிக்கவில்லை. பின்னாலும் பிடிக்கவில்லை. இப்பொழுது என் கண்கள் நன்றாகத் திறந்து கொண்டு விட்டன. இனிமேல் அப்படி நடக்காது. இது நிச்சயம்" என்றார் அவர் மிகத் தெளிவோடு. சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் விடை பெற்றுக் கொண்டார்.

* * *

உத்தியோகத்திலிருந்து, வயது வந்த காரணத்தினால், ஓய்வு பெற்று விடுதலை யடைந்த பிறகு என் வாழ்க்கை உப்பு, சப்பற்றதாக இருக்கும் என்று எண்ணியதற்கு மாறாக, இப்படி ஒரு புகழ்ச்சிக்கு நான் ஆளாக வேண்டுமென்றால், எனக்கு இது பெருமையாகவே யிருந்தது. இதுவே நான் உத்தியோகத்திலிருந்தால் நடந்திருக்காது. ஓய்வொழிவின்றிக் கடமையிலேயே கருத்தாய்க் காரியாலயமே கதி என்று இருந்திருப்பேன்.

இதை யெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, மற்றவர்களைப்போல் மேலும் உத்தியோகத்தில் ஒட்டிக் கொண்டிருவரையில் ஒட்டிப் பார்த்துவிட வேண்டும் என்று வீண் ஆசை கொள்ளாமல், காலத்தில் ஓய்வு பெற்றது நல்லது என்றுதான் தோன்றுகிறது. இதையே மற்றவர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை.

எல்லாவற்றுக்கும் மேல், என்னுடைய பத்து ரூபாய் ரேஸ்ப் பிடியிலிருந்து தப்பி, நல்லதொரு நன்மையினை விளைவித்ததை எண்ணும்போது, எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. ஆமாம். ஆவதும் அழிவதும் பணத்தினால்தானே!



ஆரோக்கியம் அளிப்பவை
அனைவரும் விரும்புபவை
TSR
ஊறுகாய்கள்: எலுமிச்சை, மாங்காய்
மற்றும் கதம்ப காய்கறி ஊறுகாய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ASSORTED VEGETABLE PICKLES
T.S.R & Co.
டி. எஸ். ஆர். & கோ
வாசனைத் திரவியங்கள் தயாரிப்பவர்கள்
கும்பகோணம் (S. India)
சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸிஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு, சேல் ஏஜண்டுகள்: B. பாலபட்டாபி செட்டியார், (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது), கோயமுத்தூர். பம்பாய்க்கு ஏஜண்டுகள்: சர்மையா ஸ்டோர்ஸ், மாதுங்கா (G. I. P.)



இதைப்போன்ற டூத் பிரஷ் வேறில்லை!
உங்களுக்கேற்றபடியான! உங்கள் வாய்க்கு பொருத்தமானது!
பற்களை உறுதிப்படுத்தும் புது அம்சங்கள்
• முற்றிலும் ஸ்டெரிலைஸ் செய்யப்பட்டது
• கால்கேட் டூத் பிரஷ்களின் ஹாண்டில்கள் தனி வர்ண முள்ளவை; உங்களுக்கு ஏற்றதை லகுவில் அறியலாம்
• பிளாஸ்டிக் ஹாண்டிலில் நிஜ நைலான் நார்கள்
• மிருதுவாக பாலிஷ் செய்கிறது; இனமல் சிதையாது
• பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது
குழந்தைகளுக்கு
ஸ்திரீகளுக்கு
ஆண்களுக்கு
2 சைஸ்கள்
பெரியவர்களுக்கு குழந்தைகளுக்கு
ஷார்ட், மீடியம், சாப்ட் டப்ட்ஸ்
COLGATE
NYLON TOOTH BRUSH
AN EXCELLENT QUALITY TOOTH BRUSH WITH GENUINE NYLON BRISTLES - FIRMLY FASTENED
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
"துவண்டு" போவதில்லை



11. குயிலியின் கதை

நிராதரவானவர்களுக்கும் அங்கஹீனர்களுக்கும் அநுதாபம் அவசியம் தேவை. ஆனால் அவர்களுடைய துயரத்தைக் கேட்பதற்குத்தான் யாருக்கும் அவகாசம் கிடைப்பதில்லை. அப்படியே அவகாசம் கிடைத்தாலும் இந்த உலகத்தில் பெரும்பாலானவர்கள் அவர்களுடைய துயரக் கதையைக் கேட்டுத் தன் மனத்தைக் கெடுத்துக் கொள்ள விரும்புவதில்லை. ஆகவே, யாராவது எப்பொழுதாவது இரக்கப்பட்டு அவர்களுடைய துயரத்தைக் காது கொடுத்துக் கேட்டு, அநுதாபம் தெரிவித்து நாலு ஆறுதல் வார்த்தைகள் சொல்ல முன் வருவதென்றால் துயரப்பட்டவர்களுக்குத் தங்களுடைய துயரச் சுமை சற்றுக் குறைவது போன்ற பிரமை உண்டாவது இயல்பே அல்லவா?

சுதாகரைப் போன்ற ஒரு நவநாகரிக வாலிபன் தன் வரலாற்றைக் கேட்கத் தொடங்கவே, குயிலி அவனிடம் தன் உள்ளத்தைத் திறந்து காட்டத் தொடங்கினாள்.

* * *

குயிலி ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவள். அவளுக்குப் பிள்ளைப் பருவத்திலிருந்தே பாட்டென்றால் பிரியம். அவள் எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுத்த வண்ணம் இருப்பாள்.

குழந்தைப் பருவத்துக்கும் யௌவனப் பருவத்துக்கும் இடையே உள்ள இளமைப் பருவத்தின் எழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் இந்த உலகத்தில் யார் சரியாகப் புரிந்து கொள்ள முடிந்திருக்கிறது? ஒரு புறம், யௌவனப் பருவத்தின் சஞ்சல சுபாவமும் இன்ப லாகிரியும் இனந் தெரியாத இன்ப உலகத்துக்கு இழுத்துச் செல்லும். இன்னொரு புறம், குழந்தைப் பருவத்தின் கள்ளங் கபடமற்ற தன்மையும், அறியாமையும், ஆவல் உணர்ச்சியும் இருதயத்தை ஆகர்ஷித்து ஆனந்த உலகத்துக்கு அழைத்துச் செல்லும். இம்மாதிரி இருவித உணர்ச்சிகள் அங்கும் போகவொட்டாமல் இங்கும் வரவொட்டாமல் இழுத்துத் தத்தளிக்கும்படி செய்யும் பருவம்தான் இளமைப் பருவம் என்ற இனிய பெயரால் அழைக்கப்படுகிறது.

இளமைப் பருவத்தை அடைந்த குயிலியை அவளுடைய பாட்டு வாத்தியார் ஒரு நாள் பேச்சினால் மயக்கினார். அறியாத பேதையான குயிலி பாட்டு வாத்தியாரின் அறியாத பாக்கியத்துடன் தன் பாக்கியத்தை இணைக்கத் துணிந்து விட்டாள். அவள் அப்படித் துணிந்ததற்குக் காரணம், ஏதும் சூது வாது அறியாத இளமைப் பருவம்தான். சங்கீதத்தின் தெய்வீகம் வாய்ந்த இனிய நிழல் இப்படிப் பாவத்தின் உற்பத்தி ஸ்தானமாக ஆகிவிடக் கூடும் என்பதை அப்பொழுது யார் கண்டார்கள்?

மகுடியின் இன்னிசையிலே மூழ்கி மெய்ம் மறந்த ஸர்ப்ப ராஜனுக்கு அந்த இன்னிசையின் இன்ப லாகிரி தன்னைப் பாம்பாட்டியின் பெட்டியிலே அடக்கிக் கட்டிப் போடும் திறன் வாய்ந்தது என்பது தெரிந்திருக்க நியாயம் ஏது? தெரிந்திருந்தால் மகுடியின் கானத்திலே மயங்கி மது உண்டவன் போல் ஸர்ப்ப ராஜன் கட்டுண்டிருப்பானா?

மதி மயங்கச் செய்யும் சங்கீதத்திலே தன்னை மறந்து நிற்கும் மானுக்கு, வேடனின் அம்பு தன்னைக் கொல்லக் காலனாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணம் எங்கே ஏற்படப் போகிறது? ஏற்பட்டால் கானத்தைக் கேட்டுக் கொண்டு இறங்கி நிற்குமா?

அதே போலக் கொஞ்ச காலம் சுகம்-துக்கம் இவ்விரண்டின் அநுபவத்தையும் குயிலிக்கு ஊட்டி விட்டுப் பாட்டு வாத்தியார் எங்கோ மறைந்து விட்டார். அப்புறந்தான் துர்ப்பாக்கியம் பிடித்த அந்தப் பெண்ணுக்கு 'நாம் பாவச் சகதியில் மாட்டிக் கொண்டு விட்டோம்' என்பது தெளிவாகியது.

வலையில் சிக்கிக்கொண்ட மீன்கள் துடியாய்த் துடிக்கின்றன. ஆனால் அவற்றுக்கு மரணத்தைத் தவிர கதி ஏது? முக்திதான் எங்கே கிடைக்கப் போகிறது? அவை என்னதான் துடியாய்த் துடித்துத் துள்ளிக் குதித்தாலும் அவற்றுக்கு விடுதலை கிடைத்து விடப்போகிறதா? என்ன துடித்து என்ன? சாவின் கையில் தானே அவை சிக்கி மடிய வேண்டியிருக்கிறது!

அதேபோலக் குயிலியும் அந்தப் பாவச் சேற்றிலிருந்து வெளியேற எத்தனையோ முயன்றாள். ஆனால் மனத்தை மயக்கும் அவளுடைய அழகும், சங்கீதமும் ஆண்களின் சிந்தனைக்கு உகந்த ஆசைக்கும் மிருக இச்சைக்கும் இலக்காகி அவளை இன்னும் பாவப் படுகுழியில் ஆழ்த்தத்தான் உதவின.

சில தினங்கள் தாங்க முடியாத கஷ்டத்தில் உழன்ற அவளுக்கு ஒரு வாலிபனின் அறிமுகம் கிட்டியது. அவனுடன் பழகிய வரை அவளுக்கு அவனிடம் மனிதத் தன்மை இருப்பதாகப் பட்டது. எனவே, அவனுடன் அவள் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொண்டாள். அந்த வாலிபன் முன்பே மணமானவன். இருந்தாலும் அவன் குயிலிக்கு அடைக்கலம் அளித்தான். ஆனால் அந்த வாலிபன் அவளுடைய சரீரத்தின்மீது பற்றுக்கொண்டிருந்தானா, அல்லது சாரீரத்தின் மீது பற்றுக் கொண்டிருந்தானா என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவன் இருந்த நிலையில் அந்தச் சமயம் அவளுக்கு அதைப்பற்றி யோசிக்கக் கூடத் தோன்றவில்லை. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு அந்த வாலிபன் மிகக் கொடிய நோய் ஒன்றினால் பீடிக்கப் பட்டவன் என்னும் ரகசியம் வெளியாகியது.

இந்த உலகத்தில் தான் கொடும்பாவி கூடச் சாக விரும்புவதில்லையே! எப்படியாவது உயிர் வாழத்தானே விரும்புகிறான்? அந்த வாலிபனும் உயிர் வாழ்வதற்காக வேண்டி மருந்துக்கும் மாயத்துக்கும் பணத்தைத் தண்ணீராகச் செலவிட்டான்.

பணம் போயிற்று; பணச் செருக்கு போயிற்று. உடலின் கவர்ச்சியும் அழகும் விடைபெற்றுக் கொண்டன. அழகிய உடலாக இருந்தால் என்ன? முதுமை மனம் இரங்கி அதை விட்டு வைக்குமா? முதுமையின் சின்னங்கள் அவளை ஆட்கொண்டன. அழகிய உடலுக்குள் அவ்வளவு நாளும் மறைந்திருந்த குரூபமும் கோரமும் வெளிப்பட்டுப் பல்லை இளித்தன. கண்களுக்குப் புலனாகாத ஏதோ ஒரு மாய சக்தி மனிதனின் சஞ்சலம் வாய்ந்த கண்களைச் சஞ்சல மற்றவையாகவும் பளிச்சிடும் விழிகளை ஒளியற்றவையாகவும் ஆக்கி விடுகிறது, சிவந்த ரோஜாக் கன்னங்களை ஒட்டி உலர்ந்ததாக ஆக்கி விடுகிறது, மலர் முகத்தைக் கோரமாக்கிப் பயங்கரமாக்கி விடுகிறது என்பதை வயதானவர்களும் வியாதியஸ்தர்களும்தான் அநுபவ வாயிலாக உணரமுடியும். மற்றவர்கள் அதை உணர்வது என்பது அவ்வளவு இலகுவான காரியம் இல்லை.

குயிலியும் தினம் தினம் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து வந்தாள். ஒரு நாள், கண்ணுக்குப் புலனாகாத அந்தத் தெய்வீகக் கை தன் முகத்திலும் தன் விளையாட்டை விளையாடி விட்டது என்பதை அவள் கண்டு கொண்டாள். உடனே அவளுக்கு உள்ளூறத் திகில் பற்றிக் கொண்டது. நமது கண்களும் ஒருவேளை போய் விடுமோ?-இந்தச் சந்தேகம் அவளுடைய மனத்தில் பயங்கரப் பேயுருவம் தரித்துப் பயமுறுத்தியது. ஆகவே, அடிக்கடி அவள் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கலானாள். அந்த நோய் வாய்ப்பட்ட வாலிபனுடன் அவள் கொண்டிருந்த சகவாச தோஷத்தினால் அவள் பயந்தபடியே அவளுடைய கண்கள் ஒளியிழந்து விட்டன; குருடாகப் போய் விட்டன. அவள் அப்புறம் எத்தனைதான் அழுது என்ன, என்னதான் வருந்தியென்ன? போன கண்களை அவற்றினால் திருப்பிக் கொண்டு வர முடியவில்லை.



இன்று வரை அழுகையும் வருத்தமும் கடந்து போன பழைய காரியத்தைத் திரும்பவும் அதே பழைய உருவில் கொண்டு வந்திருக்கின்றன என்று யாராவது எங்கேயாவது கேள்விப்பட்டது உண்டா? கண்கள் போனதும், அவளி

டம் பரிவும் இரக்கமும் கொண்டிருந்த வாலி பன், அவளுக்குக் கொடுத்திருந்த வீட்டைத் திரும்பவும் பிடுங்கிக் கொண்டான். காரியம்ஆகும் வரை காலைப் பிடிப்பது என்பது தானே இந்த உலகத்தின் இயல்பு? குயிலியின் உடலும், கண்களும் அந்த நிலையை அடைந்ததற்கு உதார குணம் படைத்த அந்த வாலிபனின் பங்கு எத்தகையது என்பதை ஆற்றல் மிகுந்த வைத்தியர்கள்தான் கணக்கிட்டுக் கூற முடியும்! ஆனால் அவர்கள் அந்தக் கணக்கை யாருக்குச் சொல்ல வேண்டும்? எதற்காகச் சொல்ல வேண்டும்?

இவ்வுலகில் வாழும் மாந்தர்கள் பெரிய பெரிய காரியங்களின் பொறுப்பைப் பாக்கிய தேவதையான விதியின் பெயரிலோ அல்லது பகவானின் தலையிலோ தானே சுமத்துகிறார்கள்? குயிலியின் அந்தச் சீரழிந்த நிலையின் பொறுப்பும் புலனுக்கெட்டாத பாக்கியத்தின் தலையிலும் பகவானின் தலையிலும்தான் சுமந்தது. இதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது?

"எல்லாம் பண்ணின பாபத்தின் பலன். அவரவர் கர்மாவுக் கேற்ற பலன்தானே கிட்டும்!" என்று ஜனங்கள் சொல்லத் தொடங்கினார்கள். நாலு பேர் பார்க்க நன்றாயிருந்த வரையில் அவளுக்கு அடைக்கலம் அளித்திருந்த வாலிபன் சிறிதும் ஈவு இரக்கம் இன்றிச் சங்கோசத்தை முற்றிலும் துறந்து விட்டுக் குயிலியின் கையைப் பிடித்துக் 'கர கர'வென்று இழுத்து வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டுத்தான் மூச்சு விட்டான்.

ஆனால் அவள் எங்கே போவாள், பாவம்! அவளுக்கு யார் அடைக்கலம் அளிப்பார்கள்? ஒரு நல்ல குடும்பத்தில் உதித்த பெண், லட்சாதிபதிகளை யெல்லாம் பித்தர்களாக ஆக்கும் திறன் வாய்ந்த எழில் உருவம் பெற்ற பெண், ஆதரவற்றவளாகி விட்டாள். அவளை யாரென்று கேட்பவர்கூட இல்லை. அப்படியிருக்கும் பொழுது அவளைக் காப்பாற்ற யார் முன் வரப்போகிறார்கள்? கீழே பூமி, மேலே வானம், இதைத் தவிர மிகுந்த உலகம் முழுவதும் அவளைப் பொறுத்தவரை அழிந்து விட்டது. ஆனால் அவளுடைய விதியை என்னவென்று சொல்வது? அந்தப் பூமியும் வானமும்கூட அல்லவா அவள் கண்களுக்குத் தெரியாதவையாகி விட்டன! கண் இழந்த குருடிக்கு வானத்தையும் புவியையும் பார்க்கும் சக்தி ஏது? அவளுடைய உள்ளம் வெறிச்சோடிச் சூன்யமே உருவானதாக ஆகிவிட்டது. இருளே உருவான உலகத்தில் அவள் இங்கும் அங்கும் அலைந்து இடிபடலானாள். நான்கு நாட்கள் வரை சாப்பாடு என்பதே அவளுக்குக் கிடைக்க வில்லை. உடலை விற்றுப் பிழைத்தவளுக்குப் பிச்சை வாங்கிப் பிழைக்க வர வில்லை. பாவக் குழியில் விழுந்து விட்ட பொழுதிலும் உள்ளத்தில் கனிந்து கொண்டிருந்த செருக்குத் தீயின் தணல் அவளைப் பிச்சை வாங்க விடவில்லை. கயிறு எரிந்து விட்டாலும் முறுக்குப் பிரிவதில்லை.

அம்மாதிரி நிலைமையில் அவள் உண்மையாகவே மரணத்தை விரும்பி வரவேற்கத் தொடங்கி விட்டாள். அந்த நிலையில் அவளுக்கு அடைக்கலம் அளிக்கக்கூடிய பொருள் மரணம்தானே? அவள் யாருக்காக உயிர் வாழ வேண்டும்? எதற்காக உயிர் வாழ வேண்டும்? அப்படியே அவள் உயிர் வாழ விரும்பினாலும் இந்த உலகத்தில் அவளை யார் உயிர் வாழவிடப் போகிறார்கள்? கண்கள் இருந்தாலாவது அவள் கூலி வேலை செய்து வயிறு வளர்க்க வழி தேடலாம்.

கண் இழந்து தட்டித் தடவித் தயங்கிய வாறு நடந்து கொண்டிருந்த அவளுக்கு வழியில் யாரோ போவது போலத் தோன்றியது. கண் போய்விட்ட பொழுதிலும் காது போக வில்லை யல்லவா?

"அப்பா! எனக்காக ஒரு காரியம் செய்ய முடியுமா? உனக்குப் பெரிய புண்ணிய முண்டு!" என்றாள் அவள் ஒடிந்த குரலில்.

"புண்ணியமோ, பாவமோ எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது. அதைப் பற்றி எனக்கு அக்கறையும் இல்லை; கவலையும் கிடையாது. ஆனால் உனக்கு என்ன காரியம் ஆகவேண்டும், சொல்! என்னால் ஆனதைச் செய்கிறேன். உனக்குக் கண் தெரியாதா? நீ குருடா?" என்று கேட்டான் வழிப் போக்கன்.

இந்த நான்கு நாட்களிலும் அவள் இவ்வளவு தெளிவான, இவ்வளவு ஆதரவான பதிலைக் கேட்க வில்லை. இன்று தான் முதல் தடவையாக அவள் அம்மாதிரி வார்த்தைகளைக் கேட்டாள்.

"என்னைக் கடற் கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விட முடியுமா?" என்று கேட்டாள் அவள்.

"கடற்கரை இதோ சமீபத்தில் தான் இருக்கிறது. அங்கே நீ எங்கே போக



வேண்டும்?" என்று கேட்டான் வழிப்போக்கன் மறுபடியும்.

"நான் கடலில் குளிக்க வேண்டும். நான் ஒரு விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்!"

"உன்னைப் பார்த்தால் நீ பசியினால் வாடிக் கொண்டிருப்பது போல் அல்லவா தோன்றுகிறது! நடக்கக் கூட உனக்குத் திராணியிருப்பதாகத் தெரியவில்லையே! எப்படிக் குளிப்பாய்? முதலில் ஏதாவது சாப்பிடுகிறாயா?' என்று கேட்டான் வழிப்போக்கன்.

'உலகத்தின் வறட்சியே உருவான மலையிலிருந்து இந்தக் குளிர்ந்த நீர் அருவி எங்கிருந்து பெருகத் தொடங்கியது?' என்ற வியப்பில் குயிலி யோசனை செய்யத் தொடங்கினாள். ஏனெனில் அவளைத் தான் இந்த உலகம் போட்டுப் போட்டு வாட்டி வதக்கி எடுத்திருந்ததே! அதனால் எந்த ஆண் பிள்ளையையும் நம்புவதென்றால் அவள் மனம் ஒப்பவில்லை. அந்த வழிப் போக்கனிடமும் அவளுக்கு இலேசில் நம்பிக்கை உண்டாகவில்லை. "குளித்த பிறகுதான் சாப்பிடுவேன். அதற்காகத்தானே பட்டினி கிடக்கிறேன்!" என்று பதில் அளித்தாள் அவள்.

"சரி, அப்படியானால் வா! நான் அழைத்துக்கொண்டு போய் விடுகிறேன்!" என்றான் அந்த வழிப்போக்கன்.

இந்த உலகத்தில் சீவிவான், நேர்மை வாய்ந்தவன் என்று சொல்லப் படுகிறவர்கள் எல்லோரும் பாவத்தின் நிழலைக் கண்டாலே பயந்து விலகி நிற்கிறார்கள். நிழலைக் கண்டே ஓடி ஒளிபவர்கள் அதைத் தொடுவது அல்லது அணுகுவது என்றால், அது நடக்கக் கூடிய காரியமா? குயிலிக்குத் தன் மரியாதைக் குறைவும் இழிவு தன்மையும் நினைவு வந்தன. 'இந்த மனிதர் சீவிவானயிருந்து என்னைத் தொட்டு விட்டால் பரிசுத்தம் அற்றவராகி விட மாட்டாரா? போதாததற்கு நாம் அந்தப் பாவத்தையும் வேறு ஏன் கட்டிக் கொள்ள வேண்டும்?' என்று எண்ணினாள் குயிலி. எனவே, அவனுக்கு முன்னாலேயே அவன் மேல் படாமல் ஒதுங்கி ஒதுங்கி நடக்கத் தொடங்கினாள்.

மாலை நேரம் வந்து விடவே, கடலுக்கு உற்சாகம் தலைக்கேறி விட்டது. அலைகள் மலையத்தனை உயர்ந்து சுருண்டு சுருண்டு விழலாயின. கடலை அடைந்ததும் வழிப்போக்கன் குயிலியைப் பார்த்து, "கரையருகில் நின்றே குளி. உனக்குத் துணையாக நான் தள்ளி நிற்கிறேன்!" என்றான்.

"ஊஹூம், நீங்கள் நின்று கொண்டிருந்தால் நான் எப்படிக் குளிப்பது? நீங்கள் போங்கள்! நான் குளித்து விட்டு எப்படியாவது போய்க் கொள்ளுகிறேன். அது மட்டும் அல்ல; எனக்காக நீங்கள் உங்கள் வேலை வெட்டிகளை யெல்லாம் விட்டு விட்டு நிற்பதா? நீங்கள் போய் வாருங்கள்!"— இப்படிச் சொல்லிக் குயிலி அந்த வழிப்போக்கனை அங்கிருந்து எப்படியாவது அகற்றி விட விரும்பினாள்.

"சரி! அப்படியானால் நான் போய் வரட்டுமா? நீ குளித்து விட்டுத் தனியாகப் போய்க் கொள்கிறாயா?" என்று கேட்டு, அவளிடம் விடை பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றான் அவன்.

ஆனால் அந்த மையிருட்டு நேரத்தில் ஒரு குருட்டுப் பெண் கடலில் குளித்து விட்டு எப்படிக் கரையேறி வருவாள் என்று அவனுக்கு விளங்க வில்லை. ஒரு வேளை அவள் தற்கொலை புரிந்து கொள்ள வந்திருப்பாளோ என்ற சந்தேகம் அவனுக்கு உதித்தது.

நிஜமாகவே கடலில் மூழ்கி மரிக்க விரும்பினாள் குயிலி. கடலின் அலைகள் அவளை விழுங்க வெண்ணி அவளை நோக்கி ஆவலுடன் முன்னேறி வந்து கொண்டிருந்தன. அவை சீறிக்கொண்டு வரும் சத்தம் அவளுக்குச் கர்ணாமிர்தமாகக் காதில் விழுந்தது.

கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் கடலில் அவளுக்கு அடைக்கலம் கிடைத்து விடும். அவளுடைய பாவம் நிறைந்த துயரமயமான வாழ்க்கை முடிந்து விடும்.

இந்த எண்ணம் எழுந்து அவளைப் புல்லரிக்கச் செய்தது. பெருமிதப் படச் செய்தது.

ஒரு அலை வந்து அவளை அழைத்துச் சென்றது. அவளுக்கு மகிழ்ச்சி கட்டுக்கடங்க வில்லை. அவள் மெல்லிய மிருதுவான இனிய குரலில் ஒரு பாட்டை முணுமுணுக்கத் தொடங்கினாள். அப்பப்பா! அந்தப் பாட்டுத்தான் என்ன பாட்டு!

வா, வா! சாவே, வா, வா!
சாந்தி தரும் சாவே, வா, வா!

சாவுடன் விளையாட்டா? இதென்ன பைத்தியக்கார விளையாட்டு? வழிப்போக்கன் தூர நின்ற வண்ணம் அவளுடைய இந்தச் செய்கைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தான். குயிலிக்கு வழிப்போக்கன் நின்று கொண்டு இதை யெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற விஷயம்தெரியாது.

அவன் அடிமேல் அடி எடுத்து வைத்து ஆழ்கடலை நோக்கிச் சென்றான். சில வினாடிகளுக்கெல்லாம் சமுத்திரத்தைச் சரண் அடைந்தாள். ஆனால் சமுத்திரத்தைக் காட்டிலும் சக்தி வாய்ந்த சரண் தனக்குக் கிடைக்கப் போகிறது என்று அவளுக்கு அந்த நேரத்தில் தெரிந்திருந்தால் தானே? வழிப்போக்கன் அதற்கு மேல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. சட்டென்று அலைகடலில் குதித்தான். அலைகடலில் விழுந்து அலட்சியமாகச் சாவுடன் விளையாடியவாறே அதை அணைத்துக் கொள்ள முயன்று கொண்டிருந்த குயிலியை அவன் அநாயாசமாகத் தூக்கி வந்து கரை சேர்த்து விட்டான். ஆனால் குயிலி அதற்குள் கடல் நீரைக் குடித்துப் பிரக்ஞை யிழந்து விட்டாள்.

வழிப்போக்கன் அவளை ஒரு இடத்துக்குத் தூக்கிச் சென்று முதல் உதவி செய்வதில்

முனைந்தான். சிறிது நேரத்துக்குப் பின் தான் குயிலிக்குத் தன் நினைவு வந்தது.

“ஐயோ! இந்தப் பாழும் உலகம் என்னைச் சாகவும் விடாது போலிருக்கிறதே! ஒரு மனிதனுக்கு நிம்மதியாகச் சாகக்கூட இந்த உலகத்தில் உரிமை கிடையாதா?” என்று கேட்டுத் தன்னைத் தானே நொந்து கொண்டாள் குயிலி.

அதைக் கண்ட வழிப்போக்கன், பாட்டின் மற்றொரு அடியைப் பாடினான் :—

சாவும் வாழ்வும் வாராது காண்!
சாவுத் தேவதையின் சம்மதமின்றியே!
‘சாவே வா, வா’ என்று வருந்திச்
சாவை அழைத்தாலும் வாராது காண்!

கண நேரம் குருடி குயிலி பேசாமல் இருந்தாள். பிறகு வழிப் போக்கனைப் பார்த்து, “அநாதையான இந்தக் குருடியைப் பிழைக்க வைத்து நீங்கள் என்ன சுகத்தைக் காணப் போகிறீர்கள்?” என்று கேட்டாள்.

“என்ன சுகத்தைக் காணப் போகிறேனா? உன் பாட்டைக் கேட்பேன். உன் குரலினிமையைக் கேட்ட பின் உன்னைச் சாக விடுவது என்றால் அது நடக்கக் கூடிய காரியமா?” என்றான் வழிப்போக்கன்.

அவள் தன் குரலினிமையின் மீது குற்றம் சுமத்தித் தன்னைத் தானே மனத்துள் பெரிதும் நொந்து கொண்டாள்.


“ஆனால் நான் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்னைப் பற்றிய விவரத்தைத் தெரிந்து கொண்டு விட்டீர்களானால் அப்புறம் என்னை அரைக் கணங்கூட உங்கள் வீட்டில் இருக்கவிட மாட்டீர்கள்!”—சிறிது நேரம் கழித்து வருத்தமே உருவான குரலில் குயிலி கூறினாள்.

அதைக் கேட்ட அந்த ஆண் மகன் சிரித்து விட்டு, “குழந்தாய்! உன் வரலாற்றை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. என் வீட்டைப் பற்றி நீ சிறிதும் கவலைப் படாதே. எனக்கு வீடு வாசல் என்று ஒன்றும் கிடையாது. நான் ஒரு நாடோடி. நான் தங்கும் இடங்கள் எல்லாம் என் வீடுகள்தாம். என் வீட்டை ஒரு தர்மசத்திரம் என்றே எண்ணிக் கொண்டேன். யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் இங்கே வரலாம், தங்கலாம், தெரிந்ததா?” என்றான்.

அதைக் கேட்ட குயிலிக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது. ஹிம்சையே உருவான இந்த உலகத்தில் இவ்வளவு பரோபகார சிந்தையும் இருக்கிறதா? இதை எண்ணிய அவள் கண்களில் நீர் முத்தாகக் கோத்து நின்றது. அந்தக் குருட்டு அபலைப் பெண்ணின் கண்களில் முத்திட்ட நீரை யாரோ கைக் குட்டையினால் துடைத்தார்கள். ஆதரவிழந்த குயிலி நன்றி நினைவில் உள்ளம் உருகினாள். அவள் கண்களிலிருந்து நீர் இன்னும் ஆறாகப் பெருகத் தொடங்கியது. நீர் பெருகப் பெருக அவள் கண்களை யாரோ துடைத்துக் கொண்டே யிருந்தார்கள். குயிலி அழ முடிந்த வரை அழுது தீர்த்தாள். அவள் அழும் மட்டும் அழட்டும் என்று விட்டு விட்டார்கள். யாரும் அவளைத் தடுக்கவோ சமாதானப் படுத்தவோ இல்லை. உள்ளத்தில் உள்ள குமுறல்களை யெல்லாம் கண்ணீராக வடித்து அழுது தீர்த்த பிறகுதான் அவள் இருதயம் சுமை இறங்கி இலேசாகியது. அவள் கண்ணீர் நின்றதும், கைக்குட்டையினால் தன் கண்ணீரைத் துடைப்பவரின் கையைப் பிடித்துக் கண்ணில் அன்புடன் ஒற்றிக் கொண்டாள்.

அடுத்த கணம் குயிலி துணுக்குற்றாள். அவளுடைய கண்களிலிருந்து கிளம்பிய கண்ணீர் கன்னத்தில் சொட்டி வழிந்தது. கைக் குட்டையினால் தன் கண்ணீரை இது

பலே, லட்டு!



வரை துடைத்த கை அவளுக்கு மென்மையானதாகத் தோன்றியது. அந்த மென்கரம் ஒரு பெண்ணின் கரமாக இருக்க வேண்டும் என்று ஊகித்தாள். எனவே, குரலில் குழைவை வரவழைத்துக் கொண்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

"உன்னைப் போலவே துர்ப்பாக்கியத்தின் கையில் சிக்குண்ட ஒரு பெண். நானும் உன் வர்க்கத்தைச் சேர்ந்தவள்தான்!" என்றாள் அந்தப் பெண்மணி.

அந்த வார்த்தையைக் கேட்டதும் குயிலி மேலும் துணுக்குற்றாள். 'நாம் திரும்பவும் தீச்செயல்களுக்கே இருப்பிடமான விடுதியில் வந்து சிக்கிக் கொண்டு விட்டோமா, என்ன?' என்று அவளுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. இருந்தாலும் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு, "உன் பெயர் என்ன, அம்மா?" என்று கேட்டாள்.

"என் பெயரா? மாலதி!" என்றாள் அந்தப் பெண்மணி.

பெயரைக் கேட்டதும் குயிலிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தான் மோசம் போய் ஒரு பாவப் படுகுழியில் திரும்பவும் வந்து விழுந்து விட்டதாகவே தீர்மானித்து விட்டாள். ஆகவே, மிகவும் பீதியுற்ற குரலில், "குருடியான என்னை இங்கே வைத்துக் கொண்டு என்ன செய்வீர்கள்?" என்று பரிதாபமான குரலில் கேட்டாள்.

மாலதி அவளுடைய கருத்தைப் புரிந்து கொண்டாள். "அது இருக்கட்டும். அப்படியானால் நீ எங்கே போக விரும்புகிறாய்?" என்று கேட்டாள்.

"எனக்குப் போக்கிடம் ஏது? நான் வேறு எங்கேயும் போக விரும்ப வில்லை. சாகப் போகத்தான் விரும்புகிறேன். சாகத்தான் போனேன். ஆனால் யாரோ......"

"நீ சாக வேண்டாம். இங்கேயே இரு!"

"மறுபடியும் பாவச் செயல் புரியவா நான் உயிர் வாழ வேண்டும்? வேண்டாம், வேண்டாம்! நான் செத்தே போகிறேன்! என்னை விட்டு விடுங்கள்!" என்று கதறினாள் குயிலி.

"பாவச் செயல்கள் புரிய வேண்டாம். உன்னை இங்கே யாரும் பாவச் செயல் புரியத் தூண்ட மாட்டார்கள். நீ ஏதாவது பாவம் பண்ணியிருந்தால் பண்ணின அந்தப் பாவத்துக்குப் பச்சாத்தாபப்படு; பிராயச்சித்தம் தேடு!" என்றாள் மாலதி. (தொடரும்)

கைமேல் பலன்

வெள்ளைக் காகிதத்தையும் பௌண்டன் பேனாவையும் சேர்த்துப் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்கு நண்பன் சோமசுந்தரத்தின் ஞாபகம் தான் வரும்! ஏனெனில் காகிதத்தைக் கண்டு விட்டால் அவன் தன் கையெழுத்தைப் போட்டுக் காகிதத்தைக் கரியாக்க ஆரம்பித்து விடுவான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சீட்டு விளையாட வழக்கமாக வரும் நண்பர்கள் குழாத்துடன் சோமசுந்தரம் என் இல்லத்திற்கு வந்து சேர்ந்தான். என்றும் இல்லாத திருநாளாக அன்று நானுமே அவன் பக்கத்தில் ஒரு காகிதத்தையும் பேனாவையும் எடுத்து வைத்தேன். அப்புறம் கேட்பானேன்! சோமு தன் மணியான கையெழுத்துக்களை மறு நிமிடம் காகிதத்தில் உதிர்க்கலாரம்பித்து விட்டான்! இரண்டொரு கையெழுத்துகள் போடுவதற்குள் சீட்டுக்கள் போடப் பட்டு விட்டதால் சோமசுந்தரம் பேப்பரைக் கீழே வைத்துவிட்டு விளையாட்டில் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று!

மாலை நாலு மணிக்கு நாங்கள் விளையாட்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சமயம் எங்கள் ஒவ்வொருவருக்கும் என் சின்னத் தம்பி மைசூர் பாகு, ஜிலேபி, மற்றும் கார வகைகள் பல அடங்கிய தட்டுக்களையும் காப்பியையும் கொண்டு தந்தான். எதிர் பாராத இந்த 'பார்ட்டி' யாவர்க்கும் ஆச்சர்யத்தையும் உற்சாகத்தையும் அளித்தது.

'ஷைலக்' என்று அழைத்து என் சிக்கன வாழ்க்கையைப் பற்றிச் சதா கேலி செய்யும் என் அருமை நண்பன் சோமசுந்தரம்கூட என் தாராள மனப் பான்மையையும், திடீர் மாறுதலையும் வாயாரப் பாராட்டி இரண்டு தட்டுப் பட்சணங்களை மள மள வென்று காலி செய்தான்!

அடுத்த வாரக் கடைசி தினம் சம்பள தினம். நானும் சோமுவும் காரியாலயத்திலிருந்து திரும்புகையில் 'வஸந்தா லாட்ஜ்' எங்களை 'வா, வா' வென்று அழைத்தது! டிபன் சாப்பிட்டு முடித்ததும் நூறு ரூபாய் நோட்டு ஒன்றை ஜம்பமாக எடுத்துப் பஞ்சுவையரிடம் நீட்டி, "அய்யர்வாள்! போன மாசப் பணத்தை எடுத்துக் கொண்டு பாக்கி தாருங்கள்!" என்றான் சோமு.

கணக்குப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து, "இந்த மாதம் முப்பத்திரண்டு ரூபாய்!" என்று கூறிப் பாக்கிப் பணம் அறுபத்தெட்டையும் எண்ணிக் கொடுத்தார் பஞ்சுவையர்.

"அய்யர்வாள்! சரியாகப் பாரும். பத்து ரூபாய்க்குமேல் ஆகியிருக்காது. போன மாதம்கூட நான் பாக்கி வைக்க வில்லை!" என்றான் சோமு.

"அன்றைக்கு நீங்கள் அனுப்பி வைத்த கடிதப் படி பார்ட்டிக்கு அனுப்பிய பட்சணங்களுக்கே இருபது ரூபாய் ஆகிவிட்டதே, ஸார்!" என்றார் தேனாட்டல் பஞ்சுவையர்.

"கடிதமாவது, பார்ட்டியாவது!" என்றான் ஆச்சரியத்துடன் சோமு.

"நான் பொய்யா சொல்கிறேன்!" என்று கூறிச் சுவரில் கம்பியில் கோக்கப்பட்டு மாட்டப் பட்டிருந்த காகிதங்களிலிருந்து ஒன்றைத் தேடியெடுத்து நண்பனிடம் நீட்டினார் பஞ்சுவையர்.

பலவித ஸ்வீட்டுக்களையும் காரங்களையும் அது கொண்டு வரும் சிறுவன் மூலம் அனுப்புமாறு என் முத்து முத்தான எழுத்துக்கள், தான் போட்டிருந்த கையெழுத்துக்கு மேலே காட்சியளிப்பதைக் கண்டதும், விஷயம் புரிந்து கொண்ட சோமு என் பக்கமாகத் திரும்பினான். அதற்கு மேல் அங்கு நிற்க எனக்குப் பைத்தியமா, என்ன!

மேற்படி நிகழ்ச்சிக்குப் பின் ஸ்ரீமான் சோமசுந்தரம் கையெழுத்தைப் பார்ப்பதே அபூர்வமாகி விட்டது! மனைவிக்கு எழுதும் அன்புக் கடிதங்களின் கடைசியில்கூட ஆசைக்கு ஒரு கையெழுத்துக்கூடப் போடாமல் இன்றும் அவன் தபாலில் சேர்ப்பதாகக் கேள்வி!

—வி. எஸ். ஸ்ரீ.

ஒவ்வொருமுறையும் எனது வாடிக்கைக்காரர்களை திருப்தி செய்யவேண்டும். நான் எப்பொழுதும் 'சான்போரைஸ்ட்' ('Sanforized') டிரேட் மார்க்குள்ள துணியைத்தான் உபயோகித்து வருகிறேன். அந்தச்சரக்கு அதன் இயற்கையான இறுதிப்பரிமாணத்திற்கு முன்னதாகவே சுருக்கப்பட்டுவிட்டதால் இனி மேலும் சுருங்காது என்பதை நானும் அறிவேன், அவர்களும் அறிவார்கள்.

பின்னியின் 'சான்போரைஸ்ட்' ('Sanforized') சுருக்கப்பட்ட துணியில் தைத்த உடைகள் எப்பொழுதும் உடம்புக்குப் பொருத்தமாக இருக்கின்றன.



'சான்போரைஸ்ட்' ('Sanforized') சுருக்கப்பட்ட துணியை உடை தைப்பதற்கு முன் நனைக்கக்கூடாதென்ற விஷயம் நல்ல தையல்காரர்கள் நன்கு அறிவர்.

ஆனால் அது பின்னியின் 'சான்போரைஸ்ட்' SANFORIZED சுருக்கப்பட்ட துணியாகவே இருக்கவேண்டும்

தயாரிப்பவர்கள்:
தி பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட், மதராஸ்

தி பெங்களூர் உலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட், பெங்களூர் ஸிடி

BY. 7781


எல்லாவித பல்வலிகளுக்கும்
பல் வெண்மை தரும்.....
ஈறுகளுக்கு வலு தரும்
உபயோகியுங்கள்
குரங்கு மார்க்
கருப்பு பல்பொடி
(REGD)
வாய்க்கு மணம் தரும்.
எங்கும் கிடைக்கும்
5 விதமான சைசுகள்
NOGI & CO.,
87, CHINA BAZAAR Rd, MADRAS-1
ஸ்டாக்கிஸ்டுகள் : மெஸர்ஸ் கே. எஸ். என். & கம்பெனி, சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி


Years of writing pleasure!
ஆண்டுகள் பல
ஆனந்தமாக எழுதலாம்!
★ வாக்குமாடிக் பில்லர்
★ இரிடியம் தோய்த்த நிப்பு
விலை
ரூ. 5/12
ரூ. 8/12
WILSON
VACUMATIC PEN
WITH A GUARANTEE
Sole distributors for India: KIRON & CO., LTD.
BOMBAY - CALCUTTA - MADRAS
மதராஸ் ஆபீஸ்:
கிரான் & கோ., லிட்., 82, நாராயண முதலி தெரு, ஜி. டி., சென்னை


3 வாசனைக் கலாரத்னங்கள்
கம் கம் ஜவாஜ் ★ கம்பால்
★ கமகர் அகர்பத்திகள்.
டி. எஸ். சுகந்தாலயா,
வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2

போலந்து நாட்டின் புகழ்பெற்ற தலைவர்

ஜெயமணி

(முன் தொடர்ச்சி)

அவ்விதமாக இரண்டே நாட்களில் போலந்தின் தலை நகரும் இதர மாகாணங்களும், பெரும் போர் எதுவும் நடவாமலேயே பில்சுட்ஸ்கியின் கைக்கு வந்து விட்டன!

உடனே போலந்து ஜனாதிபதி உள்படப் போலந்து மந்திரிகள் யாவரும் ராஜிநாமா செய்தனர். பிறகு ஜனநாயக முறைப்படி சிறிதும் தாமதமின்றி மறுபடியும் ஜனாதிபதி பதவிக்குத் தேர்தல் நடந்தது.

பில்சுட்ஸ்கியே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரிடம் போலந்து மக்கள் மிகுந்த மதிப்பும் அபிமானமும் கொண்டிருந்ததால், அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

எனினும் அதன் சம்பந்தமாக ஆச்சரியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதாவது தேர்தலில் வெற்றி பெற்ற பில்சுட்ஸ்கி ஜனாதிபதி பதவியை ஏற்க மறுத்து விட்டார்! இதைக் கண்டு பில்சுட்ஸ்கியின் நண்பர்கள், விரோதிகள், போலந்து நாட்டு மக்கள் சகலரும் திகைத்து விட்டார்கள்.

பிறகு பில்சுட்ஸ்கி ஜனாதிபதி பதவிக்குத் தாமே ஓர் அபேட்சகரை நியமித்தார். பின்னர் நடந்த தேர்தலில் அவரும் வெற்றி பெறவே, அவரே போலந்தின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்.

இக்னேஸ் மாஸிகி என்ற பெயருள்ள புதிய ஜனாதிபதி போலந்து அரசியலில் பிரக்யாதி பெற்றவர் அல்ல. எனினும் அவர் சிறந்த விஞ்ஞானி, கைத் தொழில் நிபுணர். ஜனாதிபதி பதவி ஏற்குமுன் அவர் பெரும் மருந்துத் தொழிற்சாலையின் அதிபராக இருந்து, அதன் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வந்தார்.

பில்சுட்ஸ்கியோ வெளியில், ஜனாதிபதி இக்னேஸ் மாஸிகியின் கீழ் இராணுவ மந்திரி பதவி ஏற்றார். எனினும், உண்மையில் போலந்தின் விதி அவருடைய கையில்தான் இருந்து வந்தது.

பிறகு பில்சுட்ஸ்கி பத்து வருஷ காலம் வரையில், அதாவது தாம் காலமாகும் வரையில் இரண்டு தடவை புகழுடன் பிரதம மந்திரி பதவி வகித்தார்.

அக்காலத்தில் அவர் போலந்தின் சர்வாதிகாரியாகவே விளங்கினார் என்று கூறுவது மிகையாகாது. அவர் மந்திரி சபையை ஆக்கவும் அழிக்கவும் வல்லவராக இருந்தார். எனினும் அவரது சர்வாதிகார ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாக இல்லை. அவர் போலந்து மக்களின் க்ஷேமத்தையே முக்கியமாகக் கொண்டு நிர்வாகத்தை நடத்தினார்.

பல துறைகளிலும் சீர் குலைந்து கிடந்த போலந்து பில்சுட்ஸ்கியின் காலத்தில் முன்னேற்றம் அடைந்தது. அப்போதுதான் உள் நாட்டில் அமைதி நிலவியது; போலந்து நிதி நிலைமை சீர் அடைந்தது; பொருளாதார சுபிட்சமும் ஏற்பட்டது.

* * *

அக்காலத்தில் டான்சிக் துறைமுகம் போலந்துக்குச் சொந்தமாக இல்லை. எனவே, பில்சுட்ஸ்கியின் காலத்திலேதான் பால்டிக் கடற்கரையில் போலந்துக்கு முற்றிலும் சொந்தமாக டினியா துறைமுகம் நிர்மாணிக்கப் பட்டது.

இவ்வாறாக, போலந்து சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வரும் போது, அதாவது 1933-ல் அடால்பு ஹிட்லர் ஜெர்மனியின் பிரதம மந்திரியானார்.

1934-ல் ஜெர்மனிக்கும் போலந்துக்கும் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. பத்து வருஷ காலத்துக்கு ஜெர்மனியும் போலந்தும் பரஸ்பரம் படை யெடுக்கக் கூடாது என்பதே அந்த ஒப்பந்தத்தின் சாரம். மேற்படி ஒப்பந்தத்துக்கு இணங்க போலந்து எல்லையை ஜெர்மனி ஒத்துக் கொண்டது. எனவே, அந்த ஒப்பந்தத்தைப் பில்சுட்ஸ்கி அங்கீகரித்தார்.

அதன் பலனாக ஜெர்மனிக்கும் போலந்துக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. டான்சிக் பிரதேசம் தங்களைச் சேர வேண்டும் என்ற ஜெர்மனியின் கிளர்ச்சி அடங்கியது. பில்சுட்ஸ்கியின் மரணத்துக்குப் பிறகு கூடப் போலந்து - ஜெர்மனி உறவுக்கு யாதொரு பாதகமும் ஏற்படவில்லை.

* * *

ஜெர்மனி 1939 மார்ச் மாதம் செக்கோஸ்லோவேகியா மீது படை யெடுத்து அதை ஆக்ரமித்துக் கொண்ட பின், போலந்துக்கு விரோதமாக அது தனது கிளர்ச்சியை மீண்டும் ஆரம்பித்தது. டான்சிக் பிரதேசத்தைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும் என்று ஹிட்லர் போலந்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அப்போது கர்னல் பெக் போலந்தின் வெளி நாட்டு மந்திரியாக இருந்தார். அவர் பில்சுட்ஸ்கியின் அந்தரங்கக் காரிய தரிசியாக இருந்தவர்; அத்தலைவரின் பூரண நம்பிக்கையைப் பெற்றவர்.

டான்சிக் விஷயமாக அவர் ஹிட்லருடன் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்குத் தயாராக இருந்தார். ஆனால் ஹிட்லரின் எச்சரிக்கைக்கு அடி பணிய அவர் அடியோடு மறுத்து விட்டார்.



போலந்து நாட்டுப் பெண்மணிகள்

உடனே ஜெர்மனி போலந்துக்கு விரோதமான நடவடிக்கைகளைக் கைக் கொள்ளத் தொடங்கியது. செக்கோஸ்லோவேகியாவை ஆக்கிரமிக்கு முன் ஜெர்மனி எவ்விதம் நடந்து கொண்டதோ, அது போலவே போலந்து விஷயத்திலும் முரட்டுத்தனமான முறைகளைக் கைக்கொள்ள முற்பட்டது.

இதைக் கண்ட பிரிட்டனும் பிரான்சும் கலங்கின. செக் நாட்டை ஜெர்மனி ஆக்கிரமித்துக் கொள்ள இடம் கொடுத்தது போல் போலந்தை ஆக்கிரமித்துக் கொள்ள இடம் கொடுக்கக் கூடாதென்று அவ் வல்லரசுகள் உறுதி கொண்டன. போலந்தை ஜெர்மனி தாக்கினால் தாங்கள் உதவிக்கு வருவதாக உத்தரவாதம் அளித்துப் போலந்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டன.

எனினும் அதை யெல்லாம் கண்டு ஹிட்லர் பயந்து விடவில்லை: தமது நோக்கத்தையும் கை விடவில்லை. போலந்தின் மீது ஜெர்மனியின் துவேஷப் பிரசாரம் வெகு தீவிரமாக நடை பெற்றது. போலந்து மீது ஜெர்மனி படை யெடுக்கப் போவது நிச்சயம் என்பதை மேற்படி பிரசாரம் உலகத்துக்குக் காட்டியது.

1939 செப்டம்பர் மாதம் 1-ந் தேதி ஜெர்மன் துருப்புகள் போலந்து மீது படையெடுத்துச் சென்றன. அதே சமயம் கிழக்குத் திசையிலிருந்து ருஷ்யத் துருப்புகளும் போலந்து மீது படை யெடுத்து வந்தன.

இரு புறங்களிலும் தாக்கிய படைகளைப் போலந்து எதிர்த்து நின்று சமாளிப்பதென்பது முடியாத காரியமாகியது. நேச நாடுகளிலிருந்து உதவிப் படைகள் வருவதற்கு வழி யில்லாததால், போலந்து தோல்வி யடைய நேர்ந்தது.

போலந்துப் படைகள், தலை நகரான வார்சாவைப் பாதுகாக்க இறுதிவரையில் போராடின. மேற்படி நகர் நாசமாகி, உணவுப் பஞ்சமும் ஏற்பட்டதால் தங்களுடைய தலை நகரைக் கை விடுவதைத் தவிர போலந்துப் படைகளுக்கு வேறு வழி இராமற் போயிற்று.

அவ்விதம் தோல்வி யுற்ற போலந்தை ஜெர்மனியும் ருஷ்யாவும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டன.

அப்போது கூடப் போலந்துத் தலைவர்கள் நம்பிக்கை இழக்க வில்லை. தற்காலிகமாக லண்டன் நகரில் போலந்து சர்க்காரை அமைத்துக் கொண்டு தங்களுடைய நாட்டின் விடுதலைக்காகப் போராட முற்பட்டார்கள்.

1941-ல் ஜெர்மனி ருஷ்யா மீது படை யெடுத்ததால், போலந்தின் நிலைமை இன்னும் அதிக மோசமாகியது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இறுதியில் ஜெர்மனி தோல்வி யடைந்ததால், போலந்தில் ருஷ்யாவின் ஆதிக்கம் வலுவடைந்தது. அப்போது ஏற்பட்ட போலந்து சர்க்கார் ருஷ்யாவின் கைப்பொம்மையாக இருக்க நேர்ந்தது.

எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தன் விடுதலைக்காகப் போராடிய போலந்து இறுதியில் மேற் கூறியவிதம் இரும்புத் திரைக்கு உட்பட்ட நாடுகளில் ஒன்றாகியது.

* * *

சுமார் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள போலந்தில், போலிஷ் மக்களைத் தவிர, ஜெர்மானியர், ருஷ்யர் முதலிய சிறுபான்மையோரும் ஏராளமாக இருக்கிறார்கள். போலந்தை ஜெர்மனியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தபோது, அந்நாட்டில் இருந்த முப்பது லட்சம் யூதர்களில் பெரும்பாலோர் நாஜியர்களிடம் பலியாயினர் என்று கூறப்படுகிறது.

சென்ற மகா யுத்தத்தின் முடிவில் போலந்தைச் சேர்ந்த எழுபதாயிரம் சதுர மைல் பரப்புள்ள பிரதேசத்தை ருஷ்யா கைப்பற்றிக் கொண்டது. எனினும் அதற்குப் பதிலாக, ஜெர்மனியைச் சேர்ந்த நாற்பதாயிரம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள பிரதேசம் போலந்துக்குக் கிடைத்துவிட்டது.

போலந்தில் இயற்கைப் பொக்கிஷங்களான உலோகச் சுரங்கங்களும் காடுகளும் ஏராளமாக இருக்கின்றன.

போலந்திலுள்ள பெரும்பாலான மக்களும் விவசாயத்தையே ஜீவனத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். கோதுமை, கம்பு, பார்லி, ஓட்ஸ், உருளைக்கிழங்கு முதலிய முக்கிய உணவுப் பொருள்கள் அந்நாட்டில் ஏராளமாக உற்பத்தி யாகின்றன.

கண்ணீர்ப் பரிசு

சங்கர்

இரவு எட்டு மணி இருக்கும். ஆபீஸிலிருந்து வரும்பொழுது பிரசவ ஆஸ்பத்திரிக்குச் சென்று தன் மனைவி சந்திராவைப் பார்த்துவிட்டு அப்போதுதான் வீட்டுக்கு வந்திருந்தான் சுந்தரம். சந்திராவைப் பிரசவத்திற்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பிய பிறகு வீடெல்லாம் வெறிச்சோடிப் போய் ஒரே சூனிய வெளியாகத் தோன்றியது.

மனைவி பெற்றுப் பிழைக்க வேண்டுமென்கிற கவலை, அதுவும் பெண் குழந்தையாகப் பிறந்து தன் இதயத் துயரை ஒருவாறு துடைக்க வேண்டுமென்கிற பைத்தியக்கார ஆசை, அந்த ஆசையின் விளைவாகப் பிறக்கும் ஏக்கம், மனத்தைத் தறிகெட்டு ஓடவிடும் தனிமை—இப்படியாக எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு அவனைத் திக்கு முக்காடச் செய்யும் வேளையிலே உத்தியோக உயர்வு சம்பந்தமாக டில்லிக்கு 'இண்டர்வியூ'வுக்கு வரவேண்டும் என்ற மேலதிகாரியின் கட்டளை வந்து அவனைத் தட்டு மறிந்து விளையாடியது. என்ன செய்வான், பாவம்!

வேலைக்காரன் எடுத்துக் கொண்டு வந்த ஓட்டல் சாப்பாட்டை வேண்டா வெறுப்போடு இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு தன் அறைக்குப் போய் நிம்மதியை வேண்டி உட்கார்ந்தான். ஆனால் நிம்மதி பிறக்கும் நிலையிலா அவன் மனம் இருந்தது! பழைய பழைய சிந்தனைகள், எண்ணச் சுழல்கள் வந்து மனத்திலே முட்டிக் கொண்டே இருந்தன.

சட்டென்று மேஜை அறையைத் திறந்து ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துத் தூசியைத் தட்டினான் சுந்தரம். மின்சார விளக்கின் ஒளியில் வான நீல வர்ணமுள்ள அந்தப் புத்தகத்தின் மேலட்டை பளபளவென்று பிரகாசித்தது.

முன் அட்டையைப் புரட்டி அப்படியே மேஜையின் மீது விரித்து வைத்தான். வலது புறமுள்ள வெள்ளை முகப்பில் தன் பார்வையைச் செலுத்திய வண்ணம் அப்படியே அசைவற்றுக் கூர்ந்து நோக்கினான், சூட்சம தரிசினியால் ஆராய்ச்சி செய்யும் ஒரு விஞ்ஞானியைப் போல. இதுவரை எத்தனையோ தடவை தன்மையில் அந்தப் புத்தகத்தை எடுத்திருக்கிறான் சுந்தரம். ஆனால் ஒரு முறையாவது உள்ளே ஒரு வரி கூடப் புரட்டியது கிடையாது. அந்தப் பக்கத்திலேயே அவன் கண்களும் கருத்தும் பெயர்க்க முடியாமல் பதிந்துவிடுவது வழக்கம். அப்படி சூட்சமதரிசினிக்கும் எட்டாத விஷயம் அதில் என்னதான் இருக்கிறதோ, தெரியவில்லை!

அதோ! அந்த வெள்ளைப் பக்கத்தில் பேனா முனை பதிந்த கரும்புள்ளி ஒன்று தெரிகிறது. அதற்குக் கீழே இரண்டு பொட்டுக் கண்ணீர்த் துளிகள் தெறித்து விழுந்து பின்பு காய்ந்து போன தடம் தெரிகிறது. அதற்கு அடியில் முத்தாய்ப்பு வைத்ததைப் போல 'சரோஜி' என்ற முத்துப் போன்ற எழுத்துக்கள்!

அதிகாலையில் புல்லின் நுனியில் துளித்திருக்கும் பனி நீர்த் திவலைக்குள் பரந்த வானத்தின் அழகு முழுவதும் பிரதிபலிப்பதைப் பார்த்து எத்தனையோ முறை வியந்திருக்கிறான் சுந்தரம். ஆனால் காய்ந்துபோன சூரிய வட்டம் போன்ற அந்தக் கண்ணீர்த் துளித் தடத்திற்குள், வெறும் வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒரு காதல் தத்துவமே புதைந்து காய்ந்து கிடப்பதை எண்ணிய பொழுது அவன் உடல் முழுவதும் புல்லரித்தது.

அந்தப் பக்கத்துக்கு அவன் இதயம் கொடுக்கும் வியாக்யானம் இதுதான்:

"தனக்குக் கல்யாணப் பரிசாக அனுப்பும் இந்தப் புத்தகத்தில் தன் இதயத்தையே கொட்டி எழுதி யனுப்ப வேண்டும் என்று எண்ணித்தான் பேனா முனையைச் சரோஜா பதித்திருக்க வேண்டும். பின்பு உள்ளத்து உணர்ச்சிகள் எல்லாம் ஒன்று திரண்ட பின் இரண்டு கண்ணீர்த் துளிகளாக மட்டும் உதிர்ந்திருக்க வேண்டும்."

இந்த நினைவுச் சுழிப்பிலே சிக்கித் தவித்த சுந்தரம் அப்படியே மேஜையின் மீது தலையைச் சாய்த்து விட்டான். அந்தப் புத்தகம் அவன் காதோடு காதாக ஏதோ ரகசியம் சொல்வதைப் போல ஒட்டிக் கொண்டிருந்தது.

2

ஊருக்கு வெளியே இரண்டு மைல்களுக்கு அப்பால் புதிதாக நிர்மாணிக்கப் பட்டிருந்த தில்லை நகருக்குப் பார்வதியம்மாள் தன் மகன் சுந்தரத்தை அழைத்துக் கொண்டு குடி வந்தாள்.

இளம் வயதிலே விதவையான பார்வதியம்மாள், எப்படியாவது சுந்தரத்தைப் படிக்க வைத்து நல்ல பிள்ளையாக நாலு பேருக்கு முன்னால் ஆளாக்கி விடவேண்டும் என்று விரும்பினாள். இந்த மகத்தான பொறுப்பில், எப்பொழுதும் தனிமையையே விரும்பும் பார்வதி யம்மாள் யாருடைய உதவியையும் எதிர்பார்க்கவில்லை.

பார்வதியம்மாளுக்குப் பேச்சென்றாலே பிடிக்காத விஷயம். வார்த்தைகளை அளந்து உபயோகிப்பாள். ஆனால் சுந்தரமோ தாயினின்றும் வேறுபட்டு விளங்கினான். யாரிடமும் கலகலவென்று இன்முகத்துடன் வேடிக்கையாகப் பேசுவான். அவன் பேசுவதைப் பார்த்தால் அவன் வாயைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கும். பெயருக்கேற்றபடி சுந்தரபுருஷனாகவும் சொக்கும் பேச்சுத் திறமை உடையவனாகவும் இருந்த சுந்தரத்திடம் அனைவரும் பிரியங்காட்டி நேசித்தனர் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது!

பல இளம் பெண்கள் சுந்தரத்தின் தங்கமான குணத்தையும், கெட்டிக்காரத் தனத்தையும் பற்றிப் புகழ்ந்து கூறியபொழுது பார்வதி யம்மாளின் தாயுள்ளம் கொஞ்சம் பெருமிதத்தால் விம்மிய தென்றாலும் அதே சமயத்தில் இனந் தெரியாத பீதியினால் உள்ளூறப் பயந்தும் நடுங்கியது.

"பாவம்! உலகம் தெரியாத பிள்ளையாக இருக்கிறானே! உடல் வளர்ந்தாலும் உள்ளம் இன்னுமா பச்சைப் பிள்ளை மாதிரி இருக்கும்! இது எவ்வளவு பெரிய விபரீதத்தில் கொண்டு போய் விடுமோ! கடவுளே, நீதான் துணை!" என்று பயப்பட்டாள் பார்வதி யம்மாள். ஒரு தாய்க்கு இருக்கக் கூடிய, இருக்க வேண்டிய உணர்ச்சி தான் என்றாலும், அவள் ஒன்றை மட்டும் மறந்து விட்டாள். சுந்தரமும் ஒரு வளரும் வாலிபன்; அவனுக்கும் ஒரு நெஞ்சு, அதிலே நினைப்பு எல்லாம் உண்டு என்பதுதான் அது! மனத் தத்துவ ரீதியிலே அவள் பயந்தது உண்மை

யின் விளைவாகப் பிறந்ததுதான் என்பதை விளக்கும்படியான சம்பவம் ஒன்று நடந்து விட்டது.

அன்று வெள்ளிக்கிழமை. தில்லை நகருக்குள்ளே 'ஜல் ஜல்' என்ற சதங்கை ஒலியுடன் வில் வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது.

சுந்தரம் கையில் தேங்காய் பழத் தட்டுடன் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தான்.

'காலியா யிருக்கும் கோடி வீட்டுக்கு யாரோ குடி வருகிறார்கள்' என்ற எண்ணத்துடன் தன்னைக் கடந்து சென்ற வில் வண்டியைத் திரும்பிப் பார்த்தான். வண்டியின் பின்னால் தொங்கிக் கொண்டிருந்த திரையை விலக்கிக் கொண்டு ஒரு இளம் பெண் வெளியே பார்த்தாள். அடுத்த வினாடி தன்னை யாரோ ஒரு வாலிபன் கவனிப்பதைக் கண்டவுடன், தன் பார்வை வேறு எங்கோ பதிந்திருந்ததாகக் காட்டிக் கொண்டு, படுதா முழுவதையும் விலக்கினாள் அப் பெண். வண்டியின் சதங்கை யொலி நகருக்குள்ளே முன்னேறிக் கொண்டிருந்தது.

சுந்தரத்தின் மனதில்—குழந்தை யுள்ளத்தின் தெளிவு நிலையில் ஒரு அசைவு, சலனம் ஏற்பட்டதென்பதை அவன் முகம், நடை எல்லாமே நன்றாக எடுத்துக் காட்டின. அவன் இதுவரை எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறான், பேசியிருக்கிறான்—ஏன், புகழ்ந்தும் புகழப்பட்டு மிருக்கிறான். ஆனால் யாரையுமே அவன் ஞாபகத்தில் வைத்துக் கொண்டது கிடையாது. ஆனால் இந்த ஒரு வினாடியில், ஒரே பார்வையில் எத்தனையோ பிறவிகளில் தொடர்ந்து வரும் தொந்தம் என்பார்களே, அதைக் கண்டான் சுந்தரம். அந்தப் பெண் தில்லை நகருக்குக் குடி வந்ததாக எண்ணவில்லை அவன். தன் இதயத்தையே சொந்த வீடாக்கிக் கொண்டாள் என்ற நினைப்புத்தான் அவன் உள்ளத்தில் விஞ்சி இருந்தது.

கோயிலிலே கடவுளை வணங்கும்பொழுது, சுந்தரம் இன்று தனக்காக மட்டுமல்ல, பெற்று வளர்த்த அன்னைக்காக மட்டுமல்ல; யாரோ பெயர் கூடத் தெரியாத ஒரு பெண்ணின் நலனுக்காகவும் மிகவும் உருக்கத்துடன் வேண்டிக் கொண்டான். வீட்டுக்குத் திரும்பியபொழுது வழி நெடுக அவனுடைய சிந்தனை, நினைப்பு, ஏக்கம் எல்லாம் சேர்ந்து கொண்டு, அவனை இன்னும் சிறு பிள்ளையாக்கிக் 'கண்ணாம் பொத்தி' விளையாடின.

ஊருக்கு வெளியே தூங்கிக் கொண்டிருந்த தில்லை நகருக்கு ஜீவ ஒளி பிறந்து விட்டதுபோல் சுந்தரத்திற்குத் தோன்றியது. அதற்குச் சரோஜா தான்—அந்தப் பெண்—காரணம் என்று அவன் அந்தராத்மா கூறியது. தாயின் மூலமாக அவள் பெயரையும், கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும் அறிந்து கொண்டான் அவன். வீட்டுத் தோட்டத்தில் கப்பும் கிளையுமாகப் படர்ந்திருக்கும் ரோஜாச் செடியில் பூத்திருக்கும் மெல்லிய ரோஜாவின் இதழ்களுக்குள் ஊடாடும் குங்கும வர்ணம் எப்பொழுதும் சரோஜாவின் முகப்பொலிவை அவனுக்கு ஞாபக மூட்டிக் கொண்டே இருந்தது. அந்த நினைவு உலகத்திலே தனக்கும் சரோஜாவுக்கும் என்று ஒரு சொர்க்கத்தையே சிருஷ்டி செய்து கொண்டு வாழ்ந்து வந்தான் சுந்தரம்.

இணைந்த இரு உள்ளங்களின் அன்பின் மாற்றை உரைத்துப் பார்க்கும் உரை கல் ஒன்று இந்தக் காதல் உலகத்தில் உண்டென்றால் அது "பிரிவு" என்பதுதான்! அது இப்பொழுது சுந்தரத்தின் வாழ்க்கையைச் சோதிக்க ஆரம்பித்தது. இல்லையென்றால் சரோஜாவின் பெற்றோர்கள் திடீரென்று அந்த வீட்டைக் காலி செய்து விட்டு டில்லிக்குப் புறப்படுவார்களா?

வில் வண்டி மறுபடியும் தில்லை நகரத்தை விட்டுச் சரோஜாவை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. சுந்தரத்திற்கு உலகமே சுருங்கி ஒரு வில் வண்டிக்குள் அடைபட்டுக் கிடப்பதாகத் தோன்றியது.

"நம்மேல் உண்மையான அன்பு இருந்தால் ஒரு வார்த்தை 'போய்விட்டு வருகிறேன்' என்று சொல்லியிருக்க மாட்டாளா! ஏன் கூடாது!..... சே...சே...என்ன இருந்தாலும் அவள் பெண்!"

வண்டி முற்றத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது. முதல் சந்திப்பின்போது பார்த்த அதே காட்சியைத்தான் இன்றும் சுந்தரம் பார்த்தான். ஆனால் அவள் முகத்திலிருந்த அந்தப் பழைய நம்பிக்கையும் பிரகாசமும் எங்கே போய்விட்டன? அதற்குப் பதிலாகக் கண்களின் கடையோரத்தில் இரண்டு கண்ணீர் முத்துக்கள் துளிர்த்திருந்தனவே! அவைகளில் கரைந்திருந்த பொருள்தான் என்ன!

சுந்தரம் பிரமை பிடித்தவனைப் போல நின்று கொண்டிருந்தான். வில் வண்டியின் சதங்கைச் சத்தம் தில்லை நகரைக் கடந்து தாண்டிச் சென்று வெகு நேரமாகி விட்டது.

"ஏண்டா ராஜா! உன் உடம்புக்கு என்ன? எப்பொழுது பார்த்தாலும் சோர்ந்து போய் இருக்கிறாயே!" என்று கேட்டாள் அவன் தாயார்.

சுந்தரம் மௌனமாக இருந்தான்.

"இல்லையென்றால் மனசுக்கு......"

அவ்வளவுதான்; விருட்டென்று உள்ளே போய் விட்டான் சுந்தரம். தாயார் 'மனசு' என்று பேச்சை எடுத்ததும் எங்கே அதற்குள் தான் ஒளித்து வைத்திருக்கும் சரோஜாவை இனம் கண்டு கொண்டு விடுவாளோ என்று அவன் பயந்தானோ என்னவோ!

ஓய்விலாக் காலம் ஓடிக்கொண்டே இருந்தது. அதிலே ஒரு கட்டம். இப்பொழுது பார்வதியம்மாள் இறந்து போய்ப் பல ஆண்டுகள் கழிந்து விட்டன. சுந்தரம் பி. ஏ. பாஸ் செய்துவிட்டு ரேடியோ நிலையத்தில் வேலை பார்த்து வந்தான். தனிமை தான் அவனுக்குத் துணையாக இருந்தது. ஆனால் சிற்சில சமயங்களில் அவன் மனத்தில் கப்பிப் படர்ந்திருந்த தனிமைக்கும் விரக்தி நிலைக்கும் இடையே பல பூகம்பங்கள் தலை தூக்கும். அந்த அதிர்ச்சி அடங்கி மனதில் தெளிவு பிறக்கும் போது இரண்டு கண்ணீர் மல்கிய முகங்கள் அவன் உள்ளத்தில் தோன்றும். ஒன்று சரோஜா



வின் கலங்கிய முகம். மற்றொன்று தாயாரின் சோக வதனம். ஆனால் ஒரு வித்தியாசம். சரோஜாவின் முகம் சோகச் சித்திரமாகத் திகழ்ந்ததே தவிர ஒரு முறையாவது உதட்டை அசைத்தது கிடையாது. தாயின் முகமோ ஏதோ தன் கோரிக்கையை முணு முணுத்துக் கொண்டிருப்பதைப் போன்று தோன்றியது.

சுந்தரத்துக்குத் தாயாரின் கடைசி கோரிக்கை ஞாபகத்துக்கு வந்தது.

"சுந்தரம்! நான் மகா பாக்கியசாலி. உன்னைப் பெற்று வளர்க்கவே நான் தவம் செய்திருக்க வேண்டும். என் கடைசி ஆசை ஒன்று இருக்கிறது. உன் அப்பா இறந்த பிறகு ஏதோ பண மமதையில் எங்கண்ணு நம்மைப் புறக்கணித்து விட்டான். பாவம், இப்பொழுது மனைவியையும் பறி கொடுத்துவிட்டுக் கஷ்ட தசையில் இருக்கிறான். போதாக் குறைக்கு வயதுப் பெண் சந்திராவும் அவன் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறாள். எப்படியும் நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். இதுவே என் பிரார்த்தனை. உன்னை விட்டால் வேறு யாரிருக்கிறார்கள்! நீதான் அவளுக்குச் சகலமும்!"

சுந்தரம் பலவாறாகக் குழம்பினான். கடைசியில் தாயாரின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவிட வேண்டும் என்ற முடிவுக்கே வந்துவிட்டான். அதன் பலனாகச் சந்திரா சுந்தரத்தின் மனைவியாக வந்தாள். மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு வாழ்க்கையைப் பார்த்துச் சிரித்தான் சுந்தரம்.

நாளும் பொழுதும் கழிந்து கொண்டே இருந்தன. சந்திராவைப் பார்க்கும் பொழுதெல்லாம் சரோஜாவின் ஞாபகம் வந்து அவனை நிலைகலங்க அடித்தது. எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு என்றோ ஒரு நாள் அவன் இதயத்தில் அணு அணுவாகச் சேர்ந்து துளிர்த்த பாசத் திவலை, இன்று—தான் வேறொரு பெண்ணை மணந்த பிறகு, நுங்கும் நுரையுமாகப் பெருக்கெடுத்தோடும் பிரவாகமாக மாறும் என்று அவனுக்குத் தெரியாமலா இருக்கும்! "சரோஜா......சரோஜா......சரோஜா..." என்று அலைகடல் ஆர்ப்பரிப்பதைப் போன்று ஒரு ஓயாத இரைச்சல் அவன் உள்ளத்தில் எழுந்து கொண்டே இருந்தது.

இப்படி இருக்கையில் ஒருநாள் சுந்தரத்துக்கு ஆபீஸ் விலாசத்துக்கு ஒரு பார்ஸல் டில்லியிலிருந்து வந்தது. உறையின்மேல் "கல்யாணப் பரிசு" என்று எழுதியிருந்தது. அவசர அவசரமாக உடைத்துப் பார்த்தான். இரண்டு ஆங்கில நாவல்கள். ஒன்று அவனுக்கு; மற்றொன்று அவன் மனைவிக்கு. மனைவிக்கு உள்ள புத்தகத்தின் உட்பக்கத்தில், "முன்பின் அறிமுக மில்லா விட்டாலும் என் இருதயத்தோடு என்றோ ஒன்றி விட்ட சகோதரிக்கு" என்று எழுதிக் கீழே 'சரோஜி' என்று கையெழுத்தும் இடப்பட்டிருந்தது. சட்டென்று தனக்குள்ள புத்தகத்தைப் புரட்டினான். ஆனால் அதன் உட்பக்கம் தோற்றத்துக்குக் காலியாகவே இருந்தது. சற்றுக் கூர்ந்து நோக்கினான் சுந்தரம். ஏனோ அவன் முகத்தில் சோகம் அலை பாய்ந்து சென்றது. பார்த்துக் கொண்டே இருந்தான். அது அவனுக்கு என்ன விஷயத்தைக் கண் திறந்து காட்டியதோ, தெரியவில்லை!

சுந்தரத்தின் மன நிலையில் ஏற்பட்ட திடீர் மாறுதலைப் பார்த்தவுடன் சந்திராவுக்கு ஏற்பட்ட ஆச்சரியம் கொஞ்சநஞ்சமல்ல. 'இவ்வளவுநாளு மில்லாமல் இப்போது நம் மேல் ஆசை ஏற்படுவதற்குக் காரணம்!" என்று நினைத்தாள் சந்திரா.

சுந்தரமே ஒரு நாள் சொன்னான்: "என் இஷ்ட தெய்வத்தைக் குளிர்விக்க வேண்டுமானால் நீ சந்தோஷப்பட வேண்டும். உன் மகிழ்ச்சியிலேதான் நான் அந்த ஆனந்தத்தை அடைய முடியும்!"

சந்திரா ஒன்றும் புரியாமல் விழித்தாள். பாவம்! அவளுக்கு என்ன தெரியும்!

* * *

கண்ணீர்ப் பெருக்கினால் நனைந்து போன சுந்தரம் சிந்தனை உலகிலிருந்து விடுபட்டு எழுந்தான். மேஜையின் மேலிருந்த சரோஜாவின் அன்பளிப்புப் புத்தகமும் நனைந்து போயிருந்தது. கூஜாவி



விருந்த தண்ணீரால் முகத்தை நன்றாக அலம்பிவிட்டுப் படுக்கையில் விழுந்தான். சந்திரா—சரோஜா என்ற நினைப்பிலேயே சுழன்ற அவன் மனம் ஒருப்பட மறுத்தது. மெல்ல ரேடியோவைத் திருப்பினான். அதிலே ஒரு பெண்குரல்...

"கூடிக் குலாவி மெத்த
குகனோடு வாழ்ந்த தெல்லாம்
வேடிக்கையல்ல வடி — கிளியே!
வெகுநாளைத் தொந்தமடி!"

சட்டென்று ரேடியோவை மூடினான். பாட்டு நின்றது. பாவம்! அந்த நாலு வரிக் கண்ணியிலே அவன் மனம் சிக்கிக் கொண்டு தவித்ததே, அதை எப்படித்தான் விவரிக்க முடியும்!

3

"சந்திரா! இந்தப் பேராபத்திலிருந்து நீ பிழைத்து எழுந்ததையும், எனக்கு உத்தியோக உயர்வு கிடைத்ததையும்விட, நீ எனக்கு ஒரு பெண் குழந்தையைக் கொடுத்திருப்பதை எண்ணும்பொழுதுதான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்" என்றான் சுந்தரம், குழந்தையை அணைத்துக்கொண்டிருந்த சந்திராவை நோக்கி.

"ஏன், பெண்ணென்றால் உங்களுக்கு அவ்வளவு இளப்பமா!" என்றாள் சந்திரா.

"அடி பைத்தியமே! எத்தனையோ ஆண்டுகளாக என் இதயத்தில் வளர்ந்துகொண்டிருந்த அன்பிற்கு இப்பொழுது நீ உருவமும் கொடுத்து உயிரும் கொடுத்திருக்கிறாய்!"—சுந்தரத்தின் பேச்சில் உணர்ச்சி வேகம் பொங்கி வழிந்தது.

"ஆமாம், இப்பொழுது ஏன் சொல்ல மாட்டீர்கள்! என்னைத் தனியாக ஆஸ்பத்திரியில் தள்ளிவிட்டு நீங்கள் டில்லிக்குப் போய் விட்டீர்கள். அந்த டாக்டர் அம்மாள் தெய்வம்போல் வந்து என்னைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துச் சாகத் தெரிந்த எனக்குத் தன் இரத்தத்தையும் கொடுத்துக் காப்பாற்றி விராவிட்டால், நீங்கள் இப்பொழுது உங்கள் சந்திராவையும் அருமை மகளையும் பார்க்க முடியுமா!"



"சார்! அது போனவாரத்துப் பத்திரிகையல்லவா? அதைப் படிக்கிறீர்களே?"

"அடாடா! அப்படியா? நான் போன மாசத்துப் பத்திரிகை என்றல்லவா நினைத்துப் படிக்கிறேன்!"

சந்திராவின் கண்களில் நீர் ததும்பியது.

"அப்படியா! எல்லாம் கடவுள் கிருபை அந்த டாக்டரம்மாள் உருவில் வந்து உன்னைக் காப்பாற்றியிருக்கிறது. அவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்!......"

"அப்படி வாருங்கள், வழிக்கு! நம்முடைய குழந்தைக்கு அந்தச் சேவகியின் பெயரையே வைத்து விட்டால் என்ன!"

சந்திராவின் குரலிலே தொனித்த ஆர்வத்தைக் கண்ட சுந்தரம் அப்படியே நடுநடுங்கி விட்டான்.

"சந்திரா! நான் எதற்காக ஒரு பெண் குழந்தைக்காகத் தவம் இருந்தேனோ, அந்த ஆசையைச் சிதற அடித்து விடாதே! என் இஷ்ட தெய்வத்தின் பெயரைத்தான் நம் கண்மணிக்கு வைக்க வேண்டும்......." என்றான்.

"என்ன நன்றிகெட்ட தனம் உங்களுக்கு! தாயினும் மேலாக எனக்குப் பணி புரிந்தாள். அவள் சேவையைக் கேவலம் பணத்தால் மதிப்பிடுவது தவறு என்று எண்ணித்தானோ என்னவோ, ஒரு காசுகூட வாங்க மறுத்து விட்டாள் போலிருக்கிறது. இளமையிலே தன் வாழ்வைச் சேவையில் அர்ப்பணித்த அத்தெய்வத்துக்கு இந்த ஒரு வகையில்தான் என் நன்றியைத் தெரிவிக்க முடியும்" என்று படபட வெனப் பொரிந்தவள் "எங்கே என்னை நன்றாக உற்றுப் பாருங்கள்! என் உடலில் ஓடிக்கொண்டிருப்பது அவளுடைய இரத்தந்தான்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறிவிட்டு, "என் கண்ணே! உன் பெயர் சரோஜா தானே! நான் அப்படித்தான் உன்னைக் கூப்பிடுவேன்" என்று கூறிக் கொண்டே குழந்தையின் கன்னத்தில் பலமுறை முத்தமிட்டாள் சந்திரா. அந்த உத்வேகத்திலும் உணர்ச்சிப் பெருக்கிலும் ஏன் கணவன் உள்ளே ஓடி விட்டான் என்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை.

அவசர அவசரமாக உடுப்பைப் போட்டுக் கொண்டு வெளியே வந்தான் சுந்தரம்.

"சந்திரா! சீக்கிரம் 'டிரஸ்' செய்து கொள். டாக்ஸிக்கு ஆள் அனுப்புகிறேன். உடனே ஆஸ்பத்திரிக்குப் போய் அந்தப் பெண் தெய்வத்திடம் முதலில் என் நன்றியைத் தெரிவித்து விட்டு வர வேண்டும். அதோடு இந்தச் சந்தோஷ சமாசாரத்தையும் தெரிவித்துவிட வேண்டாமா!" என்று உருக்கமாகக் கூறினான் சுந்தரம்.

டாக்ஸி பிரசவ ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. சுந்தரத்தின் மனக் கண் முன்பு என்னவெல்லாமோ காட்சிகள் தோன்றிக் கொண்டிருந்தன.

"நர்ஸ், டில்லியிலிருந்து அன்று வந்த டாக்டர் அம்மாளைப் பார்ப்பதற்கு நானும் என் கணவரும் வந்திருக்கிறோம்..." என்றாள் சந்திரா ஆவலோடு.

"அடடா! அவர்கள் நேற்றே வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு டில்லிக்குப் போய் விட்டார்களே! ஏதோ அவர்கள் ஸேவாஸதனத்திலிருந்து முக்கிய அழைப்பு வந்ததாம்" என்றாள் நர்ஸ்.

சந்திராவின் முகத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தையும் தவிப்பையும் வெளியிட வார்த்தைகளே இல்லை. "அவ்வளவுதான் உங்களுக்குக் கொடுத்து வைத்தது!" என்று முணுமுணுத்துக்கொண்டே கணவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் கண்களில் துளித்திருந்த இரண்டு கண்ணீர்த் துளிகள் ரசக் குண்டைப் போல் பளபளப்புடன் பரிதாபமாக ஆடிக்கொண்டிருந்தன. அந்தக் கண்ணீர்த் திவலைகளை வியப்புடன் உற்றுப் பார்த்தாள் சந்திரா. அவை அவளுக்கு என்ன ரகசியத்தைச் சொல்லினவோ!


"இது என் தீர்மானம்..
...நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப்
உபயோகித்து அதிக அழகைப்
பெறலாம்!"
என்கிறார்
பி. சுலோசனா
பி. சுலோசனா கூறுவதாவது: "என் வதனத்திற்கு அற்புத மாறுதலை அளித்திருக்கிறது லக்ஸ் டாய்லட் சோப்பின் மிருதுவான நுரை. வழக்கமாக உபயோகிப்பதால் இந்த சுத்தமான, வெண்மையான சோப் என் சருமத்தை பட்டுப்போல் வழவழப்பாக இருக்கச் செய்கிறது."
LUX
TOILET SOAP
லக்ஸ் டாய்லட்
சோப்
சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்
LTS. 379-X30 TM



'பகீரதன்'

5

சிழுவிக்கு மேலே கதையைச் சொல்ல விருப்ப மில்லை என்பதை அவனுடைய முகம் நன்கு எடுத்துக் காட்டியது. இருந்தாலும் அவனையும் மீறிய ஏதோ ஒரு சக்தி அவனை மேலே கதையைச் சொல்லத் தூண்டி யிருக்க வேண்டும். அவன் உற்சாகமாகப் பேசத் தொடங்கினான்.

"மோகினிக்கு இப்பொழுது யாரைப் பற்றியும் கவலையில்லை. அவள் தன் காதலனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். அவள் இருதயம் பரிசுத்தமாக இருந்தது" என்றான் சிழுவி.

"அவள் இருதயம் எப்படி இருந்தால் என்ன! விதி இருக்கிறதே! அது அவளைப் பற்றி என்ன நினைத்திருக்கிறதோ!" என்றேன்.

"ஒரு காலத்தில் மக்களுக்கு இருதயம் ஒன்றிருந்தது. அதனால் அவர்கள் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்தார்கள். தவறுகளையும் செய்து விட்டார்கள். ஆனால் அவர்கள் ஒரு போதும் விதியைப்பற்றி நினைத்ததில்லை."

"ஏன், இந்தக் காலத்து மக்களுக்கு மட்டும் இருதயம் கிடையாதா!" என்றேன்.

"இந்தக் காலத்தில் மக்களுக்கு இருதயம் இருக்கிறதோ இல்லையோ. அந்தக் காலத்து மனிதர்களைப்போல வீரச் செயல்கள், தியாகங்கள், ஒரு காரியத்துக்காக எதையும் திறமையுடன் செய்யும் சாகஸங்கள் எதுவுமே கிடையாது! ஏன் அப்படி இருந்தால் நீதான் சொல்லேன் கேட்கலாம். உன் போன்ற வாலிபர்களுக்கு என்ன தெரியும்! நீங்கள் எல்லாம் சோம்பேறிகள். கடமை உணர்ச்சியே இல்லாதவர்கள். உங்களுக்கு வாழ்வது எப்படி என்று கூடத் தெரியவில்லை. எடுத்ததற்கெல்லாம் விதி விதி என்று சொல்லுகிறீர்கள். விதிக்கும் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்! ஒவ்வொருவனும் தன்னுடைய விதியைத் தானே தீர்மானிக்கிறான். நானும் எத்தனையோ மனிதர்களைப் பார்க்கிறேன். பரந்த நோக்குடன் பாடுபடும் பண்பு நிறைந்த மனிதர்களைத்தான் காண முடியவில்லை. அவர்கள் எல்லாம் இனி இந்த நாட்டில் தோன்றுவார்களா!" என்று கேட்டான்.

அவன் கேள்விக்கு அவனே பதில் தேட முயலுவதுபோல முல்லைவனத்துக் காட்டைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

மேலே மோகினியின் கதையைக் கேட்கும் ஆவலில் நான் மௌனமாகக் காத்திருந்தேன். ஏதாவது சொன்னால் வேறு விஷயத்துக்குப் போய்விடுவார்களோ என்று பயம்.

கடைசியில் அவன் கதையைத் தொடங்கினான்.

மோகினியின் தாயாருக்குச் சர்தாரம் இறந்து விட்ட செய்தி கேட்டவுடன் அவள் இருதயம் நின்றுவிடும் போலாகி விட்டது. அவள் தன் கணவரைக் கூப்பிட்டாள். அவரைப் பரிதாபமாகப் பார்த்தாள்; கெஞ்சினாள். "அந்தச் செய்தி உண்மைதானா!" என்று கேட்டாள்.

அவள் முகம் வெள்ளைத் தாமரைபோல் வெளுத்துப் போய்விட்டது. புருவத்தின் கீழ், அர்த்தம் புரியாத, ஆழம் அறியக் கூடாத அவள் கண்கள் சற்று ஆச்சரியத்துடன் விரித்து நோக்கின. ஆர்வம் இல்லாத அர்த்தம் புரியாத குரலில் "நீங்கள் என்னிடம் பொய் சொல்லமாட்டீர்கள் அல்லவா!" என்று மீண்டும் கேட்டாள்.

அந்தச் செய்தியைப் பொய் என்று அவள் கணவரால் நிரூபிக்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும். அவள் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் எண்ணக் கோட்டைகள் எல்லாம் தகர்ந்து போய் விட்டதே என்ற ஆத்திரத்தில் தான் அவள் அவ்வாறு கேட்டாள்.

மோகினியின் தகப்பனார் மிகுந்த கவலையுடன் தன் மனைவியைப் பார்த்தார். அவளை அப்படியே கட்டிலில் படுக்க வைத்தார். "நீ ஒன்றும் வீணாக அலட்டிக் கொள்ளாதே. உயிர், மரண விஷயங்கள் நம்முடைய கையிலா இருக்கிறது!" என்றார்.

அவர்கள் இருந்த அறையில் பெரிய குத்து விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. குத்து

விளக்கின் திரி அசைந்து அசைந்து எரிவது, துடி துடித்து உயிரை விடுவது போலிருந்தது.

"மோகினி! மோகினி!" என்று ஆவலுடன் கூப்பிட்டான். "ஐயோ! பாவம்!" என்று அவளே பரிதாபப் பட்டான்.

இதற்குள் மோகினி தன் தாயாரின் அறைக்கு வந்து விட்டாள். அவளும் தன் தாயாரின் அருகில் உட்கார்ந்து கொண்டாள். இப்பொழுது மோகினியின் தாயார் ஒருதரம் பலமாக இருமி விட்டுக்கொண்டு பேசினுள்.

"மோகினி! இந்தத் துக்கத்தை என்னால் தாங்க முடியவில்லை. உன் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. உன்னுடைய ஏக்கம் நிறைந்த முகத்தைப் பார்ப்பதை விட இறந்துபோவது மேலானது என்று நினைக்கிறேன். உன் உள்ளத்து வேதனைகளை உன் முகத்திலே பார்க்கிறேன். உன் கண்களின் பிரகாசத்தில் அது நன்ருகத் தெரிகிறது. இனியும் உன்னை இந்த மாதிரி நிலையில் என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நான் உன்னை விட்டே, இந்த உலகத்தை விட்டே போய் விடுகிறேன்" என்று அலறினுள்.

மோகினிக்கு என்ன பதில் சொல்லுவது என்றே தெரியவில்லை. அப்படியே தன் தாயைத் தழுவிக் கொண்டாள். "அம்மா! நீங்கள் பேசுவதெல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது" என்ருள். கண்ணீர் விட்டாள்; கதறினுள்.

குத்து விளக்கின் பொன் நிறமான தீபம் சுடுங்கியது; சற்று உள்ளடங்கியது; நீல நிறமாக மாறியது. பிறகு அணைந்தே போயிற்று. அந்த அறையில் இருள் சூழ்ந்து கொண்டது. மோகினியின் தாயார முகத்தைப் பார்க்க முடியவில்லை; அவள் கண்களைப் பார்க்க முடியவில்லை. மோகினியை அணைத்துப் பிடித்திருந்த அவள் அன்புக் கைகள் தளர்ந்து விட்டன. அவள் கருணைக் கண்கள் மூடிக் கொண்டன. அவள் இருதயம் நின்று விட்டது; அவள் எண்ணங்கள் ஒடுங்கி விட்டன. அவள் வாழ்க்கை முடிந்து விட்டது!

மோகினி "அம்மா!" என்று அலறினுள். பயங்கரமாகக் கூச்சல் போட்டாள்.

"நான்தான் என் தாயைக் கொன்றுவிட்டேன். நான்தான் என் அம்மாவைக் கொன்றுவிட்டேன். என்னுடைய காதல் நிறைவேருததைக் கண்டு



அவள் இருதயம் நொறுங்கி விட்டது. என்னை விட்டே போய் விட்டார்கள்" என்று கதறினாள்.

எல்லாம் ஒரு சில மணி நேரத்துக்குள்ளாகவே நடந்து விட்டது. மோகினியைச் சமாதானப் படுத்துவதற்குள் பெரிய தாயாருக்குப் போதும் போதும் என்றாகி விட்டது! மோகினியின் தகப்பனார் கடைப் பிணமாகி விட்டார்.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்று எட்டு மாதங்கள் ஓடி மறைந்துவிட்டன. மோகினி தன் அறையில் உட்கார்ந்த வண்ணம் அடுத்த வீட்டு ஜன்னலை உற்றுப் பார்த்துக் கொண்டே இருப்பாள். மௌனமாக எழுந்திருந்து உலாவுவாள். தாமரைக் குளத்துப் பக்கம் போவாள். இஷ்டப்பட்டால் சாப்பிடுவாள், பேசுவாள், வீணை மீட்டிப் பாடுவாள், சிரிப்பாள்.

அன்று தாமரைக் குளத்துச் சலவைக்கல் மேடை மீது உட்கார்ந்திருந்தாள். தாமரைக் குளத்தில் இருக்கும் தாமரை மொக்குகள் எல்லாம், தூக்கம் தாங்காது தங்கள் இதழ்களை மூடிக் கொண்டு அவளுக்கு வந்தனம் செய்வது போலக் காட்சி அளித்தன. மோகினி நீர் நிறைந்த கண்களோடு அந்தப் பூக்களைப் பற்றி நினைத்தாள். அவள் வெளுத்த முகமும், துடிக்கும் இதழ்களும், நீர் நிறைந்த கண்களும் அவள் உள்ளத்தில் குமுறும் துக்கத்தை எடுத்துக் காட்டின.

சட்டென்று அவள் கவனம் அங்கு பறந்து வந்த மணிப் புறாவின்மேல் சென்றது. கண் கொட்டாமல் அதையே பார்த்தாள். அது அவள் தலைக்கு மேலே வளைந்து வளைந்து பறந்து கொண்டிருந்தது. அவள் புருவங்கள் நடுங்கின. சிறிது நேரம் தாமரைக் குளத்துக்கு மேலே பறந்து அது வட்டமிட்டது. பிறகு மறைந்து போய் விட்டது. மோகினி அதையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இதயம் ஒருதரம் உயர்ந்து தாழ்ந்தது. கண்ணீர் முத்துக்கள் அவள் கன்னங்களில் ஒன்றன்பின் ஒன்றாக உருண்டு ஓடின.

மறுநாள் மோகினி தன் அறையில் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள். அவள் படுக்கை ஓரமாக யாரோ நடந்து வந்தது போல் உணர்ந்தாள். சுந்தரத்தின் உருவம் போலவே தோன்றியது. அதே அழகிய புருவங்கள், கம்பீரமான பார்வை, புன்னகை ததும்பும் இதழ்கள் இவைகள் எல்லாம் அந்த உருவம் சுந்தரம்தான் என்பதை வற்புறுத்தின. அந்த மாயத் தோற்றத்தில் மனத்தைப் பறி கொடுத்தவளாய் உட்கார்ந்திருந்தாள் மோகினி. அங்கு அவளைத் தேடி வந்த தன் பெரிய தாயாரைக் கூட அவள் கவனிக்கவில்லை.

"மோகினி! ஏன் இப்படியே பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்திருக்கிறாய். இன்னும் சாப்பிடக்கூட இல்லையே" என்று பரிவோடு கேட்டாள்.

"அது இருக்கட்டும். நீங்கள் சுந்தரத்தைப் பார்த்தீர்களா!" என்று கேட்டாள். பெரிய தாயாரைப் பார்த்துக் கலகல வென்று சிரித்தாள்.

பெரிய தாயாருக்கு உடல் எல்லாம் நடுங்கியது. மோகினியின் மூளை குழம்பிப் போய் விட்டதாக உணர்ந்தாள். மேலே பேச்சுக் கொடுக்க விருப்ப மில்லாமல் அங்கிருந்து போய்விட்டாள்.

சுந்தரத்தின் மாயத் தோற்றத்தைப் பார்த்தது முதல் மோகினியின் வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டது.



மீண்டும் அந்தத் தோற்றத்தைக் காண முடியுமா! என்று ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தாள். அது காரணமாக அவள் முன் போல் அழுது புலம்புவதில்லை; பெருமூச்சு விடுவதில்லை. தன் உள்ளத்தில் பொங்கிக் குமுறும் துக்கத்தை வெளியில் காட்டிக் கொள்வதில்லை.

அவள் தகப்பனார் அவள் எல்லா துக்கத்தையும் மறந்து விட்டாள்

என்றே எண்ணினார். அவர் ஒரு அப்பாவி மனிதர். பெரிய தாயாருக்குமட்டும் தெரியும் மோகினியின் மன நிலை. அவள் மட்டும் மோகினியின் விஷயத்தில் மிகுந்த கவலையோடு இருந்தாள்.

மோகினி எவ்வளவுதான் தன்னை அலங்காரம் செய்து கொண்டாலும் அவளுடைய உள்ள உணர்ச்சியை மறைக்க முடியவில்லை. அவள் கண்களில் ஆழ்ந்த துயரத்தின் சாயை படிந்திருந்தது. தளதளப்பான அவள் கன்னங்களின் நிறம் வாடி மங்கி விட்டது. அதனால் அவள் அழகு குலைந்து காணப்பட்டாள். அவள் பேசும்போது அவளுடைய குரலில் முன்போல் காம்பீர்யம் இருப்பதில்லை; இனிமை இருப்பதில்லை. அதற்குப் பதில் காதல் உள்ளத்தின் நிராத ஏக்கம் காணப்பட்டது. அவள் உள்ளத்தில் குடி கொண்டிருந்த ஆழங்காண முடியாத துயரம் அவள் உடலையே மெதுவாகத் தின்று கொண்டிருந்தது.

அவள் தகப்பனார் அவள் துன்பத்தைத் துடைக்க முயன்றார். அவளிடம் மிகுந்த அன்புடன் முன் எப்பொழுதையும் விடப் பாசத்துடன் பழகினார். நாளடைவில் அவள் துக்கத்தை மறந்து முன்போல் சந்தோஷமாக இருப்பாள் என்று எண்ணினார். நாட்கள் மாதங்கள் என்று கழிந்து கொண்டுதான் இருந்தன. ஆனால் மோகினியின் துக்கம் குறையவில்லை. அவளுக்குச் சுந்தரத்தின் நினைவு முன் எப்பொழுதையும் விட நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

பெரிய தாயாரிடம் சுந்தரத்தைப் பற்றி இப்பொழுதுவாய்விட்டே பேசலானாள். "பெரியம்மா! சுந்தரம் உண்மையில் இறந்து விட்டார் என்று நினைக்கிறீர்கள்! எனக்கு என்னவோ அவர் இறக்கவில்லை. அவர் என்றாவது ஒரு நாள் வருவார் என்றே தோன்றுகிறது" என்றாள்.

பெரிய தாயாருக்கு என்ன பதில் சொல்லுவது என்றே தெரியவில்லை. எப்படிப் பேசினாலும் அவள் கடைசியில் சுந்தரத்தை மறக்கவில்லை என்பதை மட்டும் நன்றாக உணர்ந்து கொண்டாள். "ஆமாம்! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. அவன் ஒரு நாள் வருவான்" என்று அவளுக்கு ஆறுதலாகச் சொல்லி வைத்தாள்.

இதைக் கேட்டதும் மோகினியின் முகம் மலர்ந்தது. இது வரையில் வெளுப்பாக வாடி இருந்த அவள் முகம் பளிச்சென்று சிவந்தது.

வாழ்வின் இன்பங்கள் யாவும் அவளைச் சூழ்ந்திருந்தன. இருந்தும் அவள் திருப்தி இல்லாமலே இருந்தாள். அவள் எதையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வீடு வெறுத்துவிட்டது; வீட்டின் சூழ்நிலை அதில் இருக்கும் பொருள்கள் எல்லாம் வெறுத்துவிட்டன.

அடிக்கடி தாமரைக் குளத்துப் பக்கமே போக ஆரம்பித்தாள். தாமரை மலர்களை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டே இருப்பாள். அருகில் இருக்கும் பெரிய கிணற்றைப் பார்ப்பாள். அதில் ஒரு நாள் விழுந்து உயிரை விடப்போன அபலைப் பெண்ணை நினைப்பாள். தன்னையும் அவளையும் ஒப்பிட்டுப் பார்ப்பாள். லேசாகச் சிரிப்பாள். பிறகு அங்கிருந்து நேராகச் சலவைக் கல் மேடைக்கு வருவாள். மேடைமீது அமர்ந்து சுந்தரத்தைப் பற்றி நினைத்துக் கொள்வாள். அப்படி நினைக்கும்பொழுது சில சமயம் கண்ணீர் விடுவாள்; சில சமயம் கல கல வென்று சிரிப்பாள்.

இதை யெல்லாம் அவள் தகப்பனார் கவனித்து வரலானார். அவர் பெற்ற உள்ளம் வேதனைப் பட்டது; வெந்து கருகியது. மோகினியின் மனத்தை மாற்றுவதற்கு ஒன்றுமே மார்க்கம் கிடையாதா என்று ஏங்கினார். எப்படியாவது அவள் மகிழ்ச்சியோடு இருந்தால் போதும் என்பதற்காகத் தாமரைக் குளத்து ஓரமாக அற்புதமான குடில் ஒன்றை அமைத்தார். அதைச் சுற்றிலும் மோகினிக்குப் பிடித்தமான மலர்ச் செடிகளையும் முல்லைக் கொடிகளையும் வளர்த்தார். மோகினியுடன் சேர்ந்து தானும் அந்தக் குடிலில் வசித்து வரலானார். இவர்களுக்கு உதவியாகப் பெரிய தாயாரும் அவர்களுடன் இருந்து வந்தாள்.

மோகினி இப்பொழுதெல்லாம் வீணையும் கையுமாக இருந்தாள். தனக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் தானே கவனித்துக் கொண்டாள். அவள் தாமரைக் குளத்துச் சலவைக் கல் மேடை மீது உட்கார்ந்து வீணை வாசிப்பாள். வீணையின் சோக கீதத்துடன் பறவைகளின் கல கலத் தொனியும் கலந்து கேட்கும். பறவைகளின் இன்னிசையின் ஆரவாரத்தை மோகினியால் கேட்க முடியவில்லை. அந்த அற்புதமான இன்னிசை மோகினிக்கு மேலும் வேதனையைத்தான் கொடுத்தது. சுந்தரத்தை அவளால் மறக்க முடியாமல் செய்து விட்டது. பறவைகள் "சுந்தரம்! சுந்தரம்!" என்று கூவுவது போல் உணர்ந்தாள். அவளும் அந்தப் பறவைகளுடன் சேர்ந்து "சுந்தரம். சுந்தரம்!" என்று சொல்லி மகிழ்வாள்.

வீணையுடன் சேர்ந்து பாடும் போது அவள் முகம் சிறிது உற்சாகமாக இருக்கும்; கன்னங்கள் பூரிக்கும்; கண்கள் மினு மினுக்கும். பாட்டு முடிந்து விட்டாலோ அவள் வானவெளியைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்து விடுவாள்.

ஒரு நாள் மாலை. பெரிய தாயாருடன் சலவைக்கல் மேடைமீது உட்கார்ந்திருந்தாள். இளங்காற்று லேசாக வீசியது. வானத்தில் ஒரு வெள்ளைப் புறா அவளை நோக்கி வேகமாகப் பறந்து வந்து வட்டமிட்டுச் சென்றது.

"பெரியம்மா! அந்த வெள்ளைப் புறாவைப் பார்த்தீர்களா!" என்றாள் மோகினி.

"ஆமாம், ஒரு வெள்ளைப் புறா பறந்து வந்தது. உன் தலைக்கு மேலே ஒருமுறை வட்ட மிட்டது!" என்றாள் பெரிய தாயார்.

"அந்தப் புறாவைப் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்கு என்னவோ சுந்தரத்தின் நினைவு வந்து விடுகிறது. நான் முன்பெல்லாம் அவருக்காகக் காத்திருக்கும் போது இப்படித்தான் அந்த வெள்ளைப் புறா பறந்து வரும் அடுத்த கணத்தில் சுந்தரமும் வந்து விடுவார்" என்றாள்.

பெரிய தாயார் ஒரு மாதிரியாக மோகினியின் முகத்தைப் பார்த்தாள்.

"அப்படியானால் உன்னைத் தேடிச் சுந்தரம் வருவான் என்று சொல்லுகிறாயாக்கும்."

"உண்மைதான். சுந்தரம் என்னைப் பார்ப்பதற்காக வருகிறார். அதை முன் கூட்டியே எடுத்துச் சொல்லுவதற்குத்தான் இந்த வெள்ளைப் புறா வந்துவிட்டுப் போகிறது" என்றாள்.

பெரிய தாயார் திகைப்புடன் மோகினியைப் பார்த்தாள். மாலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் அந்த இளம் பெண்ணின் இளைத்த முகத்தில் பட்டு ஜ்வலித்தது. அவள் உறுதியான பார்வையில் பெரிய தாயார் நிலைகொள்ளாமல் தவித்தாள்.

"கடவுளே!" என்று கத்தினாள். திடுதிடென்று மோகினியின் தகப்பனாரிடம் ஓடினாள். விஷயத்தை எடுத்துச் சொன்னாள். மோகினிக்குப் பைத்தியமே பிடித்து விட்டது என்று அலறினாள். முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

மோகினியின் தகப்பனாருக்கு ஒரு கணம் யாருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று தெரியாமல் திகைத்து விட்டார். அடுத்த கணம்

பெரிய தாயாரை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று யோசித்தார். "மோகினிக்கு ஒன்றும் பைத்தியமில்லை. நீங்கள் பேசாமல் செல்லுங்கள்" என்று சொல்லி அவளை அனுப்பி வைத்தார்.

இருந்தாலும் அவருக்கு மனத்துக்குள் பயமாகவே இருந்தது. மோகினியை அடிக்கடி கவனித்து வரலானார். அவள் பாடும்போது பார்த்தார்; அவள் தூங்கும்போது கவனித்தார்; அவள் பேசும்போது கூடவே பேச்சுக் கொடுத்தார்.

அவளிடம் பைத்தியத்துக்கு வேண்டிய அறிகுறிகள் ஒன்றுமே இல்லை. ஆனால் "சுந்தரம் வருவார், சீக்கிரம் வந்து விடுவார்" என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாள். இதைக் கேட்கும்போது அவருக்குக் கவலையும் பீதியும் ஏற்பட்டுச் சஞ்சலப்பட ஆரம்பித்து விட்டார்.

ஒரு நாள் இரவு மோகினியின் பாட்டுச் சத்தம் கேட்டது. பெரிய தாயாரும் மோகினியின் தகப்பனாரும் ஒரே சமயத்தில் படுக்கையை விட்டு எழுந்திருந்தனர். பாட்டு வந்த திசையை நோக்கி விரைந்து சென்றனர்.

சலவைக்கல் மேடைமீது அமர்ந்து மோகினி பாடிக் கொண்டிருந்தாள். சுந்தரமும் மோகினியும் அந்த மேடைமீது உட்கார்ந்து சேர்ந்து பாடும் காதல் பாட்டை இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். அதில் ஒரு சோக மிருந்தது.

"காதல் செய்வீர் உலகத்தீரே!
காதலினால் சாகாமல் இருத்தல்கூடும்,
கவலைபோம்; அதனாலே மரணம்பொய்யாம்
காதல் செய்வீர் உலகத்தீரே!"

என்ற பாட்டையே திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தாள். வீணையின் இனிய நாதத்துடன் இழைந்து பாடிக் கொண்டிருந்தாள்.

வான வெளி யெங்கும் சந்திரனுடைய வெள்ளி நிலா பரவிக் கிடந்தது. வானம் முழுவதிலும் வெள்ளம்போல் நிரம்பிக் கிடந்த நிலவை மோகினி பார்த்தாள். அவள் முகத்தில் மனித சஞ்சாரமில்லாத, எல்லையும் சிக்கலும் இல்லாத, கனவு உலகத்துக்குப் பறந்து செல்வது போன்ற ஒரு பாவம் இருந்தது. மோகினி சிவப்பு நிறப் புடவை அணிந்திருந்தாள். அது காற்றில் படபட வென்று துடித்துக் கொண்டிருந்தது. அது அவள் துயரம் நிறைந்த இருதயத் துடிப்பை எடுத்துக் காட்டுவது போலிருந்தது.

மோகினி இப்பொழுது பாடுவதை நிறுத்திக் கொண்டாள். தாமரைக் குளத்தைச் சுற்றிலும் மௌனம் சூழ்ந்து கொண்டது. அந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு பெரிய தாயார் "மோகினி!" என்று கூப்பிட்டாள்.

மோகினி மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். கையிலிருந்த வீணையை மேடைமீது வைத்தாள். அங்கு சூழ்ந்திருந்த வெண்ணிலாப் பேரொளியில் தன் மலர்க் கரத்தை நீட்டிப் பெரிய தாயாரின் கையைப் பற்றினாள். அது அவள் உடம்பையும் உயிரையும் அவள் கையிலே ஒப்படைப்பது போலிருந்தது. அவள் கள்ளமில்லாத காதல் இதயம் சோக கீதம் பாடியது.

"ஆகா! இந்தமாதிரி நிலவில், நான் சுந்தரத்துடன் சலவைக்கல் மேடைமீது உட்கார்ந்து பாடிப் பேசி மகிழ்வதாக எண்ணிக் கொண்டேன். அப்படியே எழுந்து வந்து பாட ஆரம்பித்து விட்டேன். நான் பாடிக் கொண்டிருக்கும் பொழுது சுந்தரத்துடன் கைகோர்த்த வண்ணம் நிலவொளியின் பெரு வெளியிலே மிதந்து மேலே மேலே போவது போல மகிழ்ந்தேன்" என்றாள்.

****

தூத்துக்குடி சம்பவம்

சமீபத்தில் தூத்துக்குடியில் நடந்த கலவரங்களுக்கு அனுவசியமாக அதிக விளம்பரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. புது கிராமத்தில் விளைவிக்கப்பட்ட அட்டூழியங்களை ஜாதிய கண் கொண்டு ஆராயப் புகுவது யாருக்கும், எந்தவிதமான பயனும் அளிக்காது. அந்த அட்டூழியங்களில் கலந்து கொண்டவர்களை ஒரு குறிப்பிட்ட வகுப்பின் விரோதிகள் என்று மாத்திரம் கருதி விடக் கூடாது; அவர்கள் சமூகத்தின் விரோதிகள். சமூகக் கட்டுப்பாட்டின் மூலம்தான் அவர்களை ஒடுக்க முடியும். அதற்குச் சமூக ஒற்றுமை தேவை. பரஸ்பர நல்லெண்ணமும், நம்பிக்கையும், சகிப்புத் தன்மையும் சேர்ந்துதான் சமூகத்தை நாச சக்திகளிடமிருந்து காப்பாற்ற முடியும். இந்தக் கோணத்திலிருந்துதான் புது கிராம நிகழ்ச்சிகளை ஆராய வேண்டும். இதுதான் முறை. விவேகமுமாகும். இதை விட்டு விட்டு ஜாதிய அடிப்படையில் ஆராயப் புகுவது சமூக விரோதிகளுக்கு இடம் கொடுப்பதாகும். தமிழ் மக்கள் பிறவிலேயே சமாதானப் பிரியர்கள். பண்பும், சகோதர பாவமும் அவர்கள் ரத்தத்தில் ஊறிக் கிடக்கின்றன. அக்கிரமக்காரர்களுக்கு அவர்கள் எப்பொழுதும் இடம் தரமாட்டார்கள். இது உறுதி. ஒரு சில கயவர்களின் விஷமத்தைச் சாதிப் பிரச்னையாகச் சொல்வது புத்திசாலித்தனமன்று; பிராம்மணர்கள் போலீஸாரின் உதவியை எதிர் பார்ப்பதை விடத் தம் அண்டைச் சகோதரர்களின் நம்பிக்கையையும், அன்பையும் பெற வேண்டும். அதுதான் சாலச் சிறந்த பாதுகாப்பு நிரந்தரமான பாதுகாப்புமாகும்.

சென்னை
5—8—53

ஆர். நாராயணன்

****

பேசாமல் எழுந்து தாமரைக் குளத்துத் தண்ணீர் அருகில் சென்றாள். பெரிய தாயாரும் மிகுந்த திகிலுடன் அவளைப் பின்பற்றிச் சென்றாள். அங்கு சலனமற்ற தண்ணீரில் நிலாக்கதிர் அடிவரை பாய்ந்திருந்தது. மோகினி தன் பெரிய தாயாரின் முகத்தைப் பார்த்தாள். பிறகு தண்ணீரைக் குனிந்து பார்த்தாள். அவள் தோளில் கிடந்த சிவப்புப் புடவையின் தலைப்பு நழுவித் தண்ணீரில் விழுந்து விட்டது.

பெரிய தாயார் திடுக்கிட்டாள். தண்ணீரில் விழுந்த துணியை எடுத்து அவள் தோளில் போட்டுவிட்டு அவளை அணைத்துப் பிடித்து அழைத்துக் கொண்டு கூரை வீட்டுக்குள் சென்றாள். மோகினியை அவள் படுக்கையில் படுக்க வைத்தாள். அவள் உடம்பு லேசாகச் சுட்டது. நல்ல ஜுரம் அடிக்க ஆரம்பித்து விட்டது.

இந்தக் காட்சிகளை எல்லாம் மௌனமாகப் பார்த்துக் கொண்டு செயலற்று நின்று கொண்டிருந்தார் மோகினியின் தகப்பனார். அவர் இதயம் சோகத்தால் சுருங்கி விட்டது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

எங்கோ தூரத்தில் சற்று முன் மோகினி பாடிய அதே பாட்டுக் கேட்பது போலிருந்தது. அந்தப் பாட்டு அவரை என்னவோ செய்ய ஆரம்பித்து விட்டது. அவரால் அந்தப் பாட்டைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியவில்லை.

குடிலை விட்டு எழுந்து வெளியே வந்தார். அவர் உடலில் ஓடிக் கொண்டிருந்த இரத்தம் சட்டென்று உறைந்து விட்டது போலப் பயந்தார். அவர் நெற்றியில் வியர்வை முத்துக்கள் போல் உதிர்ந்தன. காற்றிலே அந்தக் காதல் கீதம் பறந்து வந்தது. தாமரைக் குளக் கரையின் மீதும், அதைச் சுற்றிலும் உள்ள வனத்தைக் கடந்தும், வனத்துக்கும் அப்பால் உள்ள வயல் வெளிகளிலும், கிராமங்களிலும் அந்தக் காதல் கீதம் இசைத்துக் கொண்டே சென்றது போல உணர்ந்தார். ஆனாலும் அவ்வொலி அவர் காதில் சதா ஒலித்துக் கொண்டே இருந்தது.

காதைப் பொத்திக் கொண்டு குடிசைக்குள் வந்தார். யாரையும் காணவில்லை. ஆனால் வீணையிலிருந்து நாதம் எழும்புவது போலவே உணர்ந்தார். அந்த ஓசை அவர் உள்ளத்தின் உணர்ச்சிகளைக் கிளறி மனத்தைப் பரவசப் படுத்தவில்லை. அக் கீதத்தைக் கேட்டு அவர் உடல் நடுங்கிற்று. அவர் இதயம் நடுக்குற்றது. ஏதோ விபரீதம் ஏற்படப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. மௌனமாக மோகினி படுத்திருந்த இடத்துக்குச் சென்றார். மோகினியைப் பார்த்தார். அவள் நிம்மதியாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவர் மனத்தில் சற்று நிம்மதி ஏற்பட்டது. அப்படியே தம்முடைய படுக்கையில் வந்து படுத்துக் கொண்டார்.

மறு நாள் இரவும் வீணையின் நாதமும், காதல் கீதமும் கேட்டுக் கொண்டே இருப்பது போலிருந்தது. சதா அவர் மண்டைக்குள்ளேயே அந்த ஒலி புகுந்து குடைந்து கொண்டே இருந்தது. இப்படியாக இரவும் பகலும் அந்தக் காதல் கீதம் அவரைப் பாடாய்ப் படுத்தி வந்தது.

மோகினி பகல் எல்லாம் உற்சாகமாகக் காணப்படுவாள். மாலை வந்ததும் அவள் முகம் வாடிவிடும். ஜுரம் அடிக்க ஆரம்பித்து விடும். ஜுர வேகத்தில் உளற ஆரம்பித்து விடுவாள். "சுந்தரம்! சுந்தரம்" என்று பிதற்றுவாள். அதனால் அவள் உடம்பு பலவீனமடைந்து வந்தது.

ஒரு நாள் மோகினி தன் தந்தையை அழைத்தாள். "சுந்தரம் என் இதயத்தில் வாழ்கிறார். அவருக்காகவேதான் நான் உயிர் வாழ்கிறேன். இல்லாவிட்டால்......" என்று ஏதோ சொன்னாள்.

சுந்தரத்தின் பெயரை அவள் உச்சரித்ததும் அவருக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டு விட்டது. "மோகினி! சதா எதற்கு அவன் பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்கிறாய்! அவன் வருகிற போது வரட்டும். பேசாமல் இரு" என்றார்.

அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. பெரிய தாயார் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள்.

மோகினி ஒரு முறை அவள் பெரிய தாயாரையும், தகப்பனாரையும் பார்த்தாள். "அப்பா! எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. நெஞ்சை வலிக்கிறது; தலை சுற்றுகிறது" என்றாள். அப்படியே சாய்ந்து விட்டாள்.

பெரிய தாயார் அவசரம் அவசரமாக அவளை எடுத்து மடியில் கிடத்திக் கொண்டு விசிறியால் விசிறினாள். மோகினி களைப்பு நீங்கியவளாய்க் கண்களை அகலத் திறந்தாள். திடீரென்று எதையோ பார்த்து உற்சாகமாக எழுந்தாள். "அதோ, என் சுந்தரம். சுந்தரமேதான். வாருங்கள். வாருங்கள். உங்களுக்காகத்தான் இத்தனை நாட்களாய்க் காத்திருக்கிறேன்" என்று அலறினாள். மீண்டும் மூர்ச்சையாகி விட்டாள்.

சந்தேகமில்லை. சாட்சாத் சுந்தரமேதான் அங்கு வந்து நின்று கொண்டிருந்தான். அகன்ற நெற்றியும், சுருள் சுருளான கருங் கூந்தலும், இயற்கையான சிரித்த முகமும் அவன் சுந்தரம்தான் என்பதை எடுத்துக் காட்டின.

அவன் மோகினியின் அருகில் வந்து அவள் மலர்க் கரத்தைப் பற்றினான். அவன் கண்களில் அற்புதமான ஒளி ஊசலாடியது.

"மோகினி! நான்தான் சுந்தரமேதான். உன்னை வீணாகக் கஷ்டப்படுத்தி விட்டேன். என் உள் இருந்த சந்தேகப் பிசாசு என்னை இப்படி எல்லாம் செய்யும்படித் தூண்டிவிட்டது" என்றான்.

மோகினி மிகுந்த களைப்புடன் இருந்தாள். அவள் சுந்தரத்தைக் கண் திறந்து பார்த்தாள். வாயைத் திறந்து லேசாகச் சிரித்தாள்.

சுந்தரம் அவளைப் பார்த்து மீண்டும் சொன்னான்.

"உன்னைப் பற்றி, உன் காதலைப் பற்றி எனக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது. உன் இதயத்தின் ஆழத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டேன். அதற்காகவேதான் இலங்கைக்குப் போனேன். அங்கிருந்து நான் இறந்துவிட்டதாக நானே தந்தி அடித்தேன். உன்னை வீணாகக் கவலைப்படும்படி செய்து விட்டேன்."

மோகினி மிகுந்த சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்தாள். "இப்பொழுது உங்கள் சந்தேகம் தீர்ந்து விட்டதல்லவா! உங்களுக்குத் திருப்தி தானே" என்று கேட்டாள்.

"நீ என்னை மனதாரக் காதலிப்பதை உணர்ந்து கொண்டேன். உன் அன்பைச் சோதிக்க விரும்பியே நான் செத்துவிட்டது போல தந்திரம் செய்தேன்" என்றான். மோகினியைக் கவலையோடு பார்த்தான். அந்தப் பார்வை தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வது போல இருந்தது.

திறந்திருந்த கதவு வழியாகக் காற்று அடித்துக் கொண்டிருந்தது. அந்தக் காற்றில் மோகினியின் கருங் கூந்தல் அசைந்தாடியது.

மோகினி மிகுந்த சிரமத்துடன் பேசினாள், "அப்பா!" என்று அங்கு நின்று கொண்டிருந்த தன் தகப்பனாரை அழைத்தாள். "பார்த்தீர்களா! நான் சொன்னது கடைசியில் உண்மையாகி விட்டதல்லவா! என் சுந்தரம் வந்து விட்டார்" என்றாள். பெரிய தாயாரைப் பார்த்துச் சிரித்தாள்.

சுந்தரத்தைக் காதலோடு பார்த்தாள். "சுந்தரம்! என்னை மிகவும் கொடுமைப் படுத்தி விட்டீர்கள். காலம் கடந்து விட்டது" என்றாள். இதயத்தை ஒரு கையால் அமுக்கிப் பிடித்துக் கொண்டு விம்மி அழுதாள்.

மோகினியின் தந்தைக்கு விஷயம் விளங்கி விட்டது. அவர் அவசரம் அவசரமாக வைத்தியரை அழைத்து வந்தார். வைத்தியர் தன்னுடைய முழுத் திறமையையும் உபயோகப் படுத்தினார். "எதிர்பாராத சந்திப்பில், சுந்தரத்தைப் பார்த்த மகிழ்ச்சியில் மோகினியின் இருதயம் வெடித்து விட்டது" என்றார்.

சாகும் தருவாயில் இருந்த மோகினி, சுந்தரத்தைச் சந்தோஷமாகப் பார்த்தாள். அவன் கையை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். "அப்பா!" என்று ஒரு மூச்சு விட்டாள். அவள் கைகள் உணர்வற்று விழுந்து விட்டன. இது வரை சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த தீபம் அணைந்து விட்டது. பாடும் பைங்கிளி கூண்டிலிருந்து பறந்து விட்டது

சோகத்தில் ஆழ்ந்திருந்த துர்ப்பாக்கிய தகப்பனார் துக்கத்தின் சுமையைத் தாங்க முடியாமல் தலை கவிழ்ந்து கொண்டார். அடிவயிற்றிலிருந்து



வெள்ளிக்கோடோடு
கூடிய
ஸைகிள் டயர்
GOODYEAR
குட்இயர்
டிலக்ஸ்
சைகிள் டயர்களும்
டியூப்களும்



சுகமான, வழவழப்பான
க்ஷவரத்திற்கு
கேரளா
ஷேவிங் ஸ்டிக்
ஸ்டிக்குகளும்
சின்னங்களும்
கேரள சோப் இன்ஸ்டிட்யூட்,
கோழிக்கோடு

வெடித்து எழுந்த நீண்ட பெரு மூச்சுடன் "மோகினி! நீயும் போய்விட்டாயா!" என்று பயங்கரமாக அலறினர்.

இதயமே வெடித்து விடுவதுபோல விம்மி விம்மி அழுதான் பெரிய தாயார்

"நான்தான் மோகினியைக் கொன்றேன்! என் சந்தேகம் அவளைக் கொன்று விட்டது. நான்தான் கொலைகாரன்!" என்று கதறினன் சுந்தரம்.

இறந்து போன மோகினியின்மீது சிறு குழந்தை போல் விழுந்து புரண்டு அழுதான். "மோகினி! மோகினி!" என்று பயங்கரமாகக் கத்தினன். தலைமயிரைப் பிய்த்து விட்டுக் கொண்டான்.

"ஐயோ! உன்னைக் கொன்று விட்டேனே! கொன்று விட்டேனே" என்று கத்தினன்.

"இதோ நானும் உன்னுடன் வருகிறேன். நீ இல்லாமல் என்னல் வாழ முடியாது" என்று அழுதான். "ஹஹ்ஹா!" என்று சிரித்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். திறந்து கிடந்த கதவின் வழியாக வெளியே வந்தான். "மோகினி! நானும் வருகிறேன். உன்னுடனேயே வருகிறேன்" என்று கத்திக் கொண்டே முல்லைவனத்துக்குள் புகுந்து வெறி பிடித்தவன் போல் ஓடினன்; ஓடினன்; ஓடிக்கொண்டே இருந்தான்.

தூரத்தில் கன்றைப் பிரிந்த பசுவின் தீனக் கதறலும், பேய்க் காற்றில் அசைந்தாடும் கோயில் மணியின் 'டாண் டாண்' என்ற ஓசையும் கூட்டை விட்டுப் பறந்தோடும் பறவையின் விடுதலைக் குரலும் காற்றிலே கலந்து வந்தன.

கிழவி இந்த இடத்தில் கதையை நிறுத்தி ஒரு பெருமூச்சு விட்டாள். தன் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

என்னை ஒருதரம் நிமிர்ந்து பார்த்தாள். "சந்தேகமே அழிவுக்குக் காரணம். தெரிந்து கொள்" என்றாள். அப்படியே சாய்ந்து படுத்தாள்.

கிழவி தனது அற்புதமான கதையை முடித்து விட்டாள். முல்லை வனத்தில் அசாதாரணமான மௌனம் நிலவியது. மோகினியின் முடிவைக் கேட்டுத் துக்கம் தாங்கமாட்டாதவள் போலக் கிழவி தூங்கி விட்டாள். அவளைப் பார்த்தபடியே அவள் உள்ளத்தில் இன்னும் எத்தனை எத்தனை கதைகள் இருக்குமோ என்று நினைத்தேன். மோகினியின் காதல் வாழ்க்கை என் இதயத்தை என்னவோ செய்து கொண்டிருந்தது.

கிழவி நன்றாகத் தூங்கி விட்டாள். காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. நானும் அந்தப் பாழடைந்த கோயிலிலேயே காலை நீட்டிப் படுத்தேன். வானத்தில் நிலவு மறைந்து இருள் சூழ்ந்து கொண்டது. ஆழ்ந்த துக்ககரமான ஓசை காற்றிலே பறந்து வந்தது. முல்லை வனமே சோகம் தாங்காமல் அலறுவதுபோலக் காய்ந்து கிடந்த இலைச் சருகுகள் சலசலவென்று சுழந்று காற்றில் சுழன்று சுழன்று பறந்தன. (முற்றும்)

படித்துப் பாருங்கள்!

பஞ்சாயத்தை நடத்துவது எப்படி?

கிராம பஞ்சாயத்துகள் ஒழுங்காகத் தங்கள் நிர்வாகங்களை நடத்தினல் தேசமே நல்ல முறையில் நடத்தப் படுகிறது என்று அறியலாம். இந்த உண்மை சேர, சோழ, பாண்டியர் காலத்திலிருந்து ஒப்புக் கொள்ளப் பட்டு வருகிறது. ஆனல் இன்றைய பஞ்சாயத்துகளை நடத்தும் முறையை சர்க்கார் வெளியீடுகளிலிருந்து தெரிந்து கொள்வது சிரம சாத்தியமான காரியம். அந்த சிரமம் இன்றி, இந் நூல் மிக எளிய தமிழில் மிகத் தெளிவாகப் பஞ்சாயத்து நடத்தும் முறையை விளக்குகிறது. பஞ்சாயத்து அனுபவமல்லாத பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கும் பொது மக்களுக்கும் இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும்.

ஆசிரியர்: முல்லை – முத்தையா; கிடைக்குமிடம்: "நகரசபை"க் காரியாலயம்; சென்னை - 24 விலை: ரூ. 1—2—0

"நகர சபை"

சென்னை கார்ப்பரேஷன், ஜில்லா போர்டுகள், கிராம பஞ்சாயத்துகள் முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள் அவ்வப்போது புரியும் ஆக்க வேலைகளையும், சீர்திருத்தங்களையும், இனி செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் பற்றி மாதமிரு முறை வெளியாகும் இப் பத்திரிகை தெளிவாக விளக்குகிறது. மற்றும் பல புள்ளி விவரங்களையும் கொடுக்கிறது. மொத்தத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் பஞ்சாயத்திலும் என்னென்ன உருப்படியான வேலைகள் செய்திருக்கிறார்கள் என்பதை மற்ற ஜில்லா வாசிகளும், ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்களும் அறிந்து பெரிதும் பயன் பெறலாம்.

இதன் ஆசிரியர்: முல்லை-முத்தையா; கிடைக்குமிடம்: "நகர சபை" காரியாலயம், சென்னை 24. தனிப் பிரதி 2 அணு: வருஷ சந்தா ரூ. 3.

தமிழிசைப் பாடல்கள்

அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் மாறாத நேயம் பூண்டவர். அப் பெருமானது அருள் திறத்தினல் இயல், இசைத் தமிழில் நிறைந்த புலமை மிக்கவர். அவர் இயற்றிய திருப்புகழ், லய சம்பந்தமான நுட்பங்கள் அமைந்த வண்ணச் சந்தங்களாலான ஓர் அரிய நூல். அந்நூலில் உள்ள அற்புதத் தமிழ்ப் பாடல்களுக்கு ஸ்வரம் அமைத்து இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. காஞ்சீபுரம் இசைப் பெரும் புலவர், ஸ்ரீ நாயனப் பிள்ளை அவர்கள் பாடிய முறையை ஒட்டி. இசைப் பேராசிரியர் திரு. சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் இந் நூலிலுள்ள திருப்புகழ்ப் பாடல்களுக்கு இசை யமைத்திருக்கிறார். இனிய தமிழில் பாடி இசைக் கலையை வளர்க்க இந்நூல் பேருதவியாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. விலை: ரூ. 3.

தமிழ்க் கீத வர்ணங்கள்

தமிழ் இசைப் பயிற்சிக்குக் கீர்த்தனங்கள் மட்டும் இருந்தால் போதா; வர்ணங்கள், கீதங்கள் முதலியனவும் வேண்டும். இந்த நோக்கத்தோடு ஸ்ரீ டைகர் வரதாச்சாரியார், ஸ்ரீ டி. என் சாமிநாதப் பிள்ளை, ஸ்ரீ சாம்பசிவ ஐயர், ஸ்ரீ எம். பி. பெரியசாமித் தூரன், ஸ்ரீ கோமதி சங்கரய்யர் முதலியவர்கள் இயற்றிய வர்ணங்களும் கீதங்களுமாக இந் நூலில் தொகுக்கப்பட்டு ராகம், மேளம், தாளம் முதலிய இன்றியமையாத இசை நுணுக்கங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. கீதங்களுக்கும் வர்ணங்களுக்கும் இசை வல்லுனரால் ஸ்வரமும் அமைக்கப்பட்டிருக்கிறது. விலை: ரூ. 4—0—0.

மேற்கண்ட இரு புஸ்தகங்களையும் பிரசுரித்தவர்கள்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம்.



என் மாமனார்

சாந்தா



குழந்தை ரவி ரொம்பப் படுத்துவான் என்று தோட்டத்தில் காக்காய் குருவிகாட்டி சாதம் ஊட்டிக் கொண்டிருந்தேன். சமையலறையில் மாமனாரும் மற்றக் குழந்தைகளும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மாமியாரும் என் ஓர்ப்படி கமலாவும் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அவர்களோடு ரவியைச் சாப்பிட உட்கார வைத்துவிட்டால் அவனும் சரியாகச் சாப்பிட மாட்டான்; மாமனாரையும் சாப்பிட விடமாட்டான். இரண்டு பேரும் எங்களைப் பாடாய்ப் படுத்தி விடுவார்கள். அதற்காகத்தான் என் மாமியார் அவனைத் தோட்டத்துக்குத் தூக்கிக்கொண்டு போய்ச் சாதம் ஊட்டச் சொன்னார்.

ரவிக்கு இரண்டு வயதாகிறது. எனக்கு அவன் ஒரே குழந்தை. கமலாவுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் இருந்தது. ரவி ரொம்பவும் சுறுசுறுப்பானவன். வயதுக்கு மீறின சமர்த்தும் அதற்கேற்ற பிடிவாதமும் அவனிடம் இருந்தது. தாத்தாவிடம் அவனுக்கு அசாத்திய செல்லம். வீட்டிலேயே அவன்தான் மிகவும் சூடிகையான குழந்தை என்று அவர் சொல்லுவார். "ரவி மாதிரி இருக்கும் போது கோபாலன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே! ரவி மணி மணியாக அல்லவா பேசுகிறான்!" என்று மாமியாரிடம் சொல்லுவார். கமலா ஏதாவது நினைத்துக் கொள்வாளோ என்று எனக்குக் கவலையாக இருக்கும். கோபாலனுக்கு வயது பதின்மூன்று. அவனும் ரொம்பக் கெட்டிக்காரன் தான். நாலாவது பாரம்படித்துக் கொண்டிருக்கிறான். பள்ளிக்கூடத்தில் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்வான். ரொம்பப் பொறுப்புடன் பள்ளிக்கூட வேலைகளில் ஈடுபடுவான். இதெல்லாம் மாமனாருக்குப் பெருமைதான். ஆனாலும் ரவிதான் எல்லோரையும் விடக் கெட்டிக்காரனாக இருப்பான்என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

கெட்டிக்காரக் குழந்தை என்ன செய்வான் தெரியுமா? தாத்தாவோடு சாப்பிடுவதற்கு உட்கார்ந்தால் தன் இலையில் போட்டதை எல்லாம் அவர் இலையில் போடுவான். அவர் இலையில் போட்டிருக்கும் ஊறுகாயை எடுத்து அப்படியே வாயில் போட்டுக் கொண்டு விடுவான். அவர் முதலில் குழந்தையைத் தடுக்க மாட்டார். உறைப்புத் தாங்காமல், கண்களில் நீர் ததும்ப அவன் இணறும் போது, "குழந்தை என்னிடம் உட்கார்ந்திருக்கும்போது ஏன் ஊறுகாய் போட்டீர்கள்?" என்று கோபித்துக் கொள்வார். உடனே சொம்புத் தண்ணீரை அவனிடம் கொடுத்து விடுவார். அவன் ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டு, சொம்பிலிருந்து தாத்தாவுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்க முயற்சிப்பான். அதற்குள் அவர், "பார்த்தாயாடி, குழந்தை சமர்த்தை! தான் குடித்துவிட்டு எனக்கும் கொடுக்கிறான் பார்!" என்பார். அவர் கையில் ஊறுகாய் எண்ணெய் வழிந்து கொண்டிருக்கும். கை வழுக்கிச் சொம்பும் தண்ணீரும் அவர் இலையில் கொட்டிவிடும். உடனே அவர், "குழந்தை என்ன செய்வான்! அவன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும்போது சொம்பில் ஏன் தண்ணீர் வைத்தீர்கள்? உங்களுக்குத்தான் மூளை இல்லை?" என்பார்.

தண்ணீர் கொட்டியதும் சற்று ரவிக்குக் கலக்கம் உண்டாகிக் கண்ணைக் கையால் தேய்த்துக் கொள்வான். உடனே ஒரே அழுகை. "கண்ணு எரியறதே தாத்தா!" என்று அலறத் தொடங்கி விடுவான். மாமனாருக்கு ஒரே ஆத்திரம் பொங்கும். "நீங்கள் எல்லாம் பொம்மனாட்டிகளா? குழந்தைதான் ஊறுகாயைத் தொட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்களே! உடனே கையை அலம்பக் கூடாது?" என்று கத்துவார். உடனே ரவியைத் தூக்கிக் கொண்டு

போய்க் கண்களில் தண்ணீர் விட்டுத் துடைப்பேன். சாப்பிடும் லட்சணம் அவ்வளவுதான். இப்படிப் பல தடவைகள் நடந்திருப்பதால்தான், என் மாமியார் ரவியைத் தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போகச் சொன்னார்.

உள்ளே அவர் குரல் கேட்டது. "குழந்தை எங்கே?" என்றார். அதற்கு என் மாமியார், "கல்பகம் தோட்டத்தில் அவனுக்குச் சாதம் ஊட்டுகிறாள்" என்று பதில் சொன்னார். "எதற்காக அவனுக்குச் சாதம் ஊட்ட வேண்டும்? அவன்தான் தானாகச் சாப்பிடுகிறானே. இப்படி ஊட்டுவதனால்தான் குழந்தைக்கு அஜீரணம் உண்டாகிறது. தானாகச் சாப்பிட்டால் அவன் அளவோடு சாப்பிடுவான். கல்பகம் படித்த பெண்ணாச்சே. குழந்தை தானாகச் சாப்பிடுவதுதான் நல்லதென்று அவளுக்குத் தெரிந்திருக்குமே. நீதான் ஊட்டச் சொல்லியிருப்பாய்" என்றார். எனக்கு அவர் பேசியது கஷ்டமாக இருந்தது. மாமியாரிடம் போய், "உன் மாட்டுப் பெண் படித்தவள்" என்றால் அவருக்குக் கோபம் வராதா? நான் நினைத்தபடியே அவருக்குக் கோபம் என்று பாத்திரங்களின் ஓசையிலிருந்து தெரிந்தது.

"கல்பகம்" என்று மாமனார் கூப்பிடும் குரல் கேட்டது. நான் ஒரு கையில் குழந்தையுடனும் ஒரு கையில் கிண்ணத்துடனும் தயங்கிக் கொண்டே உள்ளே போனேன். "உன் மாமியார் இப்படித்தான் ஏதாவது சொல்லுவாள். விளக்கெண்ணெயைக் கொடு, கடுக்காய்க் கஷாயம் கொடு என்பாள். நீ அதையெல்லாம் கேட்காதே!" என்றார். என் நிலைமை தர்ம சங்கடமாக இருந்தது. சரி என்று சொன்னால் மாமியார் வருத்தப்படமாட்டாரா? ஆகவே ஒரு அசட்டுச் சிரிப்புடன் சமையலறையிலிருந்து வந்தேன்.

திடீரென்று ரவி, "அம்மா! காக்காய் ஏன் கறுப்பாய் இருக்கு?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான். இதற்கு என்ன பதில் சொல்லுவது? எதைச் சொன்னாலும் மாமனார் "இப்படிச் சொல்லக் கூடாது; அப்படிச் சொல்ல வேண்டும்" என்று எதையாவது சொல்லுவார். "பேசாமல் சாப்பிட்டு வாடா ரவி" என்று ரகசியமாக அவன் காதில் சொன்னேன். "ஏம்மா? நான் கேட்டதுக்குப் பதில் சொல்லம்மா!" என்று மறுபடியும் கத்தினான் ரவி. "நீ சொல்லாட்டா நான் தாத்தாகிட்டே சொல்லுவேன்" என்று வேறு பயமுறுத்தினான்.

"ஏனம்மா, கல்பகம்! குழந்தை ஒரு கேள்வி கேட்டால் உடனே பதில் சொல்ல வேண்டாமா? நீ படித்த பெண்ணாச்சே, இது தெரிய வேண்டாமா? உடனே பதில் சொல்லாவிட்டால் குழந்தைகளுக்குக் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ளுவதில் ஆர்வம் போய் விடும். விஷயங்களைத் தெரிந்து கொள்ளச் சக்தியே இல்லாது போய்விடும்" உள்ளிருந்தபடியே தம்முடைய பேரனுக்குப் பரிந்து பேசினார் தாத்தா.

இந்தச் சமயத்தில் கோபால் அங்கு வந்து "தாத்தா! இந்த வருஷம் எங்கள் பள்ளிக்கூட ஆண்டு விழாவை ரொம்பவும் விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறோம். பிரபல பத்திரிகாசிரியர் 'துருவனை'க் கூப்பிட்டிருக்கிறோம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு அவர், "பள்ளிக்கூட விழாவெல்லாம் நன்றாகக் கொண்டாட வேண்டியதுதான். நான் படித்தபோது இதிலெல்லாம் ரொம்பவும் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொள்வேன். அப்போது எனக்கு ஒரு இங்கிலீஷ் வாத்தியார் இருந்தார். சுந்தரமய்யர் என்று பெயர். என்னிடம் அவருக்கு என்ன அபிமானம் தெரியுமா? பிரமாதமாகப் பிரசங்கம் பண்ணுவார். ஷேக்ஸ்பியருடைய நாடகங்களைக் கூட நாங்கள் நடித்திருக்கிறோம். எவ்வளவு ஆனந்தமாகப் பொழுது போகும் தெரியுமா? அவர்தான் எவ்வளவு அன்பாக இருப்பார்? நாங்களும் எவ்வளவு மரியாதையுடன் நடந்து கொள்வோம் தெரியுமா? ஹும்! இந்தக் காலத்தில் வாத்தியார்களும் பையன்களும் இருக்கிறார்களே, அவர்கள் சுத்த மோசம்" என்றார். பாவம்! கோபால். அவன் உற்சாகமாகச் சொல்ல ஆரம்பித்தான். இவர் இப்படிப் பேசவே அவன் பதில் சொல்லவில்லை.

பிறகு அவராகவே மறுபடியும், "ஏன் கோபால், பள்ளிக்கூட விழாவிற்கு எதற்காக ஒரு பத்திரிகாசிரியரைக் கூப்பிட வேண்டும். கல்வி மந்திரி ஒருவர் இருக்கிறாரோ இல்லையோ? அவரைக் கூப்பிடலாமே. அதுதான் போன வருஷம் கூப்பிட்டோமே என்பாய். அதற்கென்ன? அவர் வந்து அதே விஷயத்தைத் திருப்பிச் சொன்னாலும் அவரைக் கூப்பிடுவதுதான் சரி" என்று கூறினார்.

எனக்குச் சிரிப்பு வந்தது. நேற்று மாலை அவன் பள்ளியிலிருந்து வந்த உடனே, "சித்தி! இன்று நான் யாரைப் பார்த்து விட்டு வந்தேனென்று நினைக்கிறாய்?" என்று ஒரே மகிழ்ச்சி பொங்கக் கேட்டான்.

"ஏண்டாப்பா! ஏதோ எவரெஸ்ட் சிகரத்தின் மேல் ஏறிவிட்ட மாதிரி சந்தோஷப்படுகிறாயே? யாரைப் பார்த்து விட்டாய் இப்படி சந்தோஷப்பட?" என்று கேட்டேன்.

"என்ன சித்தி இப்படிச் சொல்றே? நான் யாரைப் பார்த்து விட்டு வந்திருக்கிறேனென்று தெரிந்தால் நீ என்னைவிடச் சந்தோஷப் படுவாய். எங்கள் பள்ளிக்கூட விழாவிற்குத் தலைமை வகிக்க ஆசிரியர் "துருவனை"க் கூப்பிட்டு விட்டு வந்தேன். என்னிடம் ரொம்பப் பிரியமாகப் பேசினார். 'எனக்கு ஒரு சித்தி இருக்கிறாள். உங்கள் எழுத்துக்களை ஒன்று விடாமல் படித்து விடுவாள்' என்று கூடச் சொன்னேன் சித்தி. ரொம்ப கெட்டிக்காரனாக இருக்கிறாயே. நன்றாகப் பேசுகிறாய் என்னைப் பாராட்டி

னார். கட்டாயம் வருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த வருஷம் விழா பிரமாதமாக இருக்கப் போகிறது பார். அவர் ரொம்ப சிரிக்கச் சிரிக்கப் பேசுவாராம். ஆனால் தாத்தாவுக்குப் பிடிக்காது. 'பத்திரிகாசிரியரைப் போய்க் கூப்பிடலாமா? என்பார்'' என்றான்.

அவன் சொன்னது உண்மை. இந்தக் கதைகளை வெளியிடும் உதவாக்கரைப் பத்திரிகைகளையும், கதைகள் எழுதும் வீண் பேச்சுக்காரர்களையும் அவருக்குப் பிடிக்காது. செய்திப் பத்திரிகைகள் தவிர வேறு எதையுமே வெளியிடக்கூடாதென்பது அவரது திடமான அபிப்பிராயம்.' எனக்கு மாத்திரம் அதிகாரம் இருந்தால் (நல்ல வேளையாக இல்லை.) இந்தப் பத்திரிகைகளையே வெளியிடக் கூடாதென்று சட்டம் செய்து விடுவேன்' என்பார்.

நாங்கள் மூவரும் பத்திரிகைகளை வாங்கி ஒளித்து வைத்துக் கொண்டு படிப்போம். தலையணைக்கடியிலும். படுக்கைக் கடியிலும் பத்திரிகைகள் வாசம் செய்யும். அவர் எங்கும் வெளியில் போகவும் மாட்டார். வீட்டிலிருப்பவர்களும் எங்கும் போனால் அவருக்குப் பிடிக்காது. பகலில் அவர் தூங்கும் நேரத்தில் கமலாவும், நானும் சஞ்சிகைகளைப் படித்து விடுவோம். மாமியாரால் அப்படிச் சீக்கிரம்

○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

இன்று என்ன கிழமை?

சேலத்திலிருந்து 27-7-53 திங்கட்கிழமை காலை 8-மணிக்கு, எனது பாட்டனார் மோசமான நிலைமையில் இருப்பதாக என் தகப்பனாருக்குத் தந்தி வந்தது. உடனே நாங்கள் எல்லோரும் சேலத்திற்குச் சென்றோம்.

என் பாட்டனாருக்கு 67-வது வயது. நல்ல படிப்பாளி, விவேகி. மிக்க அறிவு பெற்றவர். பெரிய கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் இருந்து ரிடையர் ஆனவர். நாங்கள் வீட்டுக்கு 12 மணிக்குச் சென்றோம். சென்றதும் எல்லோரையும் ஒவ்வொருவராகக் கூப்பிட்டுக் குசலம் விசாரித்தார். அதிலிருந்து அவருடைய உயிர் ஊசலாட ஆரம்பித்து விட்டது.

அநேகமாக மயக்கத்திலேயே இருந்தார். மயக்கம் தெளிந்த போதெல்லாம் ஒரே கேள்வியான "இன்று என்ன கிழமை!" என்பதுதான். எங்களுக்கெல்லாம் எதற்காகக் கேட்கிறார் என்று தெரியவில்லை. அவராலும் சொல்ல முடியவில்லை. அதேபோல் 31-7-53 வெள்ளிக்கிழமை காலையிலும் "இன்று என்ன கிழமை!" என்று கேட்டார். வெள்ளிக்கிழமை என்று பதில் சொன்னேன். "கல்கி வந்து விட்டதா!" என்று கேட்டார். ராஜாஜி கல்வித் திட்டத்தைப் பற்றி ஏதாவது தாங்கள் எழுதி இருந்தால் படிக்கும்படி சொன்னார். அதைப் படித்துக் காண்பித்தேன். அவைகளைக் கேட்ட பிறகு, 'கல்கி' அதிக சேவை செய்கிறது. அது நன்றாக வளர்ந்து செழித்தோங்க வேண்டும் என்று ஆசி கூறினார்.

'கல்கி'யைக் குழந்தைகள் முதல் சாகும் தறுவாயில் இருக்கும் கிழவர்கள்கூட எதிர்பார்க்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

தர்மபுரி
14—8—53

எஸ். ஜெயம்.

○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

படிக்க முடியாது. அஞ்சரைப் பெட்டிக்கடியிலும், அரிசி பீப்பாயிலும் பதுக்கி வைத்துக் கொண்டு நாலைந்து நாட்கள் படிப்பார்.

சாப்பாடு முடிந்து எல்லோரும் எழுந்து போனார்கள். லக்ஷ்மி கால் தடுக்கித் தடாலென்று கீழே விழுந்தாள். உடனே ரவி, "லச்சுமி விழுந்துட்டாளே!" என்று பெரிதாக அழத் தொடங்கினான். இருவரையும் சமாதானப்படுத்தி, விளையாடச் சொல்லிப் பந்தைக் கொடுத்துவிட்டு, உள்ளே வந்தேன்.

"ஏண்டி கல்பகம், உங்க மாமனார் என்ன இப்படிச் சொல்கிறார்? எனக்கு என்ன ஒன்றும் தெரியாதா? உன் அகத்துக் காரரையும், இவன் வீட்டுக்காரரையும் நான் வளர்க்கவில்லையா? அப்போ இவர்தான் வளர்த்தாரோ? சே! சே! வர வர ரொம்பத்தான் கரிக்கிறார். என்ன வேண்டியிருக்கு? என்று அலுத்துக் கொண்டார். இன்னும் தொடர்ந்து, நீ இண்டர் படிச்சிருக்கே வாஸ்தவந்தான். கமலாவும் ஏதோ எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணியிருக்கிறாள். ஆனால் என்னுடைய அனுபவம் உங்களுக்கு வந்து விடுமோ? நான் என் பிள்ளைகளை மட்டுமா வளர்த்தேன்? நாத்தனார் குழந்தைகள், ஓர்ப்படி குழந்தைகள் எல்லாரையும் வளர்த்திருக்கிறேன் தெரியுமா? எல்லோரும் நன்றாகத்தான் இருக்கிறார்கள்" என்று கூறி முடித்தார் மாமியார். பாவம்! அவர் மேலும் குற்றமில்லை. இரண்டு மாட்டுப் பெண்களுக்கு எதிரில் குறைத்துப் பேசினால் வருத்தமாக இருக்காதா?

என் கணவர் சங்கரன், மைத்துனர் மூர்த்தி இருவரும் நல்ல வேலையிலிருந்தனர். சௌகரியமான வாழ்க்கை. படாடோபம் கிடையாது. மாமனாருக்குப் பென்ஷன் கொஞ்சம் வந்து கொண்டிருந்தது.

மாமனாருக்கு எப்போதும் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். யாரும் சும்மா உட்கார்ந்திருந்தால் பிடிக்காது. தானும் மெதுவாக ஏதாவது செய்து கொண்டே யிருப்பார். அவர் இளமையில் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர். தான் கட்டிய வீட்டின்மேல் அவருக்கு அலாதி பிரியம். எல்லோரிடமும் தான் வீடு கட்டியதைப் பற்றிச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் பெருமையடித்துக் கொள்வார். என்னிடம்கூட, "இந்தக் கதவுகளுக்கெல்லாம் என்னமாதிரி வேலைப்பாடு அமைப்பது என்று பத்து நாள் யோசனை பண்ணினேன் கல்பகம். உங்களுக்கு அதன் அருமை எங்கே தெரியும்?" என்று கூறுவார்.

அவருக்கு உண்மையான நண்பர் மணி ஐயர் ஒருவர்தான். அவருக்கும் வேலை யொன்றும் கிடையாது. "கோபால கிருஷ்ணா" என்று கூப்பிட்டுக் கொண்டு வந்துவிட்டாரானால், குறைந்தது ஒரு வேளை ஆகாரம் பண்ணாமல் போக மாட்டார். மற்றவர்களெல்லாம் என் மாமனாருடன் பேச சற்று பயப்படுவார்கள். பேசச் ஆரம்பித்து விட்டால் ஓய-

மாட்டார். நிதானமாக வார்த்தைகளை யோசித்துப் பேசுவார். கேட்பவர்களுக்குப் பொறுமையே போய் விடும்.

மணி ஐயர் வராத சமயங்களில் அவர் என்னைக் கூப்பிட்டுப் பேச ஆரம்பித்து விடுவார். அவர் அறைப் பக்கமாகப் போய்விட்டால் உடனே கூப்பிட்டு விடுவார். அவர் கண்களில் படாமலிருக்க நானும், கமலாவும் பிரயாசை எடுத்துக் கொள்வோம். என்னைத் தான் அதிகமாகக் கூப்பிடுவார். கூப்பிட்டு விட்டால் அவ்வளவுதான். மணிக்கணக்காகத் தான் சிறு வயதில் தன் தகப்பனாரிடம், "வொர்ட்ஸ் வொர்த்" எழுதிய கவிதைகளை ஒப்பிக்காமலிருந்ததற்காக அடி வாங்கியது முதல், நாற்பது வயதில் வீடு கட்டச் சிரமப் பட்டது வரைக்கும் எல்லா விஷயங்களையும் அலுப்பில்லாமல் சொல்லுவார். அவருக்குத் தான் அலுக்காது. எனக்கு எப்போது எழுந்து போவோம் என்று ஆகிவிடும். இந்த விஷயங்களைக் கேட்டுக் கேட்டு எனக்கு மனப்பாடம் ஆகிவிட்டது. அவர் எந்தக் கவிதையை ஒப்பிக்காமல் அடி வாங்கினாரோ, அந்தக் கவிதை எனக்கு நன்றாக மனப் பாடமாகிவிட்டது.

கமலா அவரோடு அதிகமாகப் பேச மாட்டாள். எனக்குக் கொஞ்சம் கவிதைப் பித்து உண்டு. காலேஜில் தமிழ்ப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு வாங்கி யிருக்கிறேன். ஆங்கிலம், தமிழ் எதுவாக இருந்தாலும் இலக்கியங்கள் படிப்பதில் எனக்கு ஆர்வம் உண்டு. இதை என் மாமனார் தெரிந்து கொண்டிருந்தார். அதனால் அவருக்கு என் மீது அபிமானம் அதிகம். திடீரென்று "கல்பகம் தாயுமானவரின் பாடல் ஒன்றைப் படிக்கிறேன், கேள்" என்று சொல்லிவிட்டு :

"ஆதியந்தம் காட்டாதமுதலாய் எம்மை
  அடிமைகொள வார்த்தெடுத்த அன்னைபோல
நீதி பெருங்குருவாகி, மனவாக்கெட்டா
  நிச்சயமாய் சொச்சமதாய் நிமலமாகி
வாதமிடும் சமயநெறிக் கரியதாகி
  மோனத்தோர் பால்வெளியாய் வயங்காநின்ற
ஜோதியை என்னுயிர்த்துணையை நாடிக்
                      கண்ணீர் சோர
  இரு கரங்குவித்துத் தொழுதல்செய்வாம்."

என்று படிக்க ஆரம்பித்து விடுவார். மிகவும் உணர்ச்சியோடு படிப்பார். எனக்கு ஏகப் பட்ட வேலை கிடைக்கும். கமலா தனியாகச் சமைத்துக் கொண்டிருப்பாள். அவளுக்கு உதவி செய்யாமல் உட்கார்ந்திருப்பது வேதனையாக இருக்கும். இஸ்திரி பண்ண வேண்டிய துணிமணிகள் குவிந்து கிடக்கும். முதலில் அவர் படிப்பது மனத்தில் ஏறவே ஏறாது. ஆனால் இரண்டு நிமிஷங்களில் மற்றதெல்லாம் மறந்துவிடும். அவர் படிக்கும் உணர்ச்சியில் நானும் ஆழ்ந்து விடுவேன்.

சில சமயங்களில் என்னைப் படிக்கச் சொல்வார். நான் படிக்கும்போது கண்களை மூடிக் கொண்டு கேட்டுக் கொண்டிருப்பார். சில இடங்களை அழகாக விளக்கிக் கூறுவார். சில சமயங்களில் அவர் சொல்வதில் கவனமில்லாமல் வேறு ஏதாவது காரியத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பேன். அதை எப்படியோ அவர் தெரிந்து கொண்டு விடுவார். "கல்பகம்! இப்போது நான் என்ன சொன்னேன் என்று திருப்பிச் சொல்லு. பார்க்கலாம்" என்பார். நான் உடனே பதில் சொல்ல முடியாமல் திருதிருவென்று விழிப்பேன். இந்தமாதிரிப் பல தடவைகள் நான் அவரிடம் மாட்டிக் கொண்டு திகைத்துத் திண்டாடிப் போயிருக்கிறேன்.

அவருக்குச் சமையல் எல்லாம் அலாதியான ருசியாக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் வேக வைத்துத்தான் சமைக்க வேண்டும். வெண்டைக்காயை வேக வைத்துக் கறியும், கூட்டும் பண்ணச் சொல்லுவார். வேறு யாருக்கும் அது பிடிக்காது. பாவற்காய் "கோசுமல்லி" பண்ணச் சொல்லுவார். பச்சையாக அதை நறுக்கி, எலுமிச்சம் பழச் சாறு பிழிந்து, பச்சை மிளகாயை நறுக்கிப் போட்டு ஊறவைத்து விட்டால் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். தனக்குப் பிடித்தவைகளைத் தான் மாத்திரம் சாப்பிட்டால்

○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

ஆதரவும் வேண்டும்!

ராஜாஜியின் புதிய கல்வித் திட்டம் அமுலாக ஆரம்பித்திருக்கிறது. ராஜாஜி எதைக் கொண்டு வந்தாலும் எதிர்ப்பது என்றே இருக்கும் பிரகிருதிகள் உடனே எதிர்ப்புக் கூட்டங்கள் கூட்டிக் கண்டனத் தீர்மானங்களை வெளியிட்டு வருகின்றனர். ஆதரிப்பவர்களோ, தங்களது ஆதரவைத் தெரிவிப்பதில்லை. 'நாம்தான் ஆதரிக்கிறோமே கூட்டம் எதற்கு! தீர்மானம் எதற்கு' என்பது இவர்களது அபிப்பிராயம். இவர்கள்தான் என்பதில்லை, சங்கங்களும், ஸ்தாபனங்களும் கூடத்தான். எதிர்ப்பவர்கள் எதிர்ப்பைப் பிரமாதமாகக் காண்பிப்பார்கள். ஆதலால், பெரும்பாலான (ஆனால் தெரிவிக்கப்படாத!) ஆதரவும்கூட இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் மூழ்கிவிடக் கூடும்.

ஆகையால், ஆதரிக்கும் மக்கள் உடனே கூட்டம் கூடி, கல்வித் திட்டத்தை ஆதரித்து, தீர்மானத்தைச் சர்க்காருக்கு அனுப்ப வேண்டும். இதன்மூலம்தான் ராஜாஜியின் கையை நாம் பலப் படுத்த முடியும். ஒரு திட்டத்தை எதிர்க்காமல் மட்டும் இருந்தால் போதாது. இது ஜனநாயகம். ஆகையால் இதைப் பயன்படுத்திக் கொண்டு, விஷமிகளும் அரசியல் சூதாட்டக் கட்சிகளும் எதிர்ப்பைப் பன்மடங்கு எடுத்துக் காட்டுகின்றனர். ஆகவே, ஆதரவளிக்கும் மக்கள் அவ்விதமான போலி எதிர்ப்புக்களை முறியடிக்க ஆதரவுத் தீர்மானங்களை நிறைவேற்றிச் சர்க்காருக்கு அனுப்ப வேண்டும். எவ்வாறு எதிர்க்கட்சியினர் சட்டசபையில் எதிர்ப்புச் சக்திகளைக் காட்டி எதிர்க்கின்றனரோ அவ்வாறே சர்க்காரும் ஆதரவு தீர்மானங்களைக் கொண்டு குழந்தைக் குலத்திற்கு நல்லது செய்ய முடியும்.

சென்னை
8—7—53
ஜி. ஜயச்சந்திரன்

○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

தேவலையே. பாவம்! குழந்தைகளுக்கும் போடச் சொல்லுவார். அவர்கள் முகத்தைச் சுளித்துக் கொண்டு, என்னையும் கமலாவையும் பரிதாபமாகப் பார்ப்பார்கள்.

தினமும் காலையில் என்னைக் கூப்பிட்டுத் தனக்கு வேண்டிய சமையலைச் சொல்லுவார். அவருக்கு இரண்டு விதமான காய்கறிகளைச் சேர்த்தால் பிடிக்காது. கத்தரிக்காய், முருங்கைக்காய் இரண்டும் சேர்த்துச் சாம்பார் பண்ணினால் அவர், "ஏன் கல்பகம்? இன்றைக்கு உன் ஓர்ப்படி முருங்கைக் காய்க்கும், கத்திரிக் காய்க்கும் கல்யாணம் பண்ணி விட்டாளோ?" என்று கேட்பார்.

அவருக்கு வேண்டியதை அவர் சொல்லும் விதமே அழகாக இருக்கும். எதை எப்படிச் செய்யவேண்டுமென்று அவருக்கு நன்றாகத் தெரியும். இவர் எப்படி இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறாரென்று நான் அதிசயப் படுவேன். "நல்ல கருவேப்பிலை இருக்கோம்மா? நாலு கொத்து எடுத்து, நரம்பு இல்லாமல் ஆய்ந்து விட்டு, ஒரு சுண்டைக்காயளவு புளி. ஒரு மணத்தக்காளியளவு பெருங்காயம், கொஞ்சம் உப்பு. ஒரு பச்சை மிளகாய் இவற்றை வைத்து நன்றாக வெண்ணெய் மாதிரி அரைத்துவிடு. புளி கூட அவசியமில்லை. இலையில் நாலு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து கொள்கிறேன். கருவேப்பிலையில் நல்ல 'கால்ஷியம்' இருக்கிறது. கொஞ்சம் ரேடியம் கூட இருப்பதாகச் சொல்லுகிறார்கள். எலுமிச்சம் பழத்தில் வைட்டமின் 'ஸி' நிறைய இருக்கிறது. பெருங்காயம் ஜீரணத்துக்கு நல்லது. இப்படி வேக வைக்காமல் பச்சையாகச் சாப்பிடுவதால் ஒருவித சத்தும் வீணாவதில்லை. ஒரு தக்காளிப் பழத்தை நறுக்கி, சர்க்கரை போட்டு வைத்து விட்டால், இன்றைய ஆகாரம், முதல் தரமான 'பாலன்ஸ்ட் டையட்' ஆக இருக்கும்" என்பார். இவ்வளவு விவரமாகச் சொன்னால் தான் அவருக்குத் திருப்தி.

"கல்பகம்! இன்று ரஸம் எப்படிப் பண்ணினாய்? பெருங்காயத்தைக் கரைத்து விட்டாயா? அல்லது நெய்யில் பொரித்துப் பொடி பண்ணிப் போட்டாயா?" என்று கேட்பார். என் மாமியார் தோளில் இடித்துக் கொண்டு, "நெய்யிலே பெருங்காயமும், அப்பளமும் பொரிக்கிறதுக்கு இன்னும் இரண்டு பிள்ளை சம்பாதிக்கணும்" என்று என் காதில் மாத்திரம் விழும்படி சொல்லுவார். அவருக்குப் பொரித்துப் போட்டால்தான் பிடிக்கும். அதனால் "நான் பொரித்துத்தான் மாமா போட்டேன்" என்று பதில் சொல்லி விடுவேன்.

* * *

இன்று காலையில் அவர் இருந்த அறைக்குப் போனேன். ஆம்! இருந்த என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவரைக் காலதேவன் அழைத்துக் கொண்டு போய் முப்பது தினங்கள் ஆகிவிட்டன. அறைக்குள் நுழைந்ததும் என்னையறியாமல் கண்ணீர் பொங்கி வந்தது. அவருடைய பகவத்கீதை, பாரதம், ராமாயணம், ஆங்கிலக் கவிதைப் புத்தகங்கள், தமிழ்க் கவிதைப் புத்தகங்கள் எல்லாம் அலமாரியில் அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. எத்தனையோ புத்தகங்களுக்கு நான் அட்டை போட்டு வைத்திருக்கிறேன். பல வருஷங்களாக அவர் தம் புத்தகங்களைப் புத்தம் புதிதாக வைத்துக் கொண்டிருந்தார். அவர் இருந்த போது அருமை தெரிய வில்லை. இனிமேல் யார் அவ்வளவு சிரத்தையோடு என்னை, 'பகவத் கீதை' 'தமிழ்ப் பாடல்கள்' முதலியவற்றைப் படிக்கச் சொல்லிக் கேட்கப் போகிறார்கள்? யார் இனிமேல் நான் சமைப்பதை ருசித்துச் சாப்பிட்டு ஆனந்தப் படப் போகிறார்கள். என் கணவரும், மைத்துனரும் எதைப் போட்டாலும் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டு விட்டுப் பரக்கப் பரக்க ஆபீஸுக்குப் போய் விடுவார்கள். என்ன இருந்தாலும் மாமனாரைப்போல் அவர்களுக்கு நான் எப்படிச் செய்தேன் என்று தெரிந்து கொள்வதில் சிறிதேனும் ஆர்வம் இருக்குமா?


அவர் அடிக்கொருதடவை "கல்பகம்" என்று அன்போடு அழைப்பதை எங்கே நான் கேட்கப் போகிறேன்? ஒவ்வொரு சிறிய காரியத்தையும் கவனித்து. ரஸித்துப் பாராட்டும் பண்பை இனி எங்கே காணப் போகிறேன்? கமலாவும் நானும் ஏதேனும் கதைகளைப் பற்றியோ, குழந்தைகளைப் பற்றியோ, உறவினர்களைப் பற்றியோ பேசுவோம். என் கணவருக்கு என்னோடு நின்று நாலு வார்த்தைகள் பேச நேரம் கிடையாது. கோபால், சீனு, லக்ஷ்மி மூவரும் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் யாரேனும் மாமனாருடைய ஸ்தானத்தை என் உள்ளத்தில் அடைய முடியுமா? அவர் எத்தனை அருமையான விஷயங்களை எனக்குச் சொல்லியிருக்கிறார். அத்தகைய அன்பு இனி எங்கே கிடைக்கப் போகிறது?

"என்ன இருந்தாலும் நீ கெட்டிக்காரி தான். சங்கரனைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நீ நன்றாகக் கவனித்துக் கொள்வாய். கமலாவும் நல்ல பெண்தான். நீங்கள் எல்லோரும் பகவான் கிருபையினாலே சௌக்கியமாக இருக்க வேண்டும்" என்று வாழ்த்திக் கொண்டே இருப்பாரே. என்னிடம் அவர் காட்டிய பரிவையும், அன்பையும் மறக்க முடியுமா? அவர் இருந்த போது உபத்திரவமாக இருந்த அன்பு, இப்போது இணையில்லாத அன்பாகத் தோன்றுகிறது. மனித உள்ளத்தின் ஆழத்தை யார் அறிவார்? அவர் உட்காரும் சாய்வு நாற்காலி வெறிச்சென்று இருந்தது. அவர் இல்லாத அறையும் வெறிச் சென்று இருந்தது. அதைப்போலவே என் உள்ளமும் வெறிச் சென்று இருந்தது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras


நாள் முழுவதும்

காலை வேளையில்



புத்துணர்ச்சி

பிற்பகலில்



அளிக்க...

இரவில்





குளுமையான நறுமணம் கொண்ட

ஹிமாலயா புக்கெ பௌடர்களை உபயோகியுங்கள்

இரண்டு நேர்த்தியான அழகிய பௌடர்கள்



ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் சருமத்தைப் பாதுகாக்கிறது.

ஜோசனிக் கம். லிட்., க்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

HBP. 8-X30 TM

REGD. NO. M. 4392

Registered as a newspaper in Ceylon

